
بسم الله الرحمن الرحيم

# الاسلام





| மாலை 1 | இஸ்லாம் | முத்து 2 |
|---|---|---|
| ரபீஉல்அவ்வல் ௴ 1346 ஹிஜ்ரி | **THE ISLAM** | ஆகஸ்டு ௴ 1927 ௵ |



சித்திர சகிதமான ஒரு மாதாந்திர சஞ்சிகை.

பிரதி ஆங்கில மாதம் கடைசி தேதி பிரசுரமாகும்.


ஆசிரியர்,

மௌ. ஆ. அபுல்ஹுதா

EDITOR:

M. A. ABUL-HUDHA.


முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது.

—

சமூக முன்னேற்றத்தில் உழைப்பவர்களுக்கு அத்தியாவசியமானது.

# விஷய அட்டவணை

விஷயம்.

1. பத்திராதிபரின் குறிப்புகள் ....
2. நபி பிரானிடம் ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் பக்தி.
ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸன், ஆரணி.
3. முஸ்லிம்களின் முற்கால சரிதை ....
"ஹிஸ்டாரிகஸ்" எழுதியது.
4. "இஸ்லாம்" என்பதன் பொருள் .... 97
மௌலவி முஹம்மத் ஹஸன் சாஹிப்.
5. தமிழரும் உருவ வழிபாடும் .... 101
ஸ்ரீ பு. செல்வராஜன்.
6. வியாபாரத்தின் மேன்மை .... 107
டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு.
7. கிறிஸ்து மதத்தின் அவசியம் யாது? .... 111
மௌ. ஆ. அபுல்ஹஸா.
8. ஆப்கானிஸ்தானத்தில் ஆட்சிமுறை .... 122
9. தர்மம் .... .... .... 13[illegible]
மௌ. ஆ. அபுல்ஹஸா.
10. கல்வி .... .... .... 136
மௌ. ஆ. அபுல்ஹஸா.
11. இந்தியாவில் முஸ்லிம்களின் நிலைமை .... 140
ஸ்ரீ வைகுண்டம் ஜனாப் வ. மி. ஷம்சுத்தீன் சாஹிப்.
12. முஸ்லிம்கள் சிவாஜி மஹாராஜாவைப் பின்பற்றலாமா? 147
கான்பகதூர் அல்ஹாஜ் மௌலானா மௌலவி ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப்.
13. ஜக்லுல் பாஷாவின் ஜீவிய சரித்திரம் .... 149
14. கரும்பு சாகுபடியை அபிவிருத்தி செய்வதெப்படி? 154
மிஸ்டர் ஏ. பி. ஸி.
15. வருக வருக இஸ்லாமே வருக .... 156
ஒரு முஸ்லிம் நேசன்.
16. முஸ்லிம்களும் நெசவுத் தொழிலும் .... 159
மிஸ்டர் ஏ. பி. ஸி.
17. பொழுது போக்கு .... .... 91,96

# எகிப்தின்

# முடிசூடா மன்னர்

சுய நலம்
சற்றும்
அறியாத
சுதந்தர
வீர
சிங்கம்



நாடு நலம்
பெறுவதே
தன் நல
மெனக்
கருதிய
தியாகி.

ஜக்லுல் பாஷா ஸஆத்.

ஜக்லுல் பாஷா ஸஆத் ஒருவித வைஸூரி நோயால் பீடிக்கப்பட்டு சிலநாள் நோய்மிகக் கோமையாக இருந்து ஆகஸ்டு மாதம் 24-ந்தேதி புதன்கிழமை காலஞ் சென்றார்.

بسم الله الرحمن الرحيم

# الاسلام


| மாலை 1 | இஸ்லாம் | முத்து 2 |
|---|---|---|
| 1346 ஹிஜ்ரி ரபீஉல்அவ்வல்மீ | | 1927ஞு ஆகஸ்டு மாதம் |


திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளியனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

"சீரா புராணம்"

ஔவைபிராட்டி முதலியவர்போன்ற தமிழரசிகளை ஈன்றெடுத்த இத்தமிழ்த்தாயின் தற்கால புதல்விகள் தங்களது தாய்ப்பாஷையாகிய தமிழ்பற்றற்று நிற்கும் குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டுத் தமிழகத்தின் கண் புனிதமாந்தமிழ் மொழிக்கு அரசியெனக் கூறத் தகுந்தவர்களும், "காந்திபுராணம்" "திருவொற்றி யூர் ஸ்தலபுராணம்" போன்ற அரிய நூல்களின் ஆசிரி யரும், தமது சரீர சுகவீனம் போன்ற இன்னல்களை எண்ணாது தேச சமுதாய சேவையில் ஈடுபட்டுழைத்து வருகின்ற சிறந்த தேசபக்தையுமாகிய ஸ்ரீமதி - பண் டிதை அசலாம்பிகை அம்மையாரவர்களால் இயற் றப்பட்ட,

## உரிமை யுரை

"இனத்தோ ரறிவு வளர்ந் திடவும்,
இணைதீர்தேச நலம் பெறவும்,
நினைந்தே இஸ்லாம் எனும் பெயரால்
நிறுவு மாத வெளியீட்டை
நனித்தே யெவரும் பரிவி னேடு
நோக்கி யுணர்தல் கடனாகும்
மனத்தே மாசிலா சிரியர் வாய்ந்த
முயற்சி வாழ் வுறவே."

# பத்திராதிபரின் குறிப்புகள்

இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 17, 18 தேதிகளில் திரிச்சிராப்

**மஜ்லிஸுல் உலமா மகா நாடு.**

பள்ளியில் மௌலானா மௌலவி அல்ஹாஜ் சையத்ஸுலைமான்நத்வி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றது. இம்மகாநாட்டிற்கு தமிழ் நாட்டு முஸ்லிம்கள் ஏராளமாகச் சென்று மகா நாட்டை வெற்றிபெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவோமாயின் கொல்லத்தெருவிற்கு ஊசி விற்கச்சென்றதற் கொப்பாகவும், தகப்பனரின் பெருமையையும், புகழையும் பிள்ளையே பறைபடித்துக் கொண்டு வெளிச்சென்ற தற்கொப்பாகவும் கருதப்படும்.

மஜ்லிஸுல் உலமாசபை 1918-ல் திரிச்சிராப்பள்ளியில் ஸ்தாபிக்கப்பட்டது முதற்கொண்டு தென்னாட்டு முஸ்லிம்களுக்கு அச்சபை செய்து வரும் ஊழியம் முஸ்லிம் சகோதரர்கள் நன்கறிவார்கள். மௌலா இஸ்லாம்களுக்குப் போதிய ஆதரவு கொடுத்து ஈமான், இஸ்லாம் என்பது இன்னதெனபோதித்து இஸ்லாத்தில் அவர்கள் மனது வேரூன்றி உறுதிகொள்ளுவதற்கும், அநாதைக் குழந்தைகளைக்கல்வி போதித்தும் தொழில்ஒன்றைக்கற்பித்து நல்வழியில் ஜீவனோபாயம் தேடிவாழுவதற்கும், கிராமங்களுக்கும் வெளியிடங்களுக்கும் வாயிஜீன்களை (மார்க்கப்பிரசாரகர்களை) அனுப்பி பாமர முஸ்லிம்களுக்கும் இதரர்களுக்கும் மார்க்க விஷயங்களைப் போதித்து வருவதற்கும் மஜ்லிஸுல் உலமாசபை ஏற்பாடு செய்து வந்திருப்பதுடன், சபை ஸ்தாபனமானது முதற் கொண்டு மார்க்க சம்பந்தமான பத்வாக்களை எத்தனையோ வெளியிட்டும் தென்னாட்டிற்கு இச்சபையானது எவ்வளவோ அரிய ஊழியம் செய்து வந்திருக்கின்றது. இச்சபையின் ஊழியத்தை நேரில் கண்டவர்களும், சபையின் ஊழியத்தால் பயன் அடைந்தவர்களுமாகிய தென்னாட்டு முஸ்லிம்களுக்கு இச்சபையின் பெருமையைக் கூறி மகாநாட்டிற்குச் செல்லும்படியாக நேற்றுதித்த யாம் கேட்டுக் கொள்ளுவது கொல்லத்தெருவிற்கு ஊசி விற்கச்சென்றதாகுமே யொழிய வேறல்ல.

இம்மஜ்லிஸ் சபையானது தன்னாலான ஊழியத்தைச் செய்து வந்திருக்கிறதெனினும் இச்சபை தன்னுடைய நோக்கங்கள் பூரா

வையும் பூர்த்தி செய்துவிட்டதென்றாவது அல்லது தென்னாட்டு முஸ்லிம்களுக்குத் தற்சமயம் தேவையாயுள்ளவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்துவிட்டதென்றாவது சொல்லிவிடமுடியாது. இதற்கு முக்கிய காரணங்கள் இரண்டுள: (1) மஜ்லிஸுல் உலமாசபை ஸ்தாபிக்கப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் கிலாபத் இயக்க சம்பந்தமான கிளர்ச்சியிலும், ஒத்துழையாமை இயக்க சம்பந்தமான கிளர்ச்சியிலும் முஸ்லிம் தலைவர்களும் பொதுஜனங்களும் தங்களுடைய ஊக்கத்தையும் கவனத்தையும் செலுத்த ஆரம்பித்தார்கள். கிலாபத் பிரசினையொன்றே கவனிக்கப்படவேண்டிய பிரசினையென்றும் அப்பிரசினை தீரும்வரை இதரப் பிரசினைகளைக் கவனித்தல் கூடாதென்றும் முஸ்லிம் தலைவர்கள் அச்சமயம் கூறிவந்ததுமன்றி அமுலிலும் அப்படியே செய்து காட்டி கிலாபத் இயக்கங்கள் தவிர இதர இயக்கங்களைக் கவனிக்காமலும் ஆதரவளிக்காமலுமிருந்து வந்தார்கள். தலைவர்களே இப்படிச்செய்யின், பொது ஜனங்களின் ஊக்கத்தையும் ஆதரவையும் எதிர்பார்ப்பதற் கில்லாமற் போய்விட்டது. இளங் குழவிக்கு எவ்வளவு ஆதரவும் பாதுகாப்பும் இருக்கவேண்டுமோ அவ்வளவு ஆதரவும் பாதுகாப்பும் மஜ்லிஸுல் உலமா சபையாகிய குழவிக்கு அது பிறந்தகாலத்தில் கொடுக்கப்படவில்லை. (2) வயிற்றுப் பிழைப்புக்காக மட்டுமின்றி பொருள் சம்பாதிக்கவும் நோக்கங் கொண்டு இதர மதஸ்தினர் சிற்சிலர் இப்பொழுது இஸ்லாத்தில் சேர்ந்து விடுவதாகக் கூறிக்கொண்டு, முஸ்லிம்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்தும் சுகங்கள் தேடியும் திரிகின்றனர். இக்கோஷ்டியைச் சேர்ந்த சிற் சிலர் வெளியூர்களுக்குச் சென்று தாங்கள் நௌமுஸ்லிம்களென்றும் தாங்கள் இஸ்லாமிய ஏவல் விலக்கல்களையும் மார்க்கக் கட்டளைகளையும் மார்க்கக் கல்வியையும் கற்க விரும்புவதாகவும், இன்ன ஊருக்குச்சென்று கல்வி கற்க புறப்பட்டிருப்பதாகவும், ரயில் செலவுக்கும், துணிவகையராவுக்கும் உதவி செய்ய வேண்டுமென்றும் கூறி பொருள் கேட்கும்போது திரிச்சி மஜிலிஸுல் உலமாவுக்குச் செல்லும்படியாக அவ்வூரார் கூறுவார்களாயின், தாம் அங்கு இருந்ததாகவும், நிர்வாகிகள் செவ்வனே கவனிப்பதில்லை என்றும் பற்பலவிதமாக மஜ்லிஸுல் உலமா சபையைத் தூற்றித் தமக்கு அங்கு கல்விகற்கப்போதிய உதவி கிடைக்காததாலேயே வெளியூர்களுக்குச்செல்ல நாடியிருப்பதாகவும் பொய்கள்கூறி பணஉதவி பெற்று அடுத்த ஊருக்குப்போவது வழக்கமாக இருந்து வருகின்றது. (இதைக்குறித்து மற்றொருசமயம் விரிவாக எழுத எண்ணம், இன்ஷா அல்லாஹ்) பாமர ஜனங்கள் இப்போக்கிரிகளின் வார்த்

தைகளை நம்பி உண்மையை தீரவிசாரியாமல் மஜ்லிஸ் சபை மீது அவநம்பிக்கையும், அசூயையும் கொள்ள ஆரம்பித்தனர். இவ்விஷயத்தை யொட்டி, "ஸைபுல் இஸ்லாம்," பத்திரிகை 20-7-27ல் எழுதியிருப்பது நேயர்கள் அவசியம் கவனிக்க வேண்டிய விஷயமாதலால் அதைக் கீழே பிரசுரிக்கிறோம். "பொது ஸ்தாபனங்கள் பல ஆரம்பத்தில் வெகு விமரிசையாக நடைபெறுவதும் இடையில் பல இடையூறுகள் ஏற்பட்டு சற்று சோர்வடைவதும் பின்னர் சில கனவான்களின் விடாமுயற்சியால் அவைகள் புத்துயிர் பெற்று முன்போல் விமரிசையாக நடைபெறுவதும் சகஜமே. அத்தன்மை போலவே மஜ்லிஸுல் உலமா சபையும், தஞ்சாவூர், ஈரோடு, கான்பரன்சுகள் நடைபெற்ற காலங்களில் அம்மஜ்லிசானது உன்னத நிலைமையிலிருந்து வந்ததென்பதையும் அப்பொழுது தென் இந்தியா முஸ்லிம் சமூகத்திற்கு அரும்பெரும் காரியங்களை அது செய்துவந்ததென்பதையும் நேயர்கள் அறியாமலில்லை. ஆனால் இடையில் சற்று சோர்வடைந்திருக்கிறதென்பதை நாம் மறுக்கமுடியவில்லையென்றாலும் அதற்கும் தக்ககாரணமில்லாமலில்லை யென்பது நமது துணிபு. இவ்வாறு சோர்வு அடைந்துள்ள ஸ்தாபனங்களைப் பழைய உன்னத நிலைமைக்குக் கொண்டுவர ஜனங்கள் ஆதரவளிக்கவேண்டியது அத்தியாவசியமென்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். அங்ஙனமிருக்க பல கனவான்கள் மஜ்லிசின்மீது ஆதாரமற்ற வீண் குறைகளைக் கூறிக்கொண்டு அதற்கு ஆதரவளிக்க முன்வராமலிருப்பதுடன் ஆதரவளிப்பவர்களின் மனம் சோர்வடையும்படி தூற்றி வருவதைக்கண்டு நாம் வருந்துகிறோம். அவர்கள் அவ்வாறு குறை கூறுவதற்கு யாதாவது தக்க ஆதாரங்கள் இருக்கின்றனவாவென கவனிக்கில் இஸ்லாமதத்தைத் தழுவுவதாகப் பாசாங்குசெய்து வயிறு வளர்க்கக்கருதும் போலி மௌலா இஸ்லாம் பலர் மஜ்லிசில் கட்டுப்பட்டு இருக்கவும் கல்விகற்கவும் பிரியப்படாமல் பலவிடங்களுக்குச் சென்று பல தடவை இஸ்லாத்தில் சேர்ந்து ஆங்காங்கு கிடைக்கும் வருமானங்களை அடையவிரும்பி மஜ்லிசைவிட்டு வெளியில் கிளம்பி வருகிறவர்கள் கூறும் வீண்குறைகளை ஆதாரமாகக் கொண்டு பலர் குறைகளைக் கூறுகின்றார்கள் எனத் தெரிகிறது. அவ்வாறு மஜ்லிசை விட்டுக் கிளம்பும் போலிமௌலா இஸ்லாம்கள் மஜ்லிசின்மீது குறை கூறாதவரை அவர்களின் நோக்கம் கைகூடாதாகையால், அவர்கள் யாதாவது ஒரு குறையைக்கூற நேரிடுகிறதென்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும். உண்மையாகவே இஸ்லாத்தைத் தழுவியவர்கள் நல்லவிதமாக மஜ்லிசில் இருந்து ஓதிவருகிறார்கள். நாம் மேலே

குறிப்பிட்டுள்ள போலிமௌலா இஸ்லாம்களில் ஒருவன், "நீங்கள் சாப்பாடுபோடுவது மூன்று நேரம். இதற்காக என்னை ஐந்து நேரம் முட்டிபோடச் சொல்லுகிறீர்கள் (தொழுகச் சொல்லுகிறீர்கள்) என்றும் இது அநியாய உத்திர" வென்றும் இதற்கு கீழ்ப்படிந்து நடக்க என்னால்முடியாதென்றும் கூறி மஜ்லிசை விட்டுப்போனவனை நாம் நேரில்கண்டிருக்கின்றோம். எனவே, இவ்விதப்போலிகள் சொல்லும் வீண்குறைகளை நம்பலாகாதென்பதை நேயர்கள் அறியாமலில்லை. நமக்கும் இவ்விதப் போலிகள் தூற்றுவதைக் கேட்டு ஒருவித சந்தேகம் ஏற்பட்ட தெனினும் நேரில் சென்று மஜ்லிசின் ஒழுங்கான நிர்வாகத்தையும் நடவடிக்கைகளையும் பார்க்க நமக்கு ஏற்பட்டிருந்த சந்தேகம் நீங்கி திருப்தியைக் கொடுத்து அவ்விஷயத்தை நாம் அப்பொழுதே ஸைபுல் இஸ்லாம் வாயிலாக வெளியிட்டிருக்கின்றோம். ஆகையால் மஜ்லிசு சரியாகவேலை செய்யவில்லை என்ற சந்தேகம் எவர்களுக்கேனும் ஏற்படின் அவர்கள் நேரில் சென்று கண் கூடாகப் பார்த்து, அல்லது, மஜ்லிசின் பொறுப்பேற்ற உத்தியோகஸ்தர்களுக்கு எழுதிக் கேட்டாவது உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமாக நேயர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றோம்."

நமது அனுபவமும் மேலே கூறப்பட்டதை பலப்படுத்துகிறது. ஏனெனில், அஃஞான அந்தகாரத்திலாழ்ந்து விக்கிரக வணக்கத்திலீடுபட்டபாம் அது யுக்தி விருத்தமெனக்கண்ட 11-வது வயது முதல் 30-வது வயது வரையிலும் சுமார் 20-வருடகாலம் உண்மையை அறியவேண்டிப்பற்பல மதங்களை ஆராய்ந்தும் பிற சில மதங்களை அனுஷ்டித்தும் உண்மையைக் காணமுடியாமல் தவித்து, இந்து தேசம் முழுதும் சுற்றித்திரிந்து ஹிமயகிரி முதலிய மலைகளில் தங்கியும், கடைசியாக நொறுங்குற்றிருந்த காலை எல்லாம் வல்ல இறைவனருளால் எமதில்லாள் மூலம் யாம் இஸ்லாத்தைத் தழுவவேண்டிய காலை எங்களை இஸ்லாத்தில் சேர்ப்பதற்கு பெரிய பெரிய மதரஸாக்கள், பிரபுக்கள் முதலியவை பயந்த தருவாயில், நம்கனம் மஜ்லிஸுல் உலமாதான் தைரியத்துடன் முன் வந்து எங்களைச் சேர்த்து திருக்கலிமா ஓதித்தந்து சுமார் 1½ வருடக்காலம் ஆதரித்து கல்விகற்க வைத்து இப்பொழுது உள்ள நிலைமைக்குக் கொண்டு வந்ததே யன்றி வேறெந்த ஸ்தாபனமுமல்ல. எனவே மஜ்லிசுல் உலமாவால் உண்மையை நாடி வருகின்ற மௌலா இஸ்லாம் பயனடையாமலில்லை என்பது உண்மையே. ஆதலின் 2 வது காரணத்தை யொட்டி மஜ்லிசை ஆதரிக்கமனம் முனைந்துள்ள பெரியோர்கள் உண்மையை ஆராய்ந்தறியா தோர்களென்று மிகவருத்தத்துடன் கூறவிரும்புகிறோம். முஸ்லிம்களனைவ

ரும் மகாநாட்டிற்குச் சென்று மகாநாடு சிறப்பாக நடைபெற உதவி செய்யக் கோருகிறோம்.

**மனமார்ந்த வந்தனம்.**

நமது சஞ்சிகையை ஆதரித்தும் போற்றியும் கடிதம் எழுதி ஊக்க மூட்டி வரும் எல்லா நண்பர்களுக்கும், நமது சஞ்சிகைக்கு மதிப்புரை எழுதி உதவி செய்து வரும் சகோதரப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் நமது புதுப் பத்திரிகைக்கு சந்தாதார்களை சேர்த்துக்கொடுப்பதில் ஊக்க மெடுத்து வேலை செய்து வரும் சகோதரர்களுக்கும் அவகாசக் குறை வின் காரணமாக தனித்தனியே கடிதங்கள் எழுத முடியாமையால் இதன் மூலமாக நமது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

நமது சஞ்சிகையில இம்மாதம் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கும் "ஜக்லுல் பாஷா" படத்தின் பிளாக்கும் "தமிழ் நாடு" கொடுத் துதவியதே. இவைகளெல்லா வற்றிற்கும் "தமிழ நாடு" ஆசிரிய ருக்கு நாம் அதிகம் கடமைப்பட்டிருக்கிறோ மென்பதையும் தெரிவித் துக் கொள்ள விரும்புகின்றோம்.

**சஞ்சிகை பிரசுரதேதி.**

சஞ்சிகை பிரதி அரபி மாதம் 25-ந்தேதி பிரசுரிப்பதாக இருந் தது. அரபிமாதத்தேதி ஆங்கிலமாதத்தேதி யோடு மாறி மாறி வருவதால் சஞ்சிகை போஸ்டு செய்யப்படும் ஆபீஸிற்கு குறிப்பிட்ட தேதி தெரிவிக்க வேண்டிய தென்று தபால் இலாக்கா அதிகாரிகள் கேட்டுக்கொண்ட தன் மேல் சஞ்சிகையை இனி ஆங்கிலமாதம் கடைசிதினத் தன்று பிரசுரஞ் செய்ய நிச்சயஞ் செய்துள்ளோம்.

**நன் கொடையாளர் ஜாபிதா.**

நன்கொடை கொடுத்து நமக்கு உதவிபுரிந்து வரும் சகோதரர் களின் ஜாபிதாவை இம்மாத சஞ்சிகையில் பிரசுரிப்பதாக சென்ற சஞ்சிகையில் எழுதி யிருந்தோம். இடமில்லாமையால் இம்மாத சஞ்சிகையில் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். இன்ஷா அல்லாஹ் அடுத்தமாத சஞ்சிகையில் பிரசுரிக்க எண்ணியிருக்கிறோம்.

**வியாச நேயர்களுக்கு வேண்டுகோள்.**

வியாசமெழுதும் சகோதரர்களை காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக மையால் எழுதியனுப்பவேண்டு மாயும், பிறமதத்துவேஷத்தையேனும், சமூக சச்சரவுகளையேனும், வீண்விவாதத்தையேனும் உண்டாக்கக்கூடிய ப்தங்களை உபயோகிக்க வேண்டாமென்றும், ஒரு வியாசம், நான்கு பக்கங்களுக் கதிகமாக இல்லாமல் "சுருங்கச்சொல்லி விளங்கவைத்

தல்'' என்னும் முறையைக் கைக்கொண்டு விபாசங்கள் எழுதியனுப்பும் படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மததூஷணையைத்தடுக்கச்சட்டம்.

"ராஜபால் வழக்கில் ஜஸ்டிஸ் டூலிப்சிங்கு செய்த தீர்ப்பின் காரணமாக மதத்தலைவர்களை தூஷணை செய்பவர்களைத் தண்டிக்க தற்காலம் இருக்கும் சட்டம் இடமில்லையென ஏற்படின் வேறுசட்டம் புதிதாக ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று நாடு முழுவதும் செய்யப்பட்ட கிளர்ச்சியின் பயனாக இந்தியா கவர்ன்மெண்டு உள்நாட்டு இலாக்காதார் சில தினங்கள் முன் பின் வரும் அறிக்கையை வெளியிட்டார்கள்.

"ஒரு மதத்தாரை மற்றொரு மதத்தார் தூஷித்து எழுதியும், பேசியும் வருவதாலேயே இந்தியாவில் அதிகக்குழப்பங்களும் சச்சரவுகளும் ஏற்பட்டு வருகின்றன. எனவே தற்சமயமுள்ள சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியமா வென்பதைப்பற்றி சர்க்கார் யோசித்து வருகின்றனர். அதிகமாக தூஷித்து எழுதுகிறவர்களை மதவிஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இ. பி. கோ. 15-வது அத்தியாயம் அதைக் கண்டிக்கக் கூடியதாயில்லை. இத்தகைய தூஷணைகளை எழுதுபவர்களை தற்சமயம் இ. பி. கோ. 153 A-வது பிரிவுக்படியே குற்றஞ் சாட்டி விசாரித்து வருகின்றனர். அப்பிரிவு முக்கியமாக வகுப்புத் துவேஷத்தையும் கலகத்தையும் விளைக்கக்கூடியவர்களுக்கென்றே அமைக்கப்பட்டிருப்பதால் மத நிந்தனை செய்வோரை அடக்குவதற்குப் போதுமானதாயில்லை. ஒருவன் மத நிந்தனை செய்வானாகில் அதனால் வகுப்புப் பகைமை வளர்வதாயிருந்தாலும் இல்லாவிடினும் அவனை தண்டிக்கக் கூடிய தனிச் சட்டமொன்றிருக்க வேண்டியது அவசியமென்றே தோன்றுகிறது. ஆகையால் மத நிந்தனை செய்பவர்களைத் தண்டிக்கக்கூடிய சட்டமொன்றை இ. பி. கோ. 15-வது அத்தியாயத்தில் சேர்க்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி இந்தியா சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டும் மென்று முடிவு செய்திருக்கின்றனர். கி. பு. கோ. சட்டத்திலும் சில திருத்தங்கள் கொண்டுவரப் படும்.''

மததூஷணையைத் தடுப்பதற்காக சட்டத்தில் இடமிருக்கும்படியாக இந்தியன் பினல்கோடு சட்டத்தையும், கிரிமினல் புரொசிஜர் கோடு சட்டத்தையும் மாற்ற மிஸ்டர் கிரேர் ஒரு மசோதாவை இந்தியா சட்டசபையில் இம்மாதம் 24உயில், கொண்டுவந்தார். இனி விவாதத்தின்பின் மசோதா அங்கீகாரஞ் செய்யப்பட்டு சட்டமாக்கப்படும்.

இம்முக்கியமான வழக்கின் தீர்ப்பை முஸ்லிம் உலகம் ஆவலாக எதிர்பார்த்திருந்தது. இவ்வழக்கில் எதிரிகள் ஸ்ரீ. கியான் சந்திருக்கும் ஸ்ரீ. தேவிசரன் சர்மாவுக்கும் நீதிபதிகள் 153 ஏ. பிரிவுப்படி 6 மாதமும் ஒரு வருஷமும் கடுங்காவல் விதித்தார்கள். ஸ்ரீ கியான் சந்திருக்கு 250 ரூபாய் அபராதம் அல்லது 3 மாதங் காவலும் ஸ்ரீ. தேவிசரனுக்கு 500 ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாத தண்டனையும் விதிக்கப்பட்டது. இவ்வழக்கில் ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் செய்த தீர்ப்பின் முழு விபரத்தையும் இச்சஞ்சிகையில் இடமில்லாமையால் பிரசுரிக்கவில்லை. இன்ஷா அல்லாஹ் அடுத்த மாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

**ரிசால வர்த்தமான் வழக்கு**

* * * *

ஹிந்து தலைவர்களைக் கொலை செய்ய முஸ்லிம்களின் சதியாலோசனைக் கூட்டமொன்று இருந்து வருவதாக சில ஹிந்துத் தலைவர்களும் ஹிந்து பத்திரிகைகளும்கூறி வருகிறார்கள். டெல்லியில் பிரசுரமாகும் "தேஜ்" என்ற சுதேச பாஷைப் பத்திரிகையொன்றிற்கு டில்லி போலீஸ் சூபிரண்டன்டெண்டு விடுத்திருக்கும் பின்வரும் அறிக்கையைக் கண்ட பின்னரும் ஹிந்துக்களும், ஹிந்துப் பத்திரிகைகளும் முஸ்லிம்கள்மீது வீண் பழிகளைச் சுமத்தாமலிருப்பார்களா?

**முஸ்லிம்கள்மீது வீண்பழி.**

"சமீபத்தில் வெளியான "தேஜ்" பத்திரிகை இதழொன்றில் நன்கு அமைக்கப்பட்ட ஒரு சதியாலோசனைக் கூட்டத்தின் வேலையினாலேயே சுவாமி சிரத்தாநந்தர் கொல்லப்பட்டிருக்கிறாரென்றும், அதைப்பற்றிய தஸ்தாவேஜுகளைப் போலீசாருக்கு அனுப்பியிருந்தும் சதியாலோசனைக்காரரை தண்டிக்க சர்க்கார் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவில்லையென்றும் குறை கூறப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ள தஸ்தாவேஜிகளிலிருந்து சுவாமி சிரத்தாநந்தர் கொல்லப்பட்டதிற்குச் சதியாலோசனைக் கூட்டமொன்றே காரணமென்று நினைப்பதற்கு எவ்வித காரணமுமில்லை. ஆகையால் பத்திரிகை கூறும் புகாருக்கு எவ்வித ஆதாரமுமேயில்லை. அப்பத்திரிகையில் வெளியான ஆதாரமற்ற செய்தியை மறுத்தெழுத வேண்டியது. என்னுடைய கடமையென்பதைக் குறித்தே நான் இக்கடிதத்தை எழுதலானேன். இதைத் தவிர கடிதப் போக்குவரத்திற்கு வேறுஎவ்வித காரணமுமில்லை. இது மாதிரி பொறுப்பற்ற தன்மையில் அலட்சியமாக பொய்ச் செய்திகளைப் பிரசுரிப்பது விஷமத்தனமான காரியமாவதோடு அதனல் தீமையே விளையும்."

ஸிம்லாவிலிருந்து மேமாதம் 30ந் தேதி கிடைத்த தந்தி யொன்று பின் வருமாறுக் கூறுகின்றது.

ஒற்றுமை மகாநாடு.

ஒற்றுமை மகாநாடு கூடி சுமார் மூன்று மணி நேரம் விவாதித்தபின் மகா நாட்டினர் இந்திய சட்டசபை மெம்பர்களுட்பட இரு வகுப்பையும் சேர்த்த பிரபல தலைவர்கள் அநேகர் கையொப்பமிட்டிருக்கும் விண்ணப்ப மொன்றை வெளியிட்டிருக்கின்றனர். அவ் விண்ணப்பத்தில் அவர்கள், இருவகுப்பைச் சேர்ந்தவர்களும் பொது அமைதிக்குப் பாதக மேற்படச் செய்யத் தக்க செய்கைகள் எதுவும் செய்யாதிருந்து தாங்கள் சமரஸமான முடிவுக்கு வர முயற்சிப்பதில் உதவி புரியும்படி எடுத்துக் காட்டி விண்ணப்பித்திருக்கின்றனர். தாங்கள் அவ்விரு வகுப்பைச் சேர்ந்த பொது ஜனங்களின் ஒத்துழைப்பினால் அவர்களுக்குள்ள வித்தியாசங்களனைத்தையும் ஒரேயடியாக ஒழித்து அபிப்பிராய பேதங்கள் எல்லாவற்றையும் சாந்தமாயும் நேர்மையாகவும் முடிவு செய்யத்தக்க வழியேற்படுத்த முயற்சித்து வருவதாயும் எடுத்துக் காட்டி யிருக்கின்றனர். அவ்விரு வகுப்புக்களுக்குமுள்ள வித்தியாசங்களும் அபிப்பிராய பேதங்களுமடங்கிய விவரப் பட்டியொன்றைத் தயாரித்து அதனைக் குறித்து செப்டம்பர் 7-ந் தேதி மகா நாட்டில் விவாதித்து ஆலோசிக்கப்படுமெனத் தெரிகின்றது.

---

க்ஷவரக் கத்தி ஒன்றை பூதக் கண்ணாடியில் பார்த்தால் பிரமிப்புண்டாகும். அதன் ஓரங்கள் நுட்பமான பற்கள் அமைந்ததாயிருக்கும். கத்தி செய்வோரும் அதன் ஓரப்பற்கள் வெட்டக் கூடியபடி ஒழுங்காக பற்கள் அமைந்திருக்கின்றனவா என்று பார்க்க பூதக்கண்ணாடியை உபயோகிப்பதுண்டு.

* * * *

கம்பியில்லாத் தந்தி மூலமாய் ஆட்களின் உருவங்களையும் மற்றப்படங்களையும் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அனுப்பமுடியும் என்று ஸ்ரீ தார்ன் பேக்கர் கூறுகிறார். ஏற்கனவே இவ்விதப்படங்கள் அமெரிக்காவிலிருந்து கம்பியில்லாத் தந்தியால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

* * * *

கழுகுகள் இருந்த இடத்திலிருந்து இருபதுகஜ தூரம் ஓடின பிறகுதான், ஆகாயத்தில் எழும்புவதற்கு சக்தி பெறுகின்றனவாம்.

# மாணவர் பகுதி

## நபிபிரானிடம் ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் பக்தி

ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாசன், ஆரணி.

அபூபக்கர் (ரலி) அவர்கள் குரைஷ் குலத்தின் ஒரு உயர்தர வம்சத்தில் உதித்தவரென்பதும், அவர் தாம் நபிகள் பிரான் (ஸல்) அவர்களுக்குப் பின் முதல் கலீபாவாகப்பொது மக்களால் ஏற்றுக்கொள்ளபட்டார் என்பதும், அவர் உண்மையை அதிகம் நேசித்துவந்தபடியால் அவருக்கு அபூபக்கர் ஸித்தீக்என்ற சிறப்புப்பெயரும்கிடைத்ததென்பதும் நமது நேயர்கள் அறிவார்கள். அராபியர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் குடியிலும் விக்கிரஹ ஆராதனையிலும் ஏனைய துர்க்குணங்களிலும் தலைசிறந்தவர்களாக விளங்கி வந்தபோதிலும், அபூபக்கர்மட்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பும் அத்தகைய தீயபழக்கங்களைக்கொண்டதில்லை. அவர் சாமர்த்தியமாகப் பேசுவதிலும், பிரசங்கம் செய்வதிலும், கவிகள் பாடுவதிலும் திறமை வாய்ந்தவர். அபூபக்கர் (ரலி) அவர்கள் நமது எம்பெருமானார்முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய பால்யதோழர். அவர் இஸ்லாத்தைத் தமது மதமாக அங்கீகரித்துக்கொண்ட பின்னர் தம் சுகபோகங்களையும் சம்பத்தையும் உதறித்தள்ளிவிட்டு இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காகப்பாடுபட்டுவந்தார். அவரவர் மனத்தையும் நன்கு ஆராய்ந்து பார்த்து அதற்கேற்றபடி இன்பதுன்பங்களை அளித்தருளும் ரஹ்மானும் ரஹீமுமாகிய இறைவனும் அபூபக்ரின் தியாக உணர்ச்சியை அறிந்து அதற்கேற்ற பயனை உடனே அருள் செய்வதில் சிறிதும் பின்வாங்கவில்லை. அவரே முஸ்லிம்களின் தலைவராகவும் முதல் கலீபாவாகவும் விளங்கினாரென்றால் அதைக்காட்டினும் இகத்தில் அவருக்குக் கிடைக்கக்கூடிய உயர் பதவிதானென்ன? இப்படிப்பட்ட மகானாகிய இவர் தமது ஞானகுருவினிடம் செலுத்திய பக்தியைப் பற்றிச்சிறிது விளக்குவோம்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் நபிகள் பிரானை (ஸல்) அதிகம் நேசித்ததால் அவர்களுடனேயே தம் காலத்தைக் கழிக்க ஆரம்பித்தார். அவர் நாம் முன்னமே கூறிய வண்ணம் குரைஷ்

குலத்தின் செல்வவான்களுள் ஒருவராக இருந்தமையால் தம்முடைய சொத்துக்களனைத்தையும் இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக உபயோகித்துக்கொள்ளும்படி நபிகள் பிரானிடம் கொடுத்துவிட்டார். ஆரம்பகாலத்தில் முஸ்லிம்களின் தொகை மிகக் குறைவாயிருந்த படியால், அவர்கள் இறைவனைப் பகிரங்கமாகத் தொழவும் முடியவில்லை. ஏனெனின், அவர்கள் முஸ்லிம்கள் என்று சொன்னால் குரைஷிகள் அவர்களை அடித்துத் துன்புறுத்த ஆரம்பித்தார்கள். ஆனால் இந்த அடியையும் உதையும் பொருட்படுத்தாமல் ஆண்டவனின் உண்மைக்காக அவைகளைப் பொறுத்துக்கொண்டார்கள். ஒருநாள் குரைஷிகள் கஃபாவில் உட்கார்ந்துகொண்டு புதிதாகத்தோன்றியதாக அவர்கள் நினைத்த மதத்தைப்பற்றி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். முஹம்மது நபிகள் (ஸல்) அவர்கள் ஒரே தெய்வத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்ததால் அவர்கள் நபிகள் நாயகத்தினிடம் கோபங்கொண்டார்கள். அச்சமயத்தில் ஆண்டவனின் திருத்தூதரான நபிகள் பிரானும் அக்கஃபாவுக்குள் நுழைந்தார்கள். அப்போதே கோபங்கொண்ட அந்தப்பாபிகளின் முன் அவர்களுடைய கோபத்துக்குக் காரணமாயிருந்த ஒருவர் தோன்றவே அவர்கள் அவரை நன்றாகத் தாக்கினார்கள். அப்போது அக்கொடுமையைத் தாங்கமாட்டாமல் நபிகள் நாயகம் மூர்ச்சையாயினர். இவ்விஷயத்தை யாரோ ஒருவர் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அறிவித்து விட்டார். அப்போது தமது எஜமானரும் ஞானகுருவுமான ரஸூல் நாயகமவர்களைக் காக்கவேண்டி இவரும் கஃபாவுக்கு ஓடினார். இவரது வருகையைக்கண்ட குரைஷிகள் ஆத்திரமடைந்து இவரையும் நன்றாகப் புடைத்தார்கள். அதனால் அவரது மண்டையும் உடைபட்டு தேகம் முழுதும் இரத்தம் வடிந்தது. அதையும் மலர்ந்த முகத்துடன் அபூபக்ர் (ரலி) அவர்கள் பொறுத்துக் கொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்கள் குரைஷிகளிடம் அனுபவிக்கவேண்டியிருந்த துன்பங்களை யெல்லாம் கண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை அபிஸ்ஸீனியாவுக்குச் சென்று அங்கே வசிக்கும்படி உத்தரவு கொடுத்தார்கள். அப்போது அவர்களுடன் அபூபக்ரும் போகவிரும்பியும் அவருக்கு இறுதி ரஸூல் அவர்களிடம் இருந்து வந்த பக்தியானது அவ்வாறு போக இடந்தரவில்லை. எனவே அவர் மக்காவிலேயே தங்கித்துன்பங்களையும் அனுபவிக்கத் தயாராயிருந்தார். குரைஷிகளின் கொடுமை மிதமிஞ்சிப்போகவே இறைவனின் உத்திரவுபடி மக்காவை விட்டு மதீனமா நகருக்குச் சென்று அங்கே

தங்குவதென்று தீர்மானித்தார்கள். எனவே ஒரு நாள் முஹம்மத் நபி ஸல் அவர்கள் தம்முடைய நம்பிக்கையான தோழராகிய அபூபக்ருடன் மதீனவுக்குப் புறப்பட்டார்கள். இவர்களிருவரும் இவ்வாறு தப்பிச்செல்வதை அறிந்த அந்தக் கொடுங்குரைஷிகள் அவர்களைப் பிடிக்கும் பொருட்டு ஆட்களை அனுப்பினர்கள். ஆனால் இவர்களிருவரும் அந்த ஆட்களின்கையில் அகப்படாமல் க்ஷேமமாக மதீனவந்து சேர்ந்தார்கள். இவர்கள் மட்டும் அந்த விரோதிகளின் வசம் சிக்கியிருந்தால் கட்டாயம் அவர்கள் இவர்களைக் கொன்றிருப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மதீனவாசிகள் முஸ்லிம்களை அன்புடன் வரவேற்று ஆதரித்தார்கள். முஸ்லிம்களுக்குத் தங்குவதற்கு வேண்டிய இல்லங்களையும், ஆகாராதிகளையும், உடைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். தங்களுடைய மதத்துக்காக மக்காவைத் துறந்து, மதீனவில் தமது வாழ்க்கையை நடத்தியவர்கள் முஹாஜிரீன்கள் அல்லது அடைக்கலம் புகுந்தோர் என்றும் அப்படிப்பட்ட மதாபிமானிகளை அன்புடன் ஆதரித்த மதீனவாசிகள் அன்ஸார்கள் அல்லது உபகாரிகள் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் சுமார் பன்னிரண்டாயிரம் ரூபாய்களுக்கு அதிபதியாயிருந்து வந்தார். ஏழை முஸ்லிம்களுக்கு உதவி புரிவதிலும் அடிமைகளை விலை கொடுத்து வாங்கி அவர்களை மீட்பதிலுமே அதிகமான திரவியத்தைச் செலவிட்டார். மேலும் இஸ்லாமிய ஊழியத்துக்காக வேண்டிய பணத்தை நபிகள் பிரானுக்கும் கொடுத்து உதவினர். குரைஷிகள் முஸ்லிம்களை ஆரம்பகாலத்தில் அடித்து உதைத்ததுடன் விடாமல் அவர்களுடைய வீடுவாசல்களையும் கைப்பற்றிக்கொண்டு நன்ருகக் காய்ந்த மணல் வெளிகளில் துரத்திவிடுவார்கள். சாதாரண மனிதர்களின் நிலைமையே இவ்வாறிருந்ததென்றல் அடிமைகளின் கதியைப்பற்றிக் கூறவேண்டுவதில்லையன்றோ? எஜமானர்கள் அடிமைகளுக்கு அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்களென்னும் ஒரே காரணத்துக்காக அன்ன ஆகாரமும் கொடாமல் வருத்தியதுடன் நன்ருகக் காய்ச்சிய கற்களை அவர்களின் முதுகின்மீது வைத்துக்சட்டிவிடுவார்கள். இவ்வளவு சொல்லொணுத்துயரங்களை அனுபவித்தும் அவர்கள் இஸ்லாத்தை விடவில்லை. ஆதலின் அப்படிப்பட்ட அந்தரங்க அபிமானிகளுக்கு உதவி அவசியம் வேண்டியதாயிற்று. எனவே அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது சொத்துக்களையெல்லாம் இத்தகைய அடிமைகளை மீட்பிப்பதிலேயே செலவிட்டார்கள். இப்படிப்பட்ட அடிமை

களில் பிலால் (ரலி) என்பவரும் ஒருவர். இவர் தமக்கு இஸ்லாத்தின்மீதுள்ள அளவிலா அபிமானத்தினுல் தமது எஜமானன் எவ்வளவு துன்புறுத்தியபோதிலும் அதையெல்லாம் பொறுமையுடன் சகித்துக்கொண்டு வந்தார். இறுதியில் ஒருநாள் அவருடைய எஜமானன் அவர் மார்பின்மீது அதிக கனமுள்ள பெரிய கல் ஒன்றை வைத்துவிட்டார். அப்போதும் அவர், "இறைவன் ஒருவனே, இறைவன் ஒருவனே" என்றுதான் கூவினுர்கள். இப்படிப்பட்ட முஸ்லிம் பக்தரை அடிமை வாழ்வினின்றும் விடுவிக்கவேண்டிய கடமை நபிகள் பிரானின் அன்பராகிய அபூபக்ரின்மீது பாய்ந்தது. ஆதலின் அவர் ஆயிரத்து இருநூறு ரூபாய்களைக்கொடுத்துப் பிலால் (ரலி) அவர்களை மீட்டார்கள். அதுமுதல் பிலால் (ரலி) அவர்கள் நபிகள் நாயகத்துக்குத் தொண்டுபுரிந்து அவருடன் இருப்பதிலேயே காலங்கழித்தார். அவர்தாம் முதன்முதல் இஸ்லாத்தின் முஅஜ்ஜினுக வந்தார். அது முதல் முஸ்லிம்கள் பிலால் (ரலி) அவர்களைக் கண்ணியத்துடன் கருத ஆரம்பித்தார்கள்.

ஒரு முறை ஸீரியாவுக்குச் சென்று யுத்தம் செய்யவேண்டுமென்று இறைவனுடைய தூதர் அவர்கள் விரும்பினுர்கள். ஆனுல் பணம் இல்லாமலிருந்தது. எனவே அவர்கள் தம் தோழர்களைப் பார்த்து ஆண்டவனது ஊழியத்துக்காக ஒவ்வொருவராலும் எவ்வளவு தொகை கொண்டுவர முடியுமோ அவ்வளவையும் கொண்டுவரும்படி கூறினுர்கள். உமர் (ரலி) அவர்கள் தமதில்லம் சென்று தம்முடைய ஆஸ்தியில் பாதியைக் கொண்டுவந்தார். அப்போது அவர், தாம் அபூபக்ர் (ரலி)யைக் காட்டிலும் அதிகமாகவே கொண்டுவந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருந்தார். யாவரும் வந்து கூடியதும் ரஸூல் நாயகம் அவர்கள் உமர் (ரலி)யைப் பார்தது, "நீர் உம் குடும்பத்துக்காக எவ்வளவு ஒதுக்கி வைத்திருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கவர், "ஆண்டவனது திருத்தூதருக்கு எவ்வளவு கொண்டு வந்திருக்கிறேனே அவ்வளவு வைத்திருக்கிறேன்" என்றுர். பிறகு அபூபக்ர் (ரலி)யைப் பார்த்து, "நீர் உமது குடும்பத்துக்காக என்ன ஒதுக்கி வைத்திருக்கிறீர்?" என்று வினவினுர்கள். அதற்கு அவர் மலர்ந்த முகத்துடன், "நான் குடும்பத்துக்கென்று ஆண்டவனையும் அவனது திருத்தூதரவர்களையுமே வைத்திருக்கிறேன்," என்று விடை பகர்ந்தார். (ஏனெனில் சகல சொத்துக்களையும் கொண்டுவந்துவிட்டார்.)

நேயர்காள்! உண்மையான பக்தியின் அளவைக் கண்டுகொண்டீர்களா? தமக்கென்று பிரத்யேகமாக ஒன்றை வைத்துக்கொள்வ

தாயின் அப்போதே வித்தியாசம் பாராட்டியதாகிவிடும். இருவரையும் ஒன்றுபட்டவராகவே பாவிக்கும்போது பிரத்யேகமாக ஒதுக்கி வைக்கவேண்டியதில்லையன்றோ? அபூபக்ர் (ரலி) அவர்கள் தமக்கென்றோ தம் குடும்பத்துக்கென்றோ ஒரு பைசாவும் வைத்துக் கொள்ளாமல் அவரும் அவரது குடும்பமும் நபிகள் பிரான் (ஸல்) அவர்களுடையதாகவே கருதினார்கள். அப்போதுதான் ஆன்மநேய ஒருமைப்பாடு என்பது ஏற்படும். பண்டைக்காலத்தில் இவ்வாறெல்லாம் முஸ்லிம் பெரியார்கள் இஸ்லாத்துக்காகவும் நபிகள்பிரான் (ஸல்) அவர்களுக்காகவும் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்து வந்தார்கள். இக்காலத்தில் அவ்வாறு தியாகம் செய்யக் கூடியவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அத்தகைய தியாகிகள் பெருகினால்தான் ஆரிய சமாஜிகள், நஸாராக்கள் போன்ற இஸ்லாத்தின் விரோதிகளை அடக்கமுடியும். இறைவன் தன் மதத்தைத் தானே காப்பாற்றிக்கொள்வான் என்று பேசிக் காலத்தைக் கழிப்பது பகற்கனவாகவே முடியும். ஆதலின் முஸ்லிம் சகோதரர்காள்! அபூபக்ர் (ரலி) அவர்களின் தியாக உணர்வை நீங்களும் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். இதன் ஆசிரியருடன் இஸ்லாமியப் பணியில் கலந்துழைக்க முன் வாருங்கள்! திண்ணை வேதாந்தம் வேண்டாம். அவர் பணி செய்ய வாரும் ஜகத்துளீரே என்று சகோதரர்களைக் கூவுகின்றார். ஒவ்வொருவரும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை மறவாதீர்கள்.

---

# முஸ்லிம்களின் முற்கால சரிதை

## அரேபியாவும் புராதன அராபியர்களும்

"ஹிஸ்டாரிகஸ்" எழுதியது.

முஸ்லிம்களின் முற்கால சரித்திரம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றதென்பதை சரித்திரம் வாசித்தவர்களனைவரும் அறிவார்கள். மூன்று பெரும் நாட்டினர்களையும், மூன்று பெரும் பாஷைகளையும் பற்றினதாக முஸ்லிம் சரித்திரம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அம்மூன்றும் எவையெனில் (1) அரபியர்கள் (2) பாரசீகர்கள் (3) துருக்கியர்கள். முஸ்லிம்களின்

முற்கால சரித்திரம் இம்மூன்று நாட்டினர்களுடைய சரித்திரமேயல்லாது வேறொன்றுமல்ல. இந்நாட்டினர்களுடைய வளர்ச்சியும் வீழ்ச்சியுமே முஸ்லிம்களின் முற்கால சரிதையாகும். இம்மூன்றில் முதன்மையானதும், முக்கியமானதுமாகிய அரபியர்களுடைய சரித்திரத்தை முதலில் எடுத்துக்கொள்ளுவோம்.

அரேபியா தேசம் அரபியர்களால் "ஜஸீரதுல்அரப்" (ஜஸீரா என்பதற்கு தீபகற்பம் என்பது பொருள்.) என்றும், பாரசீகர்களாலும், துருக்கியர்களாலும் "அரபஸ்தான்" (அரேபியர்கள் வாசஞ்செய்யும் நாடு) என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இன்றைக்கு எல்லா நாட்டினரும் அரேபியாவை "ஜஸீரதுல் அரப்" என்றேனும் அல்லது "அரபஸ்தான்" என்றேனும் வழங்கிவருகிறார்கள். அரேபியா தேசமானது ஆசியா கண்டத்தின் தென்மேற்குக்கோடியில் இருக்கும் ஒரு தீபகற்பமாகும். இத்தீபகற்பம் வடக்கே ஸிரியா (ஷாம்) மெஸபொடோமியா (இராக்) முதலிய நாடுகளாலும் தெற்கே எடன் குடா, அராபியக்கடல், இந்திய மகா சமுத்திரம் முதலியவைகளாலும் மேற்கே செங்கடலாலும், கிழக்கே உம்மான்குடாவாலும், பாரசீக குடவாலும் சூழப்பட்டிருக்கின்றது.

இத்தீபகற்பத்தின் விஸ்தீரணம் பிரான்ஸ் தேசத்தைவிட இருமடங்காகும். அரேபியாவின் விஸ்தீரணம் சுமார் 1200000 சதுர மைல்களென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. வடமேற்கு எல்லையிலிருந்து தென்கிழக்கு எல்லைவரைக்கும் அரேபியா நாட்டின் நீளம் 1800 மைல்கள். இத்தீபகற்பம் வடக்கிலிருந்து தெற்கே போகப்போக அகன்று செல்லுகின்றது. இத்தீபகற்பத்தில் குறைந்த அகலமுள்ள இடத்தில் அகலம் 600 மைல்கள். இத்தீபகற்பம் பற்பலமாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது

(தொடரும்)

[இடமில்லாமையால் இத்துடன் இம்மாதம் நிறுத்தப்படவேண்டியதற்கு வருந்துகின்றோம்; இனி குறைந்தது நான்கு பக்கங்களாவது இப்பகுதிக்காக இடங்கொடுக்கப்படும் பர்.]

---

லிவர்பூல் நகரின் மாதாகோயிலிலுள்ள வாத்தியப்பெட்டி உலகத்திலேயே மிகப் பெரியதாம். அதனை வாசிப்பவர் உதவிக்கு பதினேழு டெலிபோன்களை உபயோகிக்க வேண்டுவது அவசியமாம். அன்றியும் அப்பெட்டியில் 10,934 குழாய்களிருப்பதாயும், மிகத் தாழ்ந்த சப்தமிடும் குழாயின் குறுக்களவு மட்டும் ஒரு கஜமும் அதன் கனம் ஒரு டன்னுக்கு அதிகமு மிருக்கின்றதாம்.

# இஸ்லாம் என்பதன் பொருள்.

மௌலவி முஹம்மத் ஹஸன்சாஹிப்.

இஸ்லாம் மார்க்கமானது சந்தேகமின்றி அல்லாஹ்வுடைய மார்க்கமாகவே இருக்கின்றது. சகோதரர்காள்'. உலகத்தில் பரவியிருக்கும் மதங்களுள் இப்பூவுலகின்கண் பரவியிருக்கும் இஸ்லாம் மார்க்கமும் ஒரு மார்க்கமாகும். இம்மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் 40 கோடி என கணக்கிடப்பட்டிருக்கின்றது. இம்மார்க்கம் நம் தீர்க்கதரிசி நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் காலத்தில் ஆரம்பமாகி இப்பூவுலகில் பரவி வருவதாகவும் இம்மார்க்கத்தின் வயது 1345 தான் ஆகின்றது என்றும் யூதர்களுடைய பூர்விக மார்க்க சட்டதிட்டத்திற்கு இம்மார்க்கத்தின் சட்டதிட்டங்களும் ஒத்திருப்பதாகவும் பாமரர்கள் கருதுகின்றனர். அருளாளனின் திருவருளை முன்னிட்டு இம்மாசிகையைப் பார்ப்பவர்கட்கு இம்மார்க்கத்தின் முக்கிய சட்டதிட்டங்களையும் அதன் ஆரம்ப காலத்தையும் இஸ்லாம் என்பதன் பொருளையும் நன்கு விளக்கிக் காட்டுவான் வேண்டியே இவ்வியாசம் இங்கு வரையப்படுகின்றது. இஸ்லாம் என்பதற்கு அடிமை தன் எஜமான் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது என்பதே பொருளாகும். உதாரணமாக அல்லாஹு (ஜல்) தன் வேதவாக்கியத்தில் கூறுகிறான், "அல்லாஹ் (ஜல்) வின் உத்திரவுக்கு வானலோகம், பூலோகம் இவைகளிலுண்டான எல்லாப் படைப்புகளும் அவன் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவர்கள். ஆயினும் யாதொருவன் அவன் கட்டளைப்படி நடக்கப் பிரியமில்லாதவனாக இருந்தாலும் அவனையும் கீழ்ப்படியும்படி அவன் செய்து விடக்கூடும்." (ஜு. 3, ரு. 13) ஆனால் இஸ்லாம் மார்க்கத்தில் அந்தவிதம் பிரியமில்லாதவனை பலவந்தம் செய்வதை அவன் விரும்பவில்லை. எப்படியெனில் அல்லாஹ் (ஜல்) வின் வேதவாக்கியம் கூறுவதாவது, "இஸ்லாம் மார்க்கத்தில் பிடிவாதம் கிடையாது". உதாரணமாக, ஸையிதினா பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு ஸஜ்தாச் செய்யும்படி அவன் கட்டளை பிறப்பித்தபோது இப்லீஸைத் தவிர எல்லா அமரர்களும் ஸஜ்தாச் செய்தார்கள். ஆனால் இப்லீஸ் மட்டும் ஸஜ்தா செய்வதை விரும்பவில்லை. எனி

னும் அவன் நாடினால் இப்லீஸைக் கீழ்ப்படியும்படி செய்து விட்டிருப்பான்; ஆனால் அல்லாஹ் (ஜல்) அவ்விதம் நாடவில்லை. இப்லீஸை அவன் பிரியப்படியே விட்டுவிட்டான். ஜின்னுகளில் முதல் முதலாக அல்லாஹ்வுக்கு மாறுசெய்தது இப்லீஸேயாகும். இப்பூவுலகின்கண் மாறு செய்யும் மனிதர்கள் ஏராளமாயிருக்கிறார்கள் (ஜு, 15, ரு. 19). இன்னும் "அவர்களை ருகூ செய்யுங்களென சொல்லப்பட்டால் அவர்கள் செய்வதே கிடையாது. அவர்களில் பெரும்பாலோர் மாறு செய்பவர்களே யாவர் (ஜு. 4, ரு. 3.) இஸ்லாத்தின் பொருள் அடிமை தன் எஜமான் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவன் விதித்த சட்டதிட்டப்படி நடப்பதென்பதும், இம்மார்க்கத்தில் பலவந்தமாக சேர்ப்பதென்பது கிடையாதென்பதும் வெளியாகிறது. அவனுடைய சட்டதிட்டங்கள் இரண்டு வகையாகுமென்பது எளிதில் விளங்குகின்றது. ஒன்று நாகிஸ் (குறைவு); இரண்டாவது காமில் (பூர்த்தி). எந்த மனிதனும் தன் எஜமானுடைய சட்டதிட்டப்படி ஒழுங்காக நடந்தால் அவன் எவ்வித பிணியாலும் பீடிக்கப்படாமல் தன்னுடைய எஜமானின் நன்கொடைக்குப் பாத்திரமுடையவனாகி விடுகிறான் என அல்லாஹுத்தஆலா கூறுகிறான் (ஜு. 1, ரு. 13.) ஆனால் ஒரு மனிதன் செவ்வனே முறைப்படி நடக்கத் தயாராக இருப்பவன் அவ்வாறு நடப்பதால் அல்லாஹ்வுடைய நன்கொடைக்குப் பாத்திரமாக ஆகிவிடுகிறான். அவனுக்கு இமாமும் மார்க்க சட்டமும் இருந்ததா? இவ்வாறு நடக்கவேண்டுமென்று யாரேனும் போதித்தார்களா? அவ்வாறு போதிப்பவர்கள் இப்பொழுதும் இருக்கிறார்களா? சந்தேகமின்றி அப்பொழுதும் இருந்தது. இப்பொழுதும் இமாமும் மார்க்கசட்டமும் உண்டு என்று (ஜு.5,ரு. 15.)கூறப்பட்டிருக்கின்றது. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய மார்க்கத்தைத் தொடர்ந்த நல்லடியார்களுக்கு நல் உத்திரவும் செய்திருக்கின்றான். (ஜு. 5, ரு. 1.)

ஸையிதினா இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் காலஞ்சென்று ஆயிரக்கணக்கான வருஷங்களாகி விட்டபடியால் அவர் மார்க்கத்தில் எந்த விகற்பங்கள் ஏற்பட்டிருந்தனவோ அவ்விகற்பங்களை விலக்கி சீர்திருத்தி இப்றாஹீம் (அ. ஸ.) அவர்களுடைய அசல் சட்ட திட்டங்களை மனிதர்களுக்கு எடுத்துக்காட்டியும் படிப்பித்தும் பூர்த்தியான ஒருவழியை போதிப்பதற்காக ஒரு புதுப்பிப்பவரை இப்றாஹீம் (அ. ஸ.)அவர்கள் வமிசத்திலிருந்து நம் நபி முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நம்மிடையில் அல்லாஹ் (ஜல்) அனுப்பிவைத்தான் (ஜு. 3, ரு. 15.)

இஸ்லாத்தின் பொருள் எல்லாவற்றையும் படைத்துப் போஷிப்பவனுன அல்லாஹ் (ஜல்) வின் உத்திரவுப்படி நடப்ப தெனத் தெரிந்துவிட்டது. எந்த மனிதன் ஒருவனுக்கு அடிமையாக இருக்கின்ருனே அவன் தன்னுடைய எஜமானின் கட்டளைக்குத் தலை சாய்த்து நடப்பது முக்கியகடமை. புத்திமான்கள் எல்லோரும் அறி வார்கள். இதனுல்தான் இஸ்லாம் மார்க்கத்திற்கு தீனபித்ரத், தீனுல் ஹக்கு, தீனுல்கையிம், தீனகாரிஸ், இன்னும் சிராதுல் முஸ்தகீம், என நாமங்களையும் அல்லாஹ் (ஜல்) ஏற்படுத்தியுள்ளான். அதற்கு குர்ஆன் ஆயத்துகள் சாட்சியம் பகருகின்றன. அல்லாவின் படைப்பில் ஸையி தினு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் மனிதர்களில் முதலானவராகவும் துப்புரவாகவும் சம்பூர்ணமானவர்களாகவு மிருந்தார்கள். அக் கார ணத்தால்தான் இஸ்லாம் மார்க்கத்தில் அவர் நபியாக விளங்கியதுடன் முஸ்லிம்களுக்கு முதல் இமாமாகவும் வழிகாட்டி இருந்திருக்கிருர்கள். அவர்களுக்குப்பின் ஹஜரத்நூஹு (அலை) அவர்களும் மற்றும் எத்த னையோ பேர்களும் இவ்விஸ்லாம் மார்க்க இமாம்களாக (நேர்வழி காட்டிகளாக) வழிகாட்டிச் சென்றிருக்கிருர்கள். அல்லாஹ் (ஜல்) நபிமார்கள் சம்பந்தமாக குர்ஆனில் கூறுகின்ருன். "எல்லா நபிமார்க ளுக்கும் செவ்வனே வழி காண்பித்தோம். நூஹு அலைஹிவஸ்ஸ லாம் அவர்களுக்கும் ஆதியிலிருந்தே அந்த நேர்வழியைக் காண்பித் தோம்" (ஜு. 7, ரு. 16) "அந் நேர் வழி யாதெனில் அந்த எல் லா நபிமார்களுக்கும் சிராதுல் முஸ்தகீம் என்னும் செவ்வையான தீனுல் இஸ்லாம் மார்க்கத்தைக் காண்பித்தோம்" (ஜு. 7, ரு. 16.) ஹஜரத் ஸையிதினு இபுருஹீம் (அலை) அவர்கள் இதே செவ்வையான தீனுல் இஸ்லாம் மார்க்கத்தில் தோன்றி உலுல் அஜ்ம (சங்கையான நபி) ஆனகாரணத்தால் தங்களுக்குப் பின்னுல் வரும் நபிமார்களுக்கு இமாமாகவும் கபடகாபிர்களை விட்டும் துப்புரவான மார்க்கத் தைப் பின்பற்றிச் சென்றிருக்கிருர்கள். நம் தீர்க்கதரிசியானவும் சங்கையான நபி முஹம்மது முஸ்தபாரசூல் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்களின் மதிப்பை நாம் முன்னமே எடுத்துக்காட்டி யுள்ளோம். இவர்கள் இப்ருஹீம் அலைஹிவஸ்ஸலாம் அவர்களின் சிறந்த மாதிரியாக இருந்ததும் தவிர நபிகள் நாயகம் அனுப்பப்பட்ட பின் இஸ்லாத்திற்கு எத்தகையமேன்பாடு ஏற்படுமோ அதையும் குர் ஆனில் அல்லாஹ் (ஜல்) (ஜு. 28, ரு. 8) கூறி யிருக்கின்ருன். இன் னுமவர்களின் போதனையின் மேன்மையைப்பற்றியும், பிரசாரத்தின் மேன்மையைப் பற்றியும் அல்லாஹ் (ஜல்) குர் ஆனில் (ஜு. 25, ரு. 6) கூறியிருக்கின்ருன். "நபிகள் நாயகமவர்கள் உண்மையான மார்க்கத்

தின் வழிகாட்டி யென்றும், நேர்மையான வழியின் ஒளியைக் காட்டு பவரென்றும், அவர் காட்டும் வழி உண்மையான வழியாகுமென்றும் நபிகள் நாயகமவர்களின் குணாதிசயங்களைப் பற்றியும் முன் வேதங் களிலும் காட்டப்பட் டிருக்கின்றது. ஆனதால் ஸையிதினா இப்ரு ஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தை (இஸ்லாம் மதத்தை) தழுவு கிறவர்கள் மேலே கூறப்பட்ட விஷயங்களை ஆராய்ச்சி செய்து நம் தீர்க்கதரிசி முஹம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல் லம் அவர்களை உண்மை நபியென மனதில் உறுதிப்படுத்தி புண்ணிய கலிமா (லாஹிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி) வைச் சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்துகொள்ளுங்கள். இப்படிப் பட்ட மனிதன்தான் குர்ஆனில் கூறியுள்ள பிரகாரம் முஸ்லி மெனக் கருதப்படுவான். இஸ்லாத்தில் சேருவதற்கு முதற்காரிய மாக (லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி) கலிமாவை ஏன் சொல்ல வேண்டு மென்ற கேள்விக்கு குர் ஆன் (ஜு. 17, ரு. 2) லும் நாயகவாக்கியத்திலும் தக்க காரணங் கள் கூறப்பட்டிருக்கின்றன. முந்திய காலத்தில் யாதொரு முஸ்லிமல் லாதவன் (காபிர்) தமது காலத்தில் அனுப்பப்பட்ட நபியை உண்மை யென மனதில் உறுதிப்படுத்த லாஹிலாஹ இல்லல்லாஹு வென்னும் கலிமாவை நாவினால் மொழிவதுடன் அனமினல் முஸ்லிமீன் நானும் முஸ்லிம்களில் ஒருவனாவேன் என்று கூறிக்கொள்ள உரிமை கொண் டிருப்பதாகத் தெரிகிறது. அவ்விதமே குர்ஆனும் (ஜு,11.ரு. 14.) கூறுகின்றது. மேலேகூறப்பட்ட குர்ஆன் ஆயத்தில் (ஜு, 17. ரு 2.) "நபிமார்களுக்கு (ஹிதாயத்) நேர்வழி காட்டினோம்" என்றுகூறப் பட்டிருப்பதன் சம்பந்தமாக முக்கியமான இரண்டு விஷயங்கள் வெளி யாகின்றன. ஒன்றாவது: அல்லாஹ் (ஜல்) வைத்தவிர வணக்கத் திற்கு பாத்திரவான் ஒருவருமே கிடையாது என உம்மத்துகள் மன தில் உறுதிவைக்கவேண்டும். இரண்டாவது: கீழ்ப் பணிதல் தம் முடைய அவயவங்களைக்கொண்டு செய்யவேண்டு மென்பதுமே.

"இஸ்லாம்" என்னும் பதத்தின் உண்மைப் பொருளும் அதன் கொள்கைகளும், மேலே ஒருவாறு விளக்கிக்காட்டப்பட்டிருக் கின்றன. இஸ்லாம் ஒன்றே உண்மையான மார்க்கமாகும். அதன் அபிவிர்த்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒவ்வொருவரும் முயற்சி செய்வது அவர்களின் முக்கிய கடமையாகும்.

---

# தமிழரும் உருவ வழிபாடும்.

ஸ்ரீ. பு. செல்வராஜன்
அமைச்சர், "தமிழ்நாடு இளைஞர் நல்வழி மன்றம்" சென்னை.

நம் சமூகத்தில் அநேக மூடக் கொள்கைகள் அமிழ்ந்துகிடக்கின்றன. அவைகளைப் போக்க முன்வருவாரெவருங் காணோம். அங்ஙனம் சிற்சில சீர்திருத்தக்காரர் ஆங்காங்கு தோன்றினும் அவர்கள் அவைதிகரெனவும் நாஸ்திகரெனவும் பொதுஜனங்களால் (பாமரர்களால்) தூற்றப்படுகின்றனர். முதலாவது, நாம் நம்முடைய மூடக்கொள்கைகளில் தெய்வவணக்கத்தைப்பற்றி ஆராய்ந்தறிவோம். தமிழ்நாட்டில் நாம் வணங்கும் தெய்வங்களின் பெயரை எண்ணிச் சொல்ல எம்மால் முடியவில்லை. உலகிலுள்ள சர்வ மதங்களும் உருவ வழிபாட்டில் ஆழ்ந்திருந்த காலத்தில் தமிழர்கள் உருவவழிபாடு யாதென்பதையே அறியாதிருந்தனர். அப்படியிருக்க தற்காலம் கணக்கில்லாமல் தெய்வங்கள் மலிந்து கிடக்கக் காரணமென்ன என்பதை கவனிப்போம். நம்நாட்டோடு ஆதியில் வியாபாரம் செய்துகொண்டுவந்த இத்தாலியர்களாலும், பிசீனியர்களாலும், கிரேக்கர்களாலும், வட இந்தியாவிலிருந்து வந்த ஜைனர்களாலும், ஆரியர்களாலுந் தான் நந்தமிழ்நாடு இத்தகையை கேட்டுக்கு (உருவ வழிபாட்டுக்கு) உள்ளானதெனக் கூறுவது மிகைபடக் கூறியதாகாது.

சுமார் 4000 வருடங்களுக்கு முன் உலகெங்கும் பயங்கரமான உருவங்களையே வணங்கி வந்தனர். எகிப்து, அரேபியா, இத்தாலி, ஆப்பிரிக்கா, கிரீஸ் முதலிய தேசங்களில் இப்பயங்கரமான உருவ வழி பாட்டின் மூலமாக கொடுமையான மனித பலி போன்றவைகளும் நடந்தேறின. அத்தகைய காலத்திலும் தமிழ்கண்டத்தில் அருள் தெய்வத்தையே தொழுதுவந்தனர். கடவுளுக்குக் கந்தழி எனும் பெயரையே கொடுத்திருந்தனர் (கந்தழி எனும் பதத்திற்கு ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங்கடந்த முழு முதற் பொருள் என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை தொகுத்திருக்கின்றார்). அக்காலத்துத் தமிழ்மக்கள் பிறதேசத்தினர் உணராத இம் மேலான தத்துவத்தை உணர்ந்து அதனைக் கைக்கொண்டிருந்தனர்.

பிறமதத்தினரும், தேசத்தினரும் சீர்திருந்தி உருவவழிபாட்டினை யொழித்து மேலான தத்துவத்தையடைய முயற்சிக்கு மிந்

நாளில் அதையடைந்தும் பிறர்க்குபதேசித்துக்கொண்டுமிருந்த தமிழ் நாட்டில் பேதை மக்கள் நிறைந்து தம் உயரிய கொள்கைகளைச் சரிவர உணராது கிறிஸ்துவ, இஸ்லாமிய, ஆரியக் கொள்கைகளின்மீது நாட்டம்வைத்து அவைகளையே ஆதரிக்கமுன்வந்துவிடுகின்றனர். ஒரு காலத்தில் எம் மதத்தையுமே லக்ஷியம் செய்யாது மேலான சமரச சன்மார்க்கத்தைச் சிறப்பித்துக்கொண்டிருந்த தமிழர்களின் சந்ததியினர் இப்பொழுது பிறமத மோகங்கொண்டலைகின்றனர். அதனால் நாளுக்கு நாள் உருவங்களின் தொகையும் வளர்ந்து கொண்டே செல்லுகின்றது.

நம் நாட்டில், கல்விக் களஞ்சியங்கள் வதிந்த நாட்டில், கட்டைச் சுமப்பவனும் கவிபாடிய இந்நாட்டில், தமிழர்கள் வளங்குன்றி மூட நம்பிக்கைகளுக் கிலக்காகி எண்ணில்லா உருவங்களைத் தொழுவது எவ்வளவு பேதமை? அம்மட்டோ! வைஷ்ணவர்களுக்கும், சைவர்களுக்கும் உண்டாகும் சச்சரவுகளைப் பார்க்கில் நமக்கு ஐரோப்பாவின் யுத்தத்தைப் போலவே தோன்றுகிறது. இவர்களுக்குள் எச்சமயத்தினரின் கடவுள் பெரிய கடவுள் என தீர்மானிப்பதற்கு ஒரு தனி நியாயஸ்தலம் இருந்தே தீரவேண்டும் போல் தோன்றுகிறது. இனி வைஷ்ணவரிலேயே வடகலைகளும் தென்கலைகளும் புரிந்து கொள்ளும் சச்சரவுகளுக்கோ கணக்கே கிடையாது. அதனால் சிற்சில சமயங்களில் சிலர் படுகாயப்படவும் நேரிடுகிறதெனில் அதன் பெருமையை என்னென்பது? அதற்குக் காரணம் விஷ்ணு அணிந்திருந்த நாமம் தென்கலையா? வடகலையா? என்பது தெரியாமலிருப்பதனால்தான். இதைவிளக்க இவர்களுக்கும் ஒரு தனி நியாயாதிபதி வேண்டும்போல் தோன்றுகிறது. ஆனால் இவைகளை நோக்குகையில் கடவுள் எம் மதத்தைச் சேர்ந்தவரென்பதையும், எவ்விதமதக்குறி வைத்திருந்தாரென்பதையும் விளக்கிவைக்க நமக்கும் ஒரு நியாயாதிபதி தேவைப்படுவார் எனத்தோன்றுகிறது. இது எவ்வளவு கேவலமானது என்பதை சிந்தியுங்கள் நேயர்களே! கடவுள் எல்லோருக்கும் உரியவர். அவர் சர்வமத சித்தாந்தி. அவருக்கு எவ்வித மதக்குறியும் கிடையாது என்பதை இப்பேதையர் என்று உணரப்போகின்றனர்? மதக்குறியினால் விளையும் சண்டைகள் தொலையவேண்டுமானால் வேற்றுமைப் படுத்தும் மதக்குறிகளிடுவதைத் தவிர்க்கவேண்டும். சிறந்த பக்திமான்கள் மதக்குறிகளை விரும்பினதில்லை. மதக்குறிகள் நாள் தவறாமல் நெற்றியி லணிந்துகொண்டால் தான் கடவுள் கருணை கூர்வார் என்பது பெரிய மூடத்தனம். (மதக்குறிகள் அனுஷ்டானத்து வந்த விவரத்தை சுவாமி தயானந்தர் தம் சத்

தியார்த்தப் பிரகாசத்தில் அதன் மோசத்தை வெளியாக்கி யிருக்கிறார்). இவர்கள் இப்படி யிருக்க மற்றுமொரு பகுதியார் உருவங்களைத் தொழுவதோடு நிற்காமல் கொலைத் தொழிலு மன்றோ புரிகின்றனர். கடவுளின் மாசற்ற தன்மையை உணரும் சக்தி, பல பயங்கரமான ரூபமுடையவும்,தொடவும் அருகதையில்லாத விக்கிரகங் களைத் தொழுபவர்களாகிய அவர்களுக்குண்டாவதில்லை. அத்தகை யவர்கள் தெய்வப் புலவரின் தமிழ்வேதமாகிய குறளில்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின்
ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று"

எனக்கூறப்பட்டதை சரிவர உணர்ந்து அதன்படி நடக்கவாவது கற்றுக்கொள்ளவேண்டும். இன்று தமிழர் பெரும்பாலும் ஆரியரையே பின்பற்றுகின்றனர். முதன் முதலில் ஆரியர்கள் உருவ வழிபாடு புரியவில்லையென ஆராய்ச்சியாளரான ஸ்வாமி தயானந்த சரஸ் வதியவர்கள் தம்முடைய "சத்தியார்த்தப் பிரகாச" த்தில் கூறி யுள்ளார். ஆனால், அவர் (தயானந்தரிஷி) கூறியுள்ளபடி பிற்காலத் தில் ஆரியர் ஜைநர், பௌத்தரைப் பார்த்து போட்டியின் மேல் உருவ வழிபாடுசெய்ய ஆரம்பித்தனர்.

அதை வெகு மும்முரமாகவும் தீவிரமாகவும் இந்தியாவெங்கும் பரவச்செய்து, அதைத் தங்களின் பிழைப்புக்கும் பிறரை அடக்கி ஆள்வதற்கும் ஆரியர் ஒரு கருவியாக அமைத்துக்கொண்டனர். அதற் கேற்றவாறு வேதங்களும் சாஸ்திரங்களும் மந்திரங்களும் தந்திரங் களும் புராணங்களும் செய்யப்பட்டன. நாளடைவில் அவர்கள் ஆயிரக் கணக்கான தெய்வங்களையும் மதுகுடித்தல்,புலாலுண்ணல், விபசாரஞ் செய்தல்போன்ற தீச்செய்கைகளையும் அவர்களின் வேதங்களில் புகுத் தினர், ரிக்வேதத்தில் "சோம" எனும் ரசம் மதுக்களிப்பைத் தருவ தெனவும், அதுவே தேவர்களைப் படைத்ததெனவும் அர்த்தங் கொடுக் கக்கூடிய சூத்திரங்கள் 9-ம் மண்டலத்தில் நிறைந்து இருக்கின்றன. சில இடங்களில் கணக்கில்லாத தெய்வங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. அவைகளிற் சில தெய்வங்கள் மற்றைய தெய்வங்களைவிடச் சிறந்த தெனவும், சில இடங்களில் எல்லா தெய்வங்களும் சமசக்தி பெற்ற வைகளென்றும் வேறு சில இடங்களில் எல்லாவற்றையும் விட சூரி யன்,அக்னி, இந்திரன் இவைகளே சிறந்ததெனவும் முன்னுக்குப்பின் முரணாகக் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு இடத்தில் வேத பக்தியோடு கூடிய பிள்ளைகளைப் பெறவேண்டுமானால் நிறைய மாமி சத்தைச் சாப்பிடும்படி சொல்லியிருக்கிறது. இன்னும் சில இடங் களில் விபசாரத் தொழிலுக்கும் வழிகாட்டி யிருக்கிறதென்றால்

தமிழ்க்கொள்கைக்கு வேதங்கள் எவ்வளவு அருகதையற்றவை என்பது தெளிவாகும்.

அவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் தெய்வங்களில் ஓரிடத்திலாவது "சிவ" என்னும் பெயரே காணப்படவில்லை. ருத்ரன் என்ருல் சிவனல்ல. ருத்ரன் சூறுவளித் தெய்வமென ரிக்வேதம் கூறுகிறது. ஆனல், சிவம் என்பது கந்தழி என்னும் வேற்றுப் பெயருடைய பரம்பொருள் என நம் தமிழர்களில் ஒவ்வொவரும் அறிந்திருப்பர்.

ஆரியர்கள் சோமரசபானம் செய்து வேள்விகள் வேட்டதன்றியும் உயிர்ப்பலியும் கொடுத்து அவைகளின் மாமிசத்தையும் உண்டு வந்தனர். அவைகளுக்குத் தக்க மாதிரியே வேதங்களும், மந்திரங்களும் செய்யப்பட்டனவென முன்னமேயே நாம் கூறியுள்ளோம். இதை யறிந்தே மகாஞானியாகிய கபிலரும் "கணக்கில்லாத பிராணிகளைக் கொன்று அவற்றின் இரத்தத்தை ஆருகப் பெருகச் செய்வித்தலின் வேதங்கள் அசுத்தமுடையன" எனக்கூறிப் போந்துள்ளார்.

உருவங்களைத் தம்மதாக்கி, மந்திரங்களுக்கும் தந்திரங்களுக்கும் (பிறர் படிக்க நேர்ந்தால் தம் சூழ்ச்சி வெளிப்பட்டு விடுமெனப் பயந்து பிறர் படித்தலும் கேட்டலும் பாபமெனக் கூறியும் அப்படியே பாபத்துக்கஞ்சாது படித்துவிட்டால் அவர்கள் வாயில் ஈயத்தைக் காய்ச்சி யூற்றவேண்டுமென்று கூறியும் நம்மை ஏமாற்றி வந்தனர்) தாமே பிதாவாகி, மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர் கடவுளென்றும், மந்திரம் தமக்குள்ளடங்கினதெனவும், ஆகவே தாங்கள் கடவுளுக்கு சமான மாகையால் கடவுளுக்குச் செலுத்தப்படும் எல்லாவித பக்தியும் காணிக்கை முறையும் தம்மிடம் செலுத்தினல் மோட்சத்திற்குச் சீக்கிரமாகப் போகலாமெனவும்கூறி பாமரர்களுக்குப் பரலோகத் தரகர்களாய் இருந்துவந்தனர். நாம் இவைகளை யெல்லாம் உணராமலும் நம் மூதாதைபர்களின் அரிய கொள்கைகளையும் நோக்கங்களையும் அலட்சியம் செய்துவந்ததனல் இன்று சேற்றிலுழலும் புழுக்களாய் பிறர் ஏமாற்றுதலுக்கு உட்பட்டு மதில் மீதேறிய பூனைபோல் விழிக்க நேர்ந்துவிட்டது. ஒரு காலத்தில் உலகத்துக்கே தெய்வ வழி பாட்டிலும், மதக் கொள்கைகளிலும் தலைமை வகித்ததமிழர், இக்காலத்தில் அறிவிழந்து வணங்கும் உருவங்களின் தொகையும் அவைகளின் உற்ருருறவினரின் தொகையும் கணக்கிலடங்காம லிருக்கிறதெனில் எவ்வளவு வருத்தமுண்டாகிறது. நேயர்களே! உருவங்களின் எண்ணிக்கை பெருகப் பெருக உண்மை பக்தி அருகி வருகிறதென்பதை யுணருங்கள்,

நமது நாட்டில் அசுத்தத்தின் காரணமாக அம்மை நோய் அணுகி விட்டால், நாடெங்கும் பெரிய அம்மை, சின்ன அம்மை, மாரியம்மை, பயிரம்மை, கோணியம்மை, சேணியம்மை, துலுக்காணத்தம்மை, குண்ணத்தம்மை, அங்காளம்மை, பிடாரி யம்மை, தண்டுமாரியம்மை போன்ற அம்மையின் உருவங்களுக்குப் பலத்த கொண்டாட்டந்தான். இவைகளின் பேரால் ஆயிரக்கணக்கான உயிர்க்கொலைகள் நிகழ்த்தப்படும். அவைகளின் பக்தர்களும் பிரதிநிதிகளும் (மருளாடிகள்) புட்டி புட்டியாய்க் கள்ளும் சாராயமும் குடித்துவிட்டு விபரீத முறையில் அம்மனை வருணிப்பார்கள். குடிவெறியில் மூலைக்கொருசாமி தோன்றிவிடும். அவைகள் கோபத்தோடேயே தோன்றுமாகையால் அவைகளைச் சாந்தப்படுத்தி ஊரிலிருக்கும் நோயைப் போக்குவதற்காக அம்மனுக்கு குறைந்தது ஒரு கோழியாவது அப்பொழுது பலிகொடுக்கவேண்டும். அதன் இரத்தத்தை உறிஞ்சிய பிறகே அவ்வம்மன்கள் சாந்தமடைந்து நோயைப்போக்க முயற்சிப்பதாக வரங்கொடுத்து விட்டு மலையேறிவிடும். இன்னும் சில விடங்களில் இதைவிட கோரமான வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இதை விடுத்து இவைகளை விட ஒருபடி உயர்வானவர்களெனக்கூறிக் கொள்ளும் சைவ, வைஷ்ணவர்களின் தேவாலயங்களை எடுத்துக் கொண்டாலோ அவைகள் கேவலம் வேசையரினில்லமாகவும், திருடர்களுக்குரிய ஸ்தலமாகவும் போலி பக்தர்களின் ஆலயமாகவே இருக்கின்றது. அங்கு கொரேமும் துவேஷமும் போலித்தனமுமே தாண்டவமாடுகிறது. சைவ கோயிலின் குருக்கள் வைஷ்ணவ கோயிலின் பட்டாச்சார்யர்களிடம் போட்டி போட்டுக்கொண்டு இருசாராரும் ஒருவருக்கொருவர் தத்தம் விக்கிரகங்களை, இரவல் நகைகொண்டு சிங்காரிக்கிறதும், வெளியில் தாசியின் நடனத்தோடு அவ்வுருவம் ஊர்வலம் வருகையில் யாருடைய சாமி நன்ருய் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது என்று பஞ்சாயத்துவைத்து முடிவு கேட்கிறதும், இன்றும் இவை போன்ற வேடிக்கையான செய்கைகள் இன்றும் நடைபெறுகின்றதை நேயர்கள் காணலாம். இதுபோன்ற பேதைச் செயல்களைக் கண்டு நம்மனம் இதை மேலும் எழுத சரியாய் ஒத்துழைக்க மாட்டேனென்கிறது. நாம் இவைகளை எழுதியதைப் படிப்பவர் அநேகர் நம்மை அவைதிகனெனவும் நாஸ்திகனெனவும் மற்றும் பிறவும் கூறலாம். ஆயின், அத்தகையவர்களின் கூற்றுக்கு நாம் அஞ்சப்போகிறதில்லையென்பதை யவர்கள் அறியட்டும். பேதை மக்கள் இன்னும் தாழ்ந்த நிலைமைக்குப் போவதைப் பார்த்துக்கொண்டு மௌனஞ்

சாதிப்பது விவேகமல்ல; ஆஸ்திகமல்ல; வைதிகமல்ல, என அவர்கள் உணரட்டும்.

உருவமில்லாவிடில் கடவுளைப்பற்றிய எண்ணமே மனதில் உண்டாகாதெனவும், கோயிலில் உருவங்களைப் பார்த்தவுடனேயே மனிதனுக்குப்பக்தி பெருகிவழிந்தோட ஆரம்பிக்கிறதெனவும், ஆகவே உருவங்கள் அவசியம் இருந்தே தீரவேண்டுமெனவும் ஒரு சாரார் வாதிக்கின்றனர். நாம் இஸ்லாமியர்களை எடுத்துக்கொள்வோம். அவர்களெல்லோரையும் தெய்வ பக்தியற்றவர்களென யாரேனும் கூறமுடியுமா? முடியவே முடியாது. அவர்களிற் சிறந்த பக்திமான்கள் பலரிருக்கின்றனர். அத்தகைய பக்திமான்கள் எத்தகைய விக்கிரகத்தின் மூலம் பக்தியை அடைந்தார்கள் என்பதே நமது வினு.

அல்லது கிறிஸ்தவர்களில் பிராடஸ்டண்டுகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களிலும் சில சிறந்த பக்திமான்கள் இருக்கின்றனர். அவர்கள் எவ்விதம் பக்தியை வரப்பெற்ருர்கள் என்பதுதான் நமக்குத் தெரியவில்லை. அவர்களுக்கெல்லாம் பக்தி எங்கிருந்து உண்டானது? எந்தெந்த உருவங்களை அவர்கள் எண்ணெய் தேய்த்துக்குளிப்பாட்டி வணங்குகிருர்கள், என்பது புரியவில்லை. அல்லது அப்படித்தான் அவசியமாகப் பாமரர்களுக்கு உருவம் இருந்துதான் ஆகவேண்டுமென்று தோன்றுமாகில் அத்தகையவர்களுக்குப் பக்தியை உண்டுபண்ணுவதற்கு வேசைகளின் நடனமில்லாததும் ஆடம்பர நகைகளில்லாததுமான ஒரு அழகிய உருவம்மாத்திரம் போதாதோ? ஆயிரக்கணக்கான உருவங்கள் தேவைப்படுமோ? ஆயிரக்கணக்கான தெய்வங்களை வணங்குவதனுல் இருக்கும் சிறிதளவு பக்தியும் தடையில்லாமல் மறைந்துபோகுமென்பதிற் சந்தேகமில்லை. அதோடுகூட, அத்தகைய வணக்கத்தினுல் மூட நம்பிக்கைகள் அதிகப்பட்டு மக்கள் கொலைஞராயும் அறிவீனராயும் மதுபானிகளாயும் போவதற்கும் அனுகூலமுண்டாகிறது என்பது பரிதாபத்தினும் பரிதாபம்!

தமிழர்களே! நாம் இன்னும் மூடர்களாயும் உறங்கிக்கொண்டும் இல்லை. நமக்கு உண்மை பக்தி யுண்டாவதற்கு உருவங்கள் வேண்டியதில்லை. பலியிடும் கொலைக்களங்கள் வேண்டியதில்லை. நமக்கும் கடவுளுக்கு மிடையில் தரகர்களும் பிரதிநிதிகளும் தேவையில்லை. வேசையர்களின் உதவி தேடும் கடவுளர்களும் கோயில்களும் நமக்குத் தேவையில்லை. வேசையர்களை நாடிவரும் துஷ்டர்களின் கூட்டுறவு வேண்டியதில்லை. வேற்றுமையைக் குறிக்கும் மதக்குறிகளெதுவும் வேண்டியதில்லை. நம்மைக் கூட்டோடு மோட்சத்திற்கனுப்பும் மந்திரங்கள் வேண்டியதில்லை. பின் நமக்கு வேண்டியதுதானெது?

நமது கவலைகளை மறந்து குறைகளைப் போக்கும்படி நாமே ஆண்டவனிடம் முறையிட்டுக் கொள்வதற்கு ஏற்ற நிர்மலமான, தூய, நிச்சப்தமான ஸ்தலமொன்றே நமக்கு அத்தியாவசிய மாகும். தமிழர்கள் இக்காலத்தில் விளங்கும் ஆதாரமற்ற முறையைத் தொலைத்துவிடல் வேண்டும். அந்தோ! மேன்மையான தமிழ் மக்கள் இந்நிலையெய்தியது முற்றும் வருந்தத்தக்கதே. இனியேனும் தமிழ் மக்கள் தாங்கள் கைக்கொண்டிருக்கும் மூடக் கொள்கைகளைத் துறந்து, உண்மை தெய்வ பக்தர்களாய் சன்மார்க்க மதத்தினராய் உலகத்தில் தலைமை ஸ்தானத்தை யடையவேண்டுமாய்த் தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்குதவி புரிந்து அவர்களைச் சீர்திருத்துமாறு அறிவாளிகளையும் சீர்திருத்தக்காரர்களையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

---

# வியாபாரத்தின் மேன்மை.

டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு.

மஹ்மூது கஸ்னவி (ரஹ்) அவர்கள் சிறு பிள்ளையாக இருந்த காலத்தில் தமது தகப்பனார் மூலமாக இந்தியாவின் கட்டிடங்கள், கோவில்கள், விக்கிரஹங்கள் ஆகியவைகளின் பொருள்களையும் செல்வங்களையும்பற்றிக் கேள்விப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், "நான் பெரியவனான பின் இந்தியாவின் மீது படையெடுப்பேன்" என அவர் சொல்லிக் கொண்டிருந்ததாகவும் கிபுக்தகீன் என்பவர் இறந்துபோன பின்பு மஹ்மூது கஸ்னவிக்கு எல்லா அதிகாரமும் கிடைத்து அவருடைய ஆன்மாவுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டவுடன் அவர் இந்தியாவின்மீது புறப்பட்டார் என்றும் அவரைப் பற்றிச் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

மஹ்மூது கஸ்னவி மட்டு மல்ல, ஒவ்வொரு மனிதனுடையவும் அவனுடைய எதிர்காலத்திய அபாரவேலைகளும் காரியாதிகளும் இத்தகைய உணர்ச்சியின் பேரிலும் எண்ணத்தின் பேரிலுமே இருக்கின்றன. இதை அவர்கள் தங்களுடைய இளம் பிராயத்திலேயே பலமான அஸ்திவாரமாகத் தங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

பொருளாதார சம்பந்தமாக ஹிந்துக்களினுடையவும் முஸ்லிம்களினுடையவும் மனப்பான்மையில் அதிக வித்தியாச மிருக்கிறது. ஒரு ஹிந்துச் சிறுவன் தன்னுடைய எதிர் காலத்தில் பணக்காரனுதல், சீமானுகுதல் ஆகிய விஷயங்களிலேயே கருதுகிறுன் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்.

வாங்குதல் விற்பனை செய்தல், வியாபாரம் வர்த்தகம் செய்தல் ஆகிய விஷயங்களிலேயே ஒரு ஹிந்துவின் வீடு உச்சிமுதல் உள்ளங்கால்வரை நிறைந்திருக்கிறது. லாலா சாகிப் பகல் முழுவதும் கஷ்டப்பட்டு, விலைக்குவாங்கவும் விலைக்குக்கொடுக்கவும் செய்த பின்பு தன்னுடைய வீட்டுக்கு வரும்போது அவனிடத்தில் மண்டி என்ற பேச்சைத் தவிர வேறு நல்ல விஷயம் ஒன்றும் சொல்லவும் கேட்கவும் தகுந்த விஷயமாயில்லை. அவன் தன்னுடைய மனைவியிடத்தில் சந்தோஷமாக மண்டியிலேற்படுகிற பெரியபெரிய மாறுதல்களைக் கூறுகிறுன். வியாபார சாமான்களை இறக்குதல், ஏற்றுதல், அதிர்ஷ்டம், விதி ஆகியவைகளின் மாறுதல், கஷ்டம், தந்திரம் ஆகியவைகளின்காரியங்கள், லாபம் நஷ்டம் இவ்வித விஷயங்களைப்பற்றியே பேசுகிறுன். இன்ன தானியத்தை வாங்கினேன் அதில் இவ்வளவு லாபம் கிடைத்தது, இன்னும் அதில் இவ்வளவு மீதி இருக்கிறது, இன்ன சேட் இத்தனை லக்ஷம் ரூபாய் சம்பாதித்தார். இன்னுனுக்குக் கடன் கொடுத்திருந்தேன், அவன் அதைத்தீர்த்துவிட்டான். அதில் இவ்வளவு வட்டிகிடைத்தது. இன்னுனின்மீது டிக்ரியாகி இருக்கிறது. என்பவை போன்ற இத்தகைய பேச்சுக்களையே அவன் பேசுகிறுன்.

ஒரு ஹிந்துச் சிறுவன் இத்தகையபேச்சுக்களை மிகவும் கவனமாகக் கேட்கிறுன். தான் ஒரு பணக்காரத் தகப்பனின் புதல்வன் என்றும், அவனுடைய செல்வம் வரும்படி ஆகியவைகள் வியாபாரத்திலும் லேவா தேவியிலுமே இருக்கிறதென்றும் அவனுடைய சிறுவயதிலேயே அவனுக்கு எண்ண முண்டாகிறது.

* * * *

வயது வரவர அவன் விஷயங்களை அதிகமாகத் தெரிந்து கொண்டு விடுகிறுன். இப்பொழுது அவன் தன்னுடைய நகரத்தின் ஹிந்து லேவா தேவிக்காரர்களைத் தவிர முஸ்லிம், தலைவன் ஜாகீர்தார் ஆகியவர்களையும் அவன் அறிந்துகொள்ள ஆரம்பிக்கிறுன். வெளித் தோற்றத்தில் அவர்கள் செய்யும் ஆடம்பரங்களையும், கௌரவம், அந்தஸ்து முதலியவைகளையும் பார்த்துத் தன்னுடைய மனதுக்குள் இவர்கள் கௌரவம், பெருமை, சக்தி ஆகியவைகளை யுடையவர்களென நினைத்துக் கொள்ளுகிறுன். இத்தகைய

ஜனங்கள் சிற்சில சமயங்களில் பகலில் அல்லது இரவில் அவனுடைய கடைக்கு வரும்பொழுது பெருமையினாலும் சந்தோஷத்தினாலும் அவன் பூரித்து விடுவதில்லை. அவர்கள் அங்குவருவது தன்னுடைய கௌரவத்திற்குக் காரணம் எனக் கருதுகிறான். ஆனால் கடைசியாக ஒரு தினத்தில் அவர்கள் கடைக்கு வந்துபோவதன் ரகசியத்தை அவன் அறிந்து கொள்ளுகிறான். தங்கள் வீட்டிலிருக்கும் நகைகளைத் தன்னுடைய தகப்பனாரிடம் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது இவ்வாறு வந்து போய்க்கொண்டிருக்கும் கௌரவம் வாய்ந்த ஜாகீர்தார்கள், தலைவர்கள் தன்னுடைய தகப்பனாரின் ஆசாமிகள், என அவனுக்குத் தெரிந்து விடுகிறது.

இப்பொழுது தான் எண்ணி இருந்தவைகள் தவறு என அவன் அறிந்து கொள்ளுகிறான். பெரிய பெரிய தலைவர்கள், ஜாகீர்தார்கள் ஆகியவர்களின் மீது அவனுக்கிருந்த மதிப்பு அவனுடைய இருதயத்தை விட்டு உடனே நீங்கி விடுகிறது. அவர்களின் நிலைமையை அவன் அறிந்து கொள்ளுகிறான். தான் பெரியவனான பின்பு தன்னுடைய வியாபாரம், லேவாதேவி ஆகியவைகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவனுடைய இருதயத்தில் புதிதாக உண்டாகி விடுகிறது.

* * * *

இரண்டு மூன்று வருஷம் சென்ற பின்பு அவனுக்கு வயது 12, 13-க்கு அதிகமாக இல்லாதிருந்த போதிலும் தன்னுடைய தகப்பனாரின் வேலை வெட்டிகளில் கலந்து கொள்ள ஆரம்பிக்கிறான். தன் ஊரிலுள்ள தலைவர்களைப் பற்றிப் பல நூதனச் செய்திகளையும் கதைகளையும் கேட்கிறான்.

ஒரு கான்சாகிப் வருகிறார். தனக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தங்களினுடையவும் கஷ்டங்களினுடையவும் சரித்திரத்தை அளக்கிறார். பெரிய கான்சாகிப் மர்ஹூம் அவர்களின் காலத்திலுள்ள வீடு. அதை மராமத்து செய்வதற்காகச் சின்ன கான்சாகிப் பல தடவைகளிலும் முயற்சி செய்தார். ஆனால், அதற்கு ஏதாவதொரு தடை ஏற்பட்டுக் கொண்டே வந்தது. தங்களுக்கு என்னுடைய நிலைமை தெரிந்திருக்கிறது. ஆனால் அதற்கென்ன செய்வோம்? இன்ன தலைவர், இன்ன நவாப், இன்ன ஜாகீர்தார் சில நாட்களுக்கு முன்புதான் வந்தார். எப்பொழுது இவ்வாறு தொந்தரைகளேற்பட்டுக் கொண்டிருக்கிறது எனப் பலவாறு அவர் கூறுகிறார்.

இக் கதைகளைக் கூறியபின் அவர் கமுக்கட்டிலிருந்து தங்கநகைகளை எடுத்து லாலாஜியின் முன்னால் வைக்கிறார். லாலாஜி இதில் ஆபி

ரக்கணக்கான குற்றங் குறைகளைக் கூறியபின் 10-ஆயிரம் ரூபாய் விலை மதிப்புள்ள சாமானை எடுத்துக்கொண்டு 5-ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிக் கொள்ளுகிறார். கான்சாகிபின் நிலைமையோவெனில், வீடு கட்டுவதாக ரூபாய் வாங்கிக்கொண்டுபோய் விவகாரம் நடத்துதல், சுகபோகங்களை அனுபவித்தல் ஆகியவைகளில் அப்பணத்தைச் சில நாட்களுக்குள் வீண் செலவு செய்துவிடுகிறார்.

இது ஒரு சம்பவமாகும். ஆனால் ஒரு ஹிந்து சிறுவன் தினந்தோறும் இதுபோன்ற நூற்றுக்கணக்கான சம்பவங்களைக் கேட்கிறான். விவாக நிக்காஹ் காலமாகட்டும், வீடுகட்டுவதாகட்டும், விவசாயம் செய்யும் காலமாகட்டும், வியாதியின் கஷ்டம் வரட்டும், பூமிகளைப் பாகம் பிரிக்கும் சம்பவமாகட்டும், பிரயாணம் போவதாகட்டும், விருந்தினர்களை உபசரிப்பதாகட்டும் ஏதாயிருந்தாலும் லேவாதேவிக்காரர்களின் உதவி இல்லாமல் முஸ்லிம்களின் காரியம் நடைபெறாது. காரியம் நடைபெறுவதாக இருந்தாலும் அவர் அவ்வாறு நடத்திக் கொள்வதுமில்லை. கேவலமான, தவறுதலான இந்நடத்தையினால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் இன்று நம்முன் இருக்கின்றன. மேற்கூறப்பட்ட எல்லாவிஷயங்களையும் கவனித்துப் பாருங்கள். "வியாபாரமனப்பான்மை" உண்டுபண்ணும் காலமாக இக்காலம் இருக்கிறது. தன்னுடைய மடியில் வெற்றியுடன் வளர்க்கிறது. ஒரு ஹிந்துக் குழந்தையின்வாழ்நாளின் ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு மூச்சும் அவனுக்கு செல்வத்தைப்பற்றி உபதேசம் செய்கிறது. இவ்வித நிலைமையில் வளரும் குழந்தைக்கு தரித்திரமும், கஷ்ட ஜீவனமும் ஏற்படமுடியாது. வியாபாரம் செய்யும் ஜனங்களிடத்தில் மாத்திரம் வியாபார மனப் பான்மை இருக்கவில்லை. கூலிக்காரன், சம்பளக்காரன், விவசாயி முதலியவர்களிடத்திலும் உண்டாகக்கூடும். இன்று, டென் மார்க், இங்கிலாந்து முதலிய மேநாடுகளில் ஒவ்வொரு தேசத்தினர்களிடத்திலும் இத்தகைய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒருவன் தினந்தோறும் தன்னுடைய வரும்படியில் காலணாவை அல்லது மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் மீதம் பிடித்து வந்தால் 20 வருஷத்தில் அவன் தன்னுடைய கடன்களை நிச்சயமாக நிறைவேற்றி விடுவான். "வியாபார மனப்பான்மை" யில்லாதவர்களிடமுள்ள பெரும் துர்அதிர்ஷ்டம் யென்னவெனில் இவ்வாறு மீதம் பிடிக்கும் விஷயத்தில் அவர்களுக்கு சொற்பத்தொகையின் ஞாபகமே வரமாட்டாது. ஒரு முஸ்லீம் விவசாயி அல்லது கூலிக்காரன் அல்லது சம்பளக்காரனுக்கு போஸ்டு ஆபீசில் அல்லது பாங்கியில் தனக்குக் கணக்குப்புத்தகம் ஏற்படுத்திக் கொள்ளத் தைரி

யம் வருவதில்லை. தினம் ஒன்றுக்கு 8 அணு சம்பாதிக்கக்கூடியவன் எவ்விதக்கஷ்டமுமில்லாமல் ஒவ்வொருநாளும், ஒரு அணு மீதம் பிடிக்க முடியும். இந்த ஒரு அணு 30 வருஷங்களுக்குப் பின் ஆயிரம் ரூபா யாக ஆகிவிடுகிறது. கல்வி கற்றவர்களும், பொறுப்புவாய்ந்தவர்களும் கூலிக்காரர்கள், விவசாயிகள், சம்பளக்காரர்கள் ஆகியவர்களுக்காக கோஆப்பரேட்டிவ் இயக்கத்தை நடத்திவருவதும் அவர்களிடத்தில் வியாபார மனப்பான்மை உண்டு பண்ணுவதும் அவர்களின் கடமை யாகும். ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு மஹல்லாவிலும், ஒவ்வொரு முஸ்லிம் குடும்பத்திலும் பொருளாதார சம்பந்தமான சங்கங்களை ஏற்படுத்த வேண்டும். பொறுப்புவாய்ந்த மேதாவிகளும், செல்வாக் குள்ள கனவான்களும் இந் நற்காரியத்தைக் கவனிப்பார்களா?

"தன்ஜீம்"

---

# கிறிஸ்து மதத்தின் அவசியம் யாது?
அன்றி
# கிறிஸ்து வேதத்தினாலேற்பட்ட புதுப்படிப்பு என்னை?

மௌ. ஆ. அபுல்ஹுதா

அன்புள்ள நண்பர்காள்! உள்ளதை யுள்ளபடி உரைக்காமலிருப் பதும் இல்லாததைக் கற்பித் துரைப்பதும் சமமேயாம். மானிடமுக்தி சத்தியத்திலும், சத்திய ஸ்தாபன உரிமை மனிதனிலும் இருக்கின்ற மையால், சத்திய ஸ்தாபன விஷயத்தில் முயலாதவன், முக்திக்கு அவகாசியாயிருக்கின்ற மனிதனிடமும், நியாயானு சாரணம் முக்தி யளிக்கின்றவனாகிய கடவுளிடமும், அன்பும், பக்தியும், உள்ளவ னென்று கொள்ளமுடியாது.

இவ்வன்பானது, சிருஷ்டியின் நோக்கமானபடியால், அதை அறிந்தும் ஒருவன் அதில் நின்றும் விலகுவானேயாயின், அது மிகப் பயங்கரமான ஒன்றானதால், மேற்குறித்த கேள்விகளுக்குத் தகுந்த சமாதானம் எமது சிற்றறிவிற் கெட்டினவரை எழுதுவதற்கு சத்திய ஸ்தாபகனு மிறைவன் நல்லருள் புரிவானாக!

ஒன்றுண்டாயிருக்குங்காலை அதற்குப்புறமே மற்றொன்று அவசிய மாக வரவேணுமாயின், அவ்வுள்ளதில், இல்லாததும், அத்தியா வசியமானதுமாகிய புதுவிஷயங்கள் ஏதாவது உண்டாயிருக்கவேணு மென்று மனித புத்திகற்பிக்கின்றது. இங்ஙனமிருக்க, கிறிஸ்தவ

வேதமென்கின்ற பிரஸ்தாபம் உற்பவித்ததாகக் காணப்படுகின்ற கால நிலையும், வேதம் அல்லது நியமம், எனப்பெயர் கொடுக்கப்பட்ட புது ஏற்பாடு என்கிற பிரமாணங்களும், அதை ஆதாரமாகக்கொண்டுள்ள ஆசார அனுஷ்டானங்களும், இவ்வுபதேசம் தோன்றுவதற்கு எவ்வளவோ காலங்களுக்குமுன் உலகம் அறிந்தும், அனுஷ்டித்தும், வந்திருந்ததென்றும், இதற்கு முன்னுண்டாயிருந்த பிரமாணங்கள் இப்பிரமாணங்களைவிட (கிறிஸ்தவ பிரமாணங்களைவிட) எவ்வளவோ மேன்மையுற்றிருக்கின்றன வென்றும், பார்க்கின்றோம். எனவே கிறிஸ்து மதம் ஏற்படுவதற்கு எவ்வித அவசியமும் உலகத்திற்கு உண்டாகவில்லை என்பது நிச்சயம்.

## நிரூபணம்.

கிறிஸ்தவப் பிராமணங்களென்றும், ஆசாரங்களென்றும், கூறப்படுகின்றவை யாவும், கிறிஸ்து பிறப்பதற்கு எவ்வளவோ வருடங்களுக்கு முன்னுண்டான இந்துமதக்கொள்கையனுஷ்டான உபதேசங்களினின்றும், மற்றும் இதர உபதேசங்களினின்றும், எடுக்கப்பட்டவைகள் தானென்றும், ஆங்கிலபண்டிதர்களாலும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: கிறிஸ்துவின் அனுஷ்டானங்களும் நியமங்களும், விக்கிரஹ ஆராதனைக்காரர்களும் யோகிகளுமானவர்களுடைய அநுஷ்டானங்களுக்கும் நியமங்களுக்கும் ஒத்தவைகளென்று, பிரசித்திபெற்ற மத ஆராய்ச்சிக்காரரான "டாக்டர் மாரீடத்" (Dr. Mareedeth) என்பவர் கூறுகின்றனர். "கன்பியூஷியஸ்" (Confucious) என்கிற நூலிலிருந்து எடுக்கப்பட்டதென்று "எக்ஸி ஹோமோ" (Exihoomoh) என்கிற மஹா போதகர் கூறுகின்றார். உலகப் பிரசித்திபெற்ற "டாட்துரை" (Mr. Dad) கிறிஸ்துமதத்தை பௌத்தமதத்துடன் ஒப்பிட்டிருக்கிறார்.

மதங்கள் யாவையும் பரிசோதனை செய்தவர்களான மகா பண்டிதர்களுடைய பெயர்களும் அபிப்பிராயங்களும் காண்பித்த போதிலும் அவைகளால் திருப்தியடையக்கூடிய நிலைமையிலுள்ள சரித்திர ஆராய்ச்சி, திராவிட தேச கிறிஸ்தவ சமுதாயத்திலுண்டா என்கிற விஷயம் சந்தேகமானபடியால், காரணங்களைச் சுட்டிக் காண்பித்தும் விவரமாயும் கூறுவதற்கு முற்படுகிறேன்.

1. அன்பர்காள்! கிறிஸ்துமதத்தின் தன்மை என்னவென்றும் அதன் உற்பத்தி எங்ஙனமென்றும் அறிந்துகொள்வீர்களாக!! மெய்ஞ்ஞானம் கிஞ்சிற்றேனுமில்லாமல் ஒவ்வொரு சக்திகாரணமாக ஒவ்வொன்றையும் பூசைசெய்தும், வணங்கியும் வந்திருந்தவைகளில் காலக் கிரமங்கொண்டு முப்பத்துமுக்கோடி என்கின்ற ஒரு வரை

யறுப்புண்டாயிற்று. அதில் நின்றும் மாறுபட்டு (ஞானம்முதிர்ந்து) வந்தமையால் முப்பத்திமூன்று என்கிற தொகையாகச் சுருக்கி நாளடைவில் ஒன்ருக்கி எடுக்கவேண்டிய நோக்கம் அதிகப்பட்டமையால், சம்க்ஷேபித்து (சுருக்கி) பார்த்த பொழுது சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் (ஆக்கல், காக்கல், அழித்தல்) என்கின்ற இம்மூன்று சக்திகளும் மஹாசக்திகளாகவும், அவைகளில் இகபரமிரண்டும் அடங்கியிருக்கின்றதாயும் கண்டபடியால், மூன்றை நிலைநிறுத்தி, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் கற்பித்து பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கின்ற மூன்று நாமதேயங்களும் கொடுக்கப்பட்டது; சிருஷ்டிப்பதற்குள்ள அதிகாரம் பிரம்மாவினிடமும், பரிபாலனம் செய்வதற்குள்ள அதிகாரம் விஷ்ணுவினிடமும், சம்ஹாரம் செய்வதற்குள்ள அதிகாரம் சிவனிடமும் ஒப்புவிக்கப்பட்டன. மும்மூர்த்திகளென்று சங்கல்பிக்கவும் மூன்றுசக்திகளும் ஒன்றில்தானென்று உறிதிபடவும் செய்யும்காலை மூன்றும் ஒன்றுதானெனவும், மூன்றும் மூன்றிலெனக் கொள்ளும் காலை ஒன்று மூன்றெனவும் உறுதிப்படுத்தவும செய்கின்றன.

## முக்கிய குறிப்பு.

மூன்றும் ஒன்றென்றும், ஒன்று மூன்றென்றும் ஸ்தாபனம் செய்ததினுடைய நோக்கமானது சர்வகர்த்தாவும், சர்வசக்தனும் ஒருவன்தானென்று உறுதிப்படத்தகுந்த ஞானசக்தியடைந்தவன், மூன்றும் ஒன்றென்கின்ற விஸ்வாசியாகுவானென்றும், ஒன்றென்கின்ற உறுதிக்காக முயலுகின்ற அற்பஞானி, ஒன்று மூன்றென்கின்ற விஸ்வாசத்திலிருப்பான் என்பதுமேயாம். 'ஒருவன், தான், அவன், தேவன், கர்த்தன், காமசம்ஹாரி'' (சிவபுராணம் காண்க) இந்த பிரமாணமானது முற்கூறின கஷ்டத்தை நிவர்த்தி செய்கின்றன.

இந்துமத தத்துவத்தை உள்ளபடி யறியாமல் மும்மூர்த்திகளென்கின்ற பிரஸ்தாபத்தை மாத்திரம் (சகுணவாதம்) பலப்படுத்தி பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, என்றிவ்விதம் கிறிஸ்தவர்கள் பெயர் மாற்றி திரியேகக்கடவுளாக்கி அமைத்தனர். ஒன்று மூன்றும், மூன்று ஒன்றும், என்று ஆக்கிவைத்தனர்.

(2) மேற்கூறின மும்மூர்த்திகளில், சம்ரக்ஷாணுநிகாரியாகிய விஷ்ணு, அவ்வப்போது அவசியமாக ஏற்பட்ட ரக்ஷார்த்த நிவர்த்திக்காக (பாதுகாப்பின் அவசியத்தை ஒட்டி) பல்வேறு சரீரங்களில் தோன்றினர் (பகவத் கீதை ஞானயோகம் 8-வது வாக்கியம்.) ஒவ்வொரு சரீரத்தின் தன்மைபோன்று சுகதுக்கங்கள் அனுபவித்

தும், மரித்தும் இருக்கின்றனர் என்று இந்துமத அக்ஞானிகள் விஸ்வாசிக்கின்றனர்.

அக்கொள்கைக்கொத்தவாறு திரியேகத்தில் ஒன்ருக நியமித்த மேரிகுமாரனுகிய இயேசுவை ரக்ஷகனுக நியமித்து, மனிதபாவங்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தையொட்டி மனித சரீரத்தில் தோன்றி அந்த சரீரத்திற்கிசைந்த சுகம் முற்றிலும் இல்லாமலிருந்த போதிலும் மகாதுக்கங்கள் அனுபவித்தும் மரித்தும் இருக்கின்றனரென்று தீர்மானித்தனர். (I திமோத்தி 3ல் 16.)

(3) பலிகளின் பயனுகப் பாபவிமோசனம் உண்டென்று நம்பியும் ஒவ்வொரு பாபங்களின் சக்திக்கேற்றவாறு அஸ்வமேதயாகம், முதல் நரமேதயாகம், வரையிலும் இந்துக்கள் பலிகளைச் செய்தும் வந்தனர். இந்துமத கர்மமார்க்க ஆசாரமான பலிசுலபமானதென்று கண்ட போதிலும், பாபத்திற்குத் தகுந்த பலி செய்வதற்கு எல்லாவித மனிதர்களைக் கொண்டும் முடியாதென்று நினைத்து, ஏகபலியினுல், செய்ததும், செய்கின்றதுமான, எல்லாவித பாபங்களினின்றும் மீட்பு கிடைத்ததென்று வரவேண்டுமென்றெண்ணி, அதற்குவழி என்னவென்று ஆலோசித்ததின் பயனுக, செய்துபோன பாபங்களுக்காக உயர்ந்த பலியானது நரபலியெனக் கண்டமையால், செய்வதற்குரியதும், செய்ததும், செய்யுகின்றதுமாகிய, பாபங்களுக்கு பரிகாரம் கிடைக்க செய்வோமாயின், பயமில்லை. இயேசுவின் பலியில் பலமாக நம்பினுல் போதும் முக்தி கிடைக்கும் என்றதாகத் தீர்மானித்தனர். (ஹாத்தர் பாதிரியார் எழுதின 'விஸ்வாசித்தால் போதும், (Only Believe) என நூலைப்பாக்கலாம். ரோமர். 4-ம் அத்தியாயம் காணலாம்.')

(4) கௌதமரென்கிற பௌத்த மதஸ்தாபகர், தாம் பிரசிங்கித்து வந்தது மல்லாமல், சன்மார்க்க அனுஷ்டான முடையோன் தான் மாத்திரமாயிருந்தபடிபால் பயன் கொடாதென்றெண்ணி, பிரசங்கங் கொண்டும் உபதேசங் கொண்டும் அன்னிய ஜனங்களுக்கும் தன் கொள்கையைத் தெரியப்படுத்தவேணுமென்று நினைத்தும், ஏனையோர்கட்கும் உபதேசம் செய்து சீஷர்களாக்கி வந்தார்.(Dr. Henry) (டாக்டர் ஹென்றிதுரை எழுதின இந்தியா சரித்திரச் சுருக்கமெனும் நூல் காணலாம்.) இவ்வுபதேசப்படியே கிருஸ்துவும் பிரசங்கிக்கவும், சிஷ்யவர்க்கங்களைப் பிரசங்கம் செய்யவும் கட்டளையிடவும் செய்தனர். (மத்தேயு 10-ம் 28-ல் 19-20 Mathew X XXVIII 19-20)

(5) ஆரியர்கள் இதரஜனங்களை இகழ்ந்தும் கண்டித்தும் வந்திருந்தனர். கௌதம புத்தர் தமது பிரசங்கத்தினுல் பிராமணர்களும் சூத்திரர்களும் தர்மாதிகாரத்தில் சம உரிமையுடையோர்க

ளென்று ஸ்தாபித்தனர். (சரித்திர பிரதர்சன தர்ப்பணம் என நூல் காணலாம்) இஸ்ரவேல் ஜனங்கள் அன்னிய ஜனங்களைத் தாழ்த்தியும் வெறுத்தும் வந்திருந்தனர். அதை, கிருஸ்து, மேற்கூறின கௌதமபுத்தருடைய உபதேசத்திற்கிணங்கமாற்றி எல்லோரையும் ஒன்றாக்கிவிட்டார். அப்போஸ்தல நடபடி 10-ல் 35-36 Acts X Chapter 35-36)

(6) வேதசாஸ்திரப் பயிற்சி பிராமணர்களுக்குமட்டும் பிரமாணமென்று ஆரியர்கள் நியமனம் செய்து வைத்திருந்ததைக் கௌதம புத்தர் அடியோடொழித்து, சூத்திரர் முதலியோரைக் கூட வேதசாஸ்திராப்பியாசம் செய்வித்தனர். மோசையின் பிரமாணங்களைப் படிக்க வேண்டியதாகிய பிரத்தியேக அந்தஸ்து தங்களுக்கு மாத்திரம்தான் இருக்கின்றதென்று இஸ்ரவேல்ஜனம் நடித்தும் அன்னவர்கள் மாத்திரம் படித்தும் வந்திருந்தது கௌதம புத்தருடைய உபதேசத்திற் கெதிரென்று கிருஸ்து கண்டதினால் பௌத்தமத உபதேசத்திற்கிணங்க சகலரும் அவகாசமாக மோசையின் பிரமாணங்களைப் படிக்கலாமென்று கிருஸ்துவும் கட்டளை செய்தார்.

(7) உபதேசப் பிரசங்கங்கொண்டும் மற்றும், வழிப்படுகின்ற அன்னிய மதஸ்தர்களை தமது மதத்தில் சேர்க்கலாமென்று பௌத்த மதம் அனுமதி கொடுக்கின்றது. (டாக்டர் ஹென்றி துரையின் இந்தியா சரித்திர சுருக்கம்.) இந்த அனுமதியைக் கிருஸ்துவும் சரி வைத்திருக்கின்றனர்.

(8) 'எல்லாவற்றிற்கும் மாற்றமுண்டு' எனினும் என்னுடைய உபதேசங்களுக்கு ஒருகாலமும் மாற்றமும் நாசமும் வரமாட்டாது. (மேற்கூறின சரித்திரம்) என்கிற கௌதம புத்தருடைய மகாவாக்கியத்திற்கு இசைந்த வாக்கியம் கிருஸ்துவும் கூறுகிறார். "பூமியும் வானமும் ஒழிந்துபோகும் என் வார்த்தைளோ அழிந்து போக மாட்டா" (மத்தேயு 24-ல் 35) மேரி குமாரராகிய இயேசு காண்பித்த இந்த தீரதையானது கௌதம சாக்கியரைப்பின்பற்றியது தானென்று காரிய காரணப்பொருத்தம் மூலம் புலனாகுகின்றன.

(9) அன்னியன் தனக்கு எதைச் செய்யவேணு மென்றுதான் ஆசிக்கின்றானோ அதைத்தான் அன்னியனுக்கு தானும் செய்யவேண்டியது (கன்பியூஷியஸ் என்கின்ற நூல் 24) இவ்வாக்கியத்தின் மகிமையானது மேரிகுமாரனைப் பலமாக வசீகரித்தமையால் அதே வாக்கியம்தான் அவரும் கூறினார். அதாவது, 'மனிதர் உங்களுக்கு என்னென்ன செய்ய வேணுமென்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அங்ஙனம் நீங்களும் அவர்களுக்கும் செய்வீர்களாக; (மத்தேயு 7-ல் 12)

(10) மத்யு 4 ல் 22 'தன் சகோதரரிடம் அகாரணமாகக் கோபிக்கிறவன் நியாயத்தீர்ப்புக்குக் காரணமாவான், என்று பார்க்கிறோம். இவ்வுபதேசத்திற் கிசைந்த உபதேசம் உலகப் பிரமாணங்களில் எங்கு மில்லையென்றும், இவ்வுபதேசம் கொண்டு கொலை செய்யக்கூடிய நினைவின் மூலவேரை அடியோடு மேரி குமாரன் பிடுங்கி விட்டாரென்றும், கிருஸ்தவ பண்டிதர்கள் பெருமையுடன் பறையறையுகின்றனர். ஆனல் அனேக வருடங்களுக்குமுன் உண்டாயிருந்ததும் வேதமென்றோ தேவவசனமன்றோ கிருஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளாததுமாகிய இந்து மதப் பிரமாணங்களில், இவ்வுபதேசம் மிகக் கருத்துடையதும், இயன்ற அளவு அனுஷ்டானத்தி லிருந்ததும், மிக விசாலமானதுமாக நாம் பார்க்கின்றோம். அதாவது, 'எத்தகை பிராணியும் உபத்திரவிக்கப் படாதகிரியைகள் கற்பிக்கபட வேண்டும். தர்மாத்மா, மனிதனிடம் இனிமை மொழிகளைக் கூறவேண்டும், சகல ஜீவராசிகளிடமும் கருணை காண்பிக்கவேண்டும்; (மனுஸ் மிருதி 2 ல் 161)

சரித்திரப் பிரசித்திபெற்ற ஹென்றி துரை கூறுவது என்னவெனில் "புத்தமதம் பலிகட்குப் பதிலாக மூன்று காரியங்களை கற்பிக்கின்றன. ஒன்று, 'ஜடானுராகங்களை (சரீர ஆசாபாசாங்களை) ஜெயிக்க, இரண்டாவது, அன்னியரிடம் கருணையுடனிருத்தல் வேண்டும் ; மூன்றுவது; சகல ஜீவராசிகளிடமும் ஜீவகாருண்யம் பாராட்டவேண்டும்.

பௌத்தமத அபிவிர்த்தியில் உதவிசெய்து வந்த 'அசோகன்' என்ற இந்துதேச மன்னன் தமது ராஜ்யங்கள் யாவற்றிலும் கற்களின்மீது வெட்டப்பட்டு ஸ்தாபிக்கப் பட்டிருந்த பதினான்கு நியமங்களில் ஒன்றுகிய ஏழாவது நியமம் "அன்னிய மதஸ்தர்களை நிர்ப்பந்திக்கக்கூடாது, ஏதொரு ஜீவியையும் துரோகிக்கக்கூடாது என்பதேயாம்" (சரித்திரப் பிரதர்சன தர்ப்பணம் மூன்றும் கண்டம் பார்க்கலாம்.) அன்பர்களே! கிருஸ்துமத பிரசாரர்களே! நீங்கள் பாருங்கள்! கிருஸ்து தெய்வம் ஜெனிப்பதற்கு, (கிருஸ்தவர்கள் மேரிகுமாரராகிய கிருஸ்துவை கடவுளென நம்புகின்றனர். ஆ கஷ்டம்! என்ன விந்தை! மரியாளில் நின்றும் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்; யூதர்களால் கழுவேற்றிச் செத்தார்) 500, 600, வருடங்களுக்குமுன் உண்டான தாய் காணுகின்ற இவ்வுபதேசங்களால் கொலைசெய்ய வேணுமென்றெண்ணுகின்ற நினைவின் மூலவேரை அடியோடுபிடுங்கிவிட்டிருக்கவே, மேரி குமாரணுகிய கிருஸ்து தெய்வம் பிறந்து கொலை செய்யவேணுமென்கின்ற நினைவின் மூலவேரை பிடுங்கவேண்டிய அவசியம் யாது? மாத்

திரமன்று; மானிடபுத்தி நமக்குபுகட்டுவ தென்னவெனில், கிருஸ்து வின் உபதேசமானது பூர்ணதோஷத்தில் குப்புற விழுந்து கிடக்கின்றனவென்றேயாம். ஆனால் இதைத் தவிர்த்து இந்து மதஉபதேசம் இவ்விடயத்தில் பூர்ணமகிமையிலிருக்கின்றன. எப்படி என்றால், கிருஸ்துவின் உபதேசம் அகார ணமாகக் கோபிக்கின்றவன் (மத்தேயு 5-ல் 22) என்று பார்க்கிறோம். இதனால் காரணமுண்டானால் கோபிகவும் கோபத்தின் கடைசி முடிவாகிய கொலையைச் செய்யவும் ஆகுமென்றுகிருஸ்து ஒப்புக்கொள்வதாக புலப்படுகின்றது. இவ்வுபதேசமானது கொலை செய்வதற்குள்ள காரணவேரை பிடுங்கிஎறியவில்லை. ஏனெனில், காரணத்துடனோ அன்றி காரணமில்லாமலோ, கோபிப்பதினால் அதன் முடிவு கொலைதானென்றும் ஆகையால் கோபப்படக் கூடாதென்றும் பகவத்கீதையும் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றன. (பகவத்கீதை சாங்கியா யோகம் 63) தவிர அகாரணமாகக்கோபிக்கும் தன்மை ஜீவராசிகளில் எதற்கும் இல்லை என்பது உண்மையே. எனவே கிருஸ்துவின் இவ்வுபதேசத்தை ஒரு புதுஉபதேசமாகவோ நியாயமான உபதேசமாகவோ எண்ணுவதற்கு முடிய வில்லையே! ஆதலின் அங்ஙனம் கருதுவது தவறெனப் புலப்படுகின்றன.

"அன்னிய மதஸ்தர்களை உபத்திரவிக்கக் கூடாது, எந்த ஜீவனுக்கும் ஹிம்சைசெய்யக்கூடாது, எல்லா ஜீவிகளும் தன்னைப்போலென்றெண்ணி தன்ஜீவனில் தனக்கிருக்கும் கருணையைப்போல் சகலஜீவிகளிலும் கருணை பாராட்டவேண்டும், தன்னாத்மாவுக்கு நன்மை என்றுதான் நினைத்திருக்கின்றதெதுவோ அதைத்தான் அன்னிய ஆத்மாவுக்கும் நன்மையானதென்று நினைக்கவேண்டும், என்கின்ற இந்துமத உபதேசமானது மேற்கூறின கிறிஸ்துமத உபதேசத்தைவிட எவ்வளவோ மேன்மை யுற்றதாக இருக்கின்றன. "கோபம் வரக்கூடிய காரணம் நிகழ்ந்திருந்தபோதிலும் கோபப் படக்கூடாது. துரோகிக்கக்கூடாது என்று உபதேசிக்கின்றன. இவ்வுபதேசங்களால் கோபம் மட்டுமன்றி மதமாச்சரியம் முதலிய அஷ்டராகாதிகளின் விஷப்பல்லையும் அடியோடு ஹிந்துமதம் பிடுங்கி விடப் பட்டிருக்கின்றன.

(11) மத்தேயு 5 ல் 39 தீமையுடன் எதிர்த்து போராடாத தன்மை, அதாவது, உனது வலது கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக்கொடு:—இங்ஙனம் 44-வது வாக்கியம் வரையிலும் பார்க்கின்ற உபதேசங்களைப்பற்றி ஆழ்ந்து ஆராயும் காலை, இவைகள் மானிட சுபாவத்திற்கு முற்றிலும் முரண் பட்டதாயும் அனுஷ்டிக்கப் பிரயாச முடையதாயும் காண்கின்றோம்.

உபதேச கர்த்தாவாகிய மேரி குமாரனுகிய இயேசுவாலும் கூட இவை அனுஷ்டிக்க முடியவில்லை என்று தன்னைப் பிடிக்கவந்த விரோதிகளை தான் தலைகீழாக புரட்டி கீழேவிழும்படி செய்ததாலும் (யோவான் 18-ல் 6) தன்னைப்பிடிப் பதற்காகவந்த அன்னவர்களை சாபம் செய்தமையாலும் (லூக்22-ல் 53) காட்டிக்கொடுத்த சிஷனை சாபம் செய்தமையாலும் (மார்க்கு 14-ல் 21) நன்குபுலனுகுகின்றன. சாபமோ கொலையைவிட மிகக்கொடுமையானதேயாம். சபிக்கப்பட்டவன் நரகவாசியாகு வானென்று கிருஸ்துமத ஆகமமும் ஒப்புக்கொள்ளுகின்றன. எனவே உபதேச கர்த்தாவால்கூட அவசரம் வந்தகாலை அனுஷ்டிக்கமுடியாமல்போன ஓர் உபதேசம் எவ்வளவு விலையுள்ளதென்றும் பொதுவானதென்றும் அன்பர்களே நீங்களே யோசித்துக் கொள்வீர்களாக.

ஆனுல் இவ்விஷயத்தில் இந்துமத உபதேசத்திற்குள்ள மகிமையைப்பாருங்கள்—"நீ துக்கமுடையவனுனுலும் மற்ருெருவனுடைய மனம் புண்படுமாறு எதையும் பேசக்கூடாது, (மனுஸ்மிருதி 2-ல் 161) "உன்மீது ஒருவன் கோபங்கொண்டபோதிலும் நீ அவன் மீது கோபங்கொள்ளவேண்டாம், உனக்குத் தீமைசெய்திருந்த போதிலும் நீ நல்லவார்த்தைகளைக்கொண்டு அவனை சந்தோஷமுண்டு பண்ணச் செய்யவேண்டும்" (மனுஸ்மிருதி 6-ல் 48) "ஜனங்களினின்றுமுண்டான அடாதமொழிகளைக் கேட்டால்பொறுக்கவும் ஒருவனை பரிஹசிக்காமலிருக்கவும் ஒருவனில் பொருமை, விரோதம் முதலியவை கொள்ளாம லிருக்கவும் வேண்டும்." (மனுஸ்மிருதி 6-ல் 47).

மட்டுமன்றி மனுஸ்மிருதி 6-ல் 92-ல் தர்மலக்ஷணங்கள் பத்தென்று கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று "மற்றவர்களுடைய தவறுதல்களை மன்னித்துவிடுவது, இன்னென்று, கோபம் உண்டாகத்தகுந்த வார்த்தைகளால் கோபம் கொள்ளாமலிருத்தல் என்பனவாம்." அன்புள்ள மகான்களே! இவ்வளவு உயர்தர உபதேசங்கள் ஏற்கனவே உண்டாயிருக்க மனித வர்க்கத்தினுல்-உபதேச கர்த்தாவகிய கிறிஸ்துவினுல் கூட அனுஷ்டிக்க முடியாத நிலைமையிலுள்ள இத்தகைய கிறிஸ்தவ உபதேசம் அனுவசியமென்று கூருமலிருப்பதற்கு நியாயமுண்டோ? இந்துமத உபதேசங்களை பூரணமாக அறியாமல் அறிந்ததென நடிக்கும் கிறிஸ்தவமதப் பிரசாரர்களான அப்பெரியோர்களின் மிகக் கேவலமான குறைவுதான் இஃதென்று கூருமலிருக்கவும் முடியுமா?

(12) மத்தேயு 5-ல் 28 "ஸ்திரீயை மோஹிப்பதற்கு அவளை பார்க்கக்கூடாதென்று விலக்குகின்றன. ஆனுல் இந்துமதம் அத்த

கைய பார்வைமாத்திரமன்று சாதாரண பார்வையைக்கூட விலக்கு கின்றன. (மனுஸ்மிருதி 2-ல் 179)

(13) மத்தேயு 5-ல் 34 "நீங்கள் சத்தியம் பண்ண வேண்டா மென்று உபதேசிக்கின்றன. இவ்வுபதேசம் புதிதல்லே. இது முன் காலத்திலேயே உலகத்தில் வேரூன்றின ஒன்றேயாம். இது. கி. மு. (B. C.) 540-க்கு முன் ஜீவித்திருந்த மஹானாகிய கிரேக் டாக்டர் பீஸா கௌரீஸ் (Dr. Peesa Gowrees) என்பவருடைய உபதே சமேயாம். அதாவது "நீ சத்தியம் பண்ணக்கூடாது, தேவ நாமம் சொல்லி சாக்ஷியம் சொல்லவும் கூடாது அது மகாபா வமேயாம், ஆனல் ஜனங்கள் தன்னுடைய வார்த்தைகளை நம்பக் கூடிய நிலையில் எட்டவேண்டிய முயற்சிகள் செய்யவேண்டியது. மானிட உரிமையேயாம்.''

(14) மத்தேயு 5-ல் 32 "நீ உன்மனைவியை தள்ளிவைக்கக் கூடாது என்று பார்க்கின்றோம்'' இவ்வுபதேசமும் அனுஷ்டானமும் இந்துமதத் தலைவர்களாகிய பிராமணர்களுக்கிடையே ஆதிகாலம் தொடுத்து இந்நாள் பரியந்தம் நடப்பிலிருக்கின்ற ஒன்றேயாம். எனவே, கிருஸ்துவின் இவ்வுபதேசம் ஒரு புது உபதேசமெனக் கொள்ள முடியாதென்று கூறுவது மிகை யாகாது.

இத்தகை இன்னும் அநேக தெளிவுகளை சுருதி, யுக்தி, அனுபவ பூர்வம் எடுத்து காண்பிப்பதற்கிருப்பினும் விடப விரிவை பயந்து, செத்த கடவுளை நம்பி (அதாவது இயேசுவில் நம்பி) சுபோதசக்தி மங்காமலிருக்கும் மகா ஜனங்களுக்கு முன் ஸ்தாலீபுலாக பாகப்படி அதாவது பானைச் சேற்றில் பதம் பார்ப்பதுபோன்று முற்கூறின சில தெளிவுகளைமட்டும் எடுத்துக் காட்டியிருக்கிறேன். மகா ஜனங் களே! நியாயமான தீர்மானத்தை செய்வீர்களாக! மேற்கூறின தெளி வுகளால் தானும் கிருஸ்து மதமானது மனிதவர்க்கத்திற்கு அவசிய முண்டான தேயில்லை என்றும் இம்மதம் மூலம் எவ்விதப்பயனும் மானிடவர்க்கத்துக்கு உண்டானதில்லையென்றும் நன்குபுலனுக வில் லையா ?

மகா ஜனங்களே! ஒரு விஷயத்தில் நன்மையில்லா விடினும் தீமையில்லாமலிருந்தால் போதுமென்பது உலகம் யாவும் ஏகமனதாக முறையிடுகின்ற ஒற்றல்லவோ? இங்ஙனமிருக்க இம்மதக் கொள்கை களினுல் உலகத்திற்கு எவ்வித நன்மையும் உண்டாகாமல் போனது மல்லாமல் சிலவிஷயங்கள் உலகத்திற்கும் தங்களுக்கும் மிக ஆபத் தான நிலைமையில் இருப்பதாக காண்கின்றோம். அவை, ஒன்று, கிருஸ்து கழுவேறி மரித்தமையால் பாபவிமோசன முண்டென்று

நம்புவதில் ஏதாவது பயனுண்டா என்று ஆலோசிக்குங்கால் நித்திய ஜீவனுக்கு (முக்தி குக்) விஸ்வாசம் மாத்திரம் போதுமென்கிற சித்தாந்தம் கிருஸ்தவர்களுடைய பெரும் தவறை காண்பிக்கின்றன. சத்திய வேதமென்றும் தெய்வ வசனமென்றும் அன்னவர்கள் நம்புகின்றன பைபிள்தானும் இக் கொள்கைக்கு பிரதிகூலியாய் நிற்கின்றன. (யாகோப் 2-ல் 14) "உலகரக்ஷகனுவதற்கு சிலுவையில் அறையப்படவேண்டுமென்றே, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது கொண்டு மனிதருக்கு முக்தி உண்டாயிற்றென்றே உள்ள விஸ்வாசம் மூடக்கொள்கைதானென்று 'குடாரஹானி' என்கின்ற நூல் 22-24ம் பாகங்களில் கூறியிருக்கின்றன. இந்நூலானது கிறிஸ்து மதப் பிரசார தூசிகளை கேரளத்தினின்றும் மலையேறச்செய்த சண்டமாருதனுகிய (கொடுங்காற்றுன்.) காலஞ்சென்ற சைப்பதுசனு உல்லாமக்தி தங்களால் இயற்றி கிருஸ்து மதமெனும் 'அத்திமரத்தை, அடியோடு வெட்டி எறிந்த கோடாரியாகிய 'கடோர குடாமென்றும், அரிய நூலுக்கு மறுப்பாக கோளகத் தோலிக்கா சமாஜத்தரால் இயற்றி வெளிப்படுத்தியதாம். எனவே 'அக்குடாரஹானி'யின், மேற்கூறின கூற்றுனது என் கூற்றல்லை. அக்கூற்றுகத்தோலிக் சமுதாய கூற்றுனதால் என் கூற்றைவிட விலையுள்ளதும் எனக்கு அனுகூலமானதுமேயாம். கத்தோலிக் சமுதாயத்தாரின் அக்கூற்றுனது யானை தன்தலைமீது மண் அள்ளிப் போடுவதுபோல் இருக்கின்றமையால் நான் சிரிக்கவும் நீங்கள் ஆனந்திக்கவும் அக்கூட்டத்தினர் இழியவும் காரணமாயிற்று. பாவம்! நாமென்ன செய்வோம்!

(2) கோணச் சிலுவையில் மூவ்வாணிகளால் தொங்கிச் செத்த கிருஸ்துவை ஒரு மனிதன் கர்த்தனென்று கூறுவானு என்று ஆலோசிக்குங்காலை ஒருபோதும் கூறமாட்டானென்று விளங்குகிறது. ஏனெனில் பரிசுத்த ஆவி மூலமல்லாமல் கிறிஸ்துவை கர்த்தரென்று ஒருவனும் கூறமாட்டான்(ஒன்று கொரிந்தியர் 12-ல் 3) இதனுல் மானிடபுத்தி ஒருபோதும் கிருஸ்துவை கர்த்தரென்று ஒப்புக்கொள்ளாதென்றும் ஒப்புக்கொள்ளவேணுமாயின் பரிசுத்த ஆவி மனித புத்திக்கு மாற்றம் கொடுக்கவேணுமென்றும் புலனுகின்றது. இன்று இயேசுவை கர்த்தரென்று கூறுகிறவர்கள் யாவரும் பரிசுத்த ஆவிமூலம் கூறுகின்றனரா யென்று கேட்கும் கேள்விக்கு, ஆம், என்று பதிலளிப்போமாயின் நாமின்று உலகில் பார்க்கின்ற கிருஸ்தவர்கள் யாவரிலும் பரிசுத்த ஆவி உண்டென்று ஒப்புக்கொள்ள வேண்டும். அங்கனம் ஒப்புக்கொண்டால் கிருஸ்தவர்கள் வேதமெனக்கொள்ளும் பைபிளே அதற்கு முரணுக நிற்கின்றது. ஏனெனில்,

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவை கர்த்தரென்று சொல்லுவதுமட்டு மல்ல, பரிசுத்தஆவிவந்தகாலே அப்போஸ்தலர்கள் ஒருபாஷையில் பேசினதை பல பாஷைக்காரரான மனிதர்கள் தங்கள் தங்கள் பாஷைகளில் அறிந்துக் கொண்டார்களென்று அப்போஸ்தலநடவடி இரண்டாவது அத்தியாயம் கூறுவது போன்று ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் ஒருபாஷை பேசினல் பல பாஷைகாரர்களாகிய ஏனையோர்கள் தங்கள் தங்கள் பாஷைகளில் அறிந்து கொள்ளவேண்டும். சாதாரண கிறிஸ்தவர்களை விட்டுவிடுவோம். கிறிஸ்தவபோதர்களான மிஷனரிகள்கூட அங்ஙனம் பேசினதாகவும் பேசுவதாகவும் நிரூபணம் செய்யமுடியாது. ஆகையால் கிருஸ்துவை கர்த்தரென்று ஒப்புக்கொள்வது மாத்திரமல்ல, கிறிஸ்துவை கர்த்தரென்று போதிக்கும் மிஷனரிகளும்கூட பரிசுத்த ஆவி பெறவில்லையென்றும் அவர்கள் கிறிஸ்துவை கர்த்தரென்று கூறுவதும் பிரசங்கிப்பதும் பரிசுத்த ஆவியினலல்ல வேறெதுவோ சொந்த காரியத்திற்காக என்றும் நம்பக்கிடக்கின்றன. (ஆனல் கிறிஸ்துமத சித்தாந்தப்படியுள்ள பரிசுத்த ஆவியோ மிகத் தமாஷான முறையில் தான் இருக்கின்றன. ஆவி என்பது சூக்ஷமேயாம். ஆனல் கிறிஸ்து மத பரிசுத்த ஆவிபுருவைப் போலவும் அக்கினிமயமானநாவைப்போலவும் இருக்கின்றன (மத்தேயு 3-ல் 16, அபோஸ்தலநடவடி 2-ல் 3).

கனவான்களே! ஒவ்வொரு கிறிஸ்துவர்களும் கிறிஸ்துவை கர்த்தரென்று கூறுவது பரித்த ஆவியினல்தானென்று நிரூபிக்க முடியாவிட்டால் கிறிஸ்துவை கர்த்தரென்று அன்னவர் கூறுவது கபடமென்றும் இந்த வார்த்தையும் விஸ்வாசமும் பயனற்றதென்றும் உறுதிப்படுத்த வேண்டியிருக்கின்றன.

(3) கிருஸ்து கழுவேறிச் செத்தினல் கிறிஸ்தவர்களுக்கு பாபவிமோசனம் கிடைத்து அவர்கள் மோக்ஷத்திற்கு அவகாசிகளென்று அவர்கள் நம்புவதுண்மையாயின், கழுவேற்ற மென்கிற விஷயத்தை மகாசுகிர்த மென்றல்லவோ எண்ணவேண்டியது. இக்காலத்து மகா பாதகர்களை தூக்கிக் கொல்லும் கழுவின் ஸ்தானத்தில் தான் அக்காலத்து சிலுவை இருந்ததென்று கிருஸ்தவர்களும் ஏனையோர்களும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. என்னும் கிறிஸ்தவர்களுடைய விஸ்வாசப்படி அது நித்திய ரக்ஷிப்பின் கருவியாயிற்று. அங்ஙனமிருக்க ஒரு கிறிஸ்தவ சகோதரனை கழுவேறி என்று அழைப்போமாகின் அச்சகோதரன் கோபம் கொள்ளாமல் மிகச் சந்தோஷத்துடன், அழைக்கின்றவனுக்கு நன்றி செலுத்த வேண்டாமா? ஆனல் இதற்கு முரணக கழுவேறி என்று அழைப்போ

மாகின் ஒரு கிறிஸ்தவன் தனனைக் கழுவேதம் என்று அழைத்தவன் மீது கோபப்படுகின்றமையால் அவ்வழைப்பானது தன் மனதுக்கு திருப்தியையும் சந்தோஷத்தையும் அளிக்கிறதில்லை என்று அனுபவம் சான்று பகருகின்றது. எனவே தமது மனதிற்கு தற்கால திருப்தியும் சந்தோஷமும் கொடுக்காததாகிய ஓர் விஷயம் தமது நித்திய திருப்தியும் நித்திய சந்தோஷமுமாகிய முக்திக்குக் காரணமென்று கிறிஸ்தவர்கள் விஸ்வசித்திருக்கிறதென்றும் நாம், அதில் விஸ்வசிக்கும் பொருட்டு நமக்கு உபதேசம் செய்புங்காலை நாம் அன்னவர்களின் அறியாமையைப்பற்றியும் நினைத்து அனுதாபப்படவும் ஆச்சரியப்படவும்செய்யாமல் என் செய்வோம்? சத்திய சந்தனுகிய இறைவன் இந்த பலஹீன நிலமையிலிருந்து நமது சகோதர சகோதரிகளாகிய கிறிஸ்தவ சமாஜத்தைக் காப்பாற்றி சத்திய மார்க்கத்தில் சேர்த்து நித்தியானந்தம் அளிப்பானுக.

நித்திய ஆனந்தமாம் முக்தியை நாடுவோன், சத்திய வேத ஆதாரமாம் மதத்தைத்தேடுவான்.

N. B.—மேற்கூறிய இருகேள்விகளை ஏனையோர்கள் பிரத்தியேகமாக ஹிந்துக்கள் நம்மீது வினவி தகுந்த பதில் பெற்றுக் கொள்வார்களென நம்புகின்றனம்.

---

# ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சிமுறை.

## இங்கிலாந்தும் ஆப்கானிஸ்தானமும்

1919-ம் வருஷம் அமீர் அமானுல்லாகான் அவர்களுடைய ஆட்சியின் கிழ் ஆப்கானிஸ்தானம் வந்தது முதற்கொண்டு அந்நாடானது தன்னுடைய நீண்ட தூக்கத்தை விட்டெழுந்து முன்னேற்றமடைவதில் அதிக ஊக்கமும் கவலையும் கொண்டிருக்கின்றது. உலகத்தின் இதர பாகங்களிலிருந்து தனியே பிரிந்து தனித்து நிற்க ஆப்கானிஸ்தானம் விரும்பவில்லை. உலகின் இதர பாகங்களில் நடைபெறும் சகல விஷயங்களிலும் தானும் கலந்துகொண்டு தன்னுடைய நாட்டின் முன்னேற்றத்தைக் கவனிப்பதுடன் உலகின் முன்னேற்றத்திற்கும் தன்னால் செய்யக்கூடியதைச் செய்யும் விஷயத்தையும் ஆப்கானிஸ்தானம் இப்பொழுது கவனித்து வருகின்றது. மலைகளால் சூழப்பட்ட

இப்பிரதேசத்தில் (ஆப்கானி ஸ்தானத்தில்) என்ன நடைபெறுகின்ற தென்பதைக் கவனிப்பதில் இங்கிலாந்து அதிக ஊக்கங்கொண்டிருக் கின்றது. ஏனெனில் ஆப்கானி ஸ்தானத்திற்குச் சமீபத்தில் இந் தியா இருப்பதுதான் காரணமாகும்.

## காஜி அமீர் அமானுல்லாகான்

காலஞ் சென்ற அமீர்ஹபீபுல்லாகானின் மூன்ருவது குமா ராகிய காஜி அமீர் அமானுல்லாகான் தம்முடைய சிற்றப்பன் நஸருல்லா கானிடமிருந்து சிம்மாசனத்தைக் கைப்பற்றினுர் அமீர் ஹபிபுல்லாகான் ஜலாஸாபாதில் கொலை செய்யப்பட்டவுடன் நஸருல் லாகான் ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சியைத் தம் வசப்படுத்திக் கொண்டிருந்தார். அமீர் அமானுல்லாகான் நல்ல தேக திடகாத்திர முள்ளவர். உயரம் நடுத்தரம் வயது சுமார் 34 இருக்கும். அவருக்கு சுயமான பாஷையாகிய பாரசீகம்தவிர ஆங்கிலம், பிரஞ்சு முதலிய ஐரோப்பிய பாஷைகளும் நன்கு தெரியும்.

தம் நாடானது உலகின் இதர நாடுகளின் முன்னேற்றத்துடன் சேர்ந்து முன்னேற்ற மடையாவிடில் தம் நாடு பெற்றிருக்கும் சுதந் தரத்தை நெடுநாளைக்குக் காப்பாற்ற முடியாதென்பதை அமீர் அமா னுல்லாகான் அவர்கள் உணர்ந்து கொண்டிருக்கிருர். இக் காரணம் பற்றி அவர் தம் அரசாட்சியின் எல்லா பிரிவுகளிலும் முன்னேற்றத் திற்கான சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்திருக்கிருர். தம்முடைய நாட்டின் முன்னேற்ற விஷயங்களைக் கவனிப்பதில் அன்னியர்களு டைய ஆலோசனையையும் உதவியையும் இவர் தள்ளி விடுவது கிடை யாது. இதரர்கள்கூறும் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பதில் இவர் அதிகநோக்க முள்ள வராக இருக்கிருர்.

## ஆப்கானிஸ்தானத்தில் மேல்நாட்டினர்கள்.

அமீர் அமானுல்லாகான் அவர்கள் பட்டத்திற்கு வரும்வரை யில் ஆப்கானிஸ்தானத்தில் மேல் நாட்டினர் குடியிருப்பதற்கென்று தனிஇடங்கள் இருந்தது கிடையாது. ஆனுல் இப்பொழுதோ அவர் கள் குடியிருப்பதற்கென்று அன்னிய நாட்டு வாசஸ்தலங்கள் பல அமைக்கப்பட்டு வருகின்றன. அன்னிய நாட்டினர் வாசஸ்தலங்கள் நாளடைவில் பெருகியும் விசாலமடைந்தும் வருகின்றன.

## ஏதேச்சாதிகாரம் பறந்துவிட்டது.

அமீர் அமானுல்லாகான் அவர்கள் 1922-ம் வருஷத்தில் தம்மு டைய ஏதேசாதிகாரத்தைக் களைந்தெறிந்து சட்டவரம்பிற்குட்பட்டு

நீதி பரிபாலனம் செய்ய ஆரம்பித்தார். ஆப்கானிஸ்தானத்தில் வாசஞ் செய்யும் முஸ்லிம்களல்லாதார்களிடம் இவர் சகிப்புத்தன்மையுடனும் தாராளநோக்குடனும் நடந்து கொள்ளுகிறார். ஆப்கானிஸ்தானத்தில் இந்தியர்கள் ஆயிரக்கணக்காக வாசஞ் செய்கிறார்கள். யூதர்களும் அர்மீனியர்களும் பலர் இருக்கின்றனர். அவரவர்களுடைய பழக்க வழக்கப் படியும் நடந்துகொள்வதற்கு இவர் அனுமதித்திருக்கிறார். ஆனால் அன்னிய மதத்தினர்கள் ஆப்கானிஸ்தானத்தில் தங்களுடைய மதசம்பந்தமாக பிரசாரம் செய்ய அனுமதி கிடையாது. அன்னிய மதத்தினர்கள் தலைவரி செலுத்த மறுக்கக்கூடாது. இவ்விரு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ளத்தயாராய் இருக்கும் அன்னிய நாட்டினர் தம்பழக்க வழக்கங்கள் பிரகாரம் எவ்வித தட்டுத்தடங்கலின்றியும் வாழலாம். மேல் நாட்டுப் பாதிரிமார்கள் ஆப்கானிஸ்தானத்திற்குள் வருவதினின்றும் இதற்குமுன் அறவே தடுக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் இப்பொழுது வைத்திய சிகிச்சைக்காக வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

## நாட்டின் மாகாணப் பிரிவினைகள்.

பரிபாலனத்திற்காக ஆப்கானிஸ்தானம் ஐந்து பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. (1) காபூல், (2) கந்தஹார், (3) ஹீரத், (4) மிஸாரெஷரீப் (5) காட்டகான் படக்ஷான் இந்த ஐந்து பெரும் பிரிவுகள் போக வேறு சிறு மாகாணங்கள் நான்கும் இருக்கின்றன. அவைகள் (1) ஜலாலாபாட், (2) கோஸ்ட் (3) பரேஹ் (4) மைமனா. ஒவ்வொருமாகாணமும் ஒரு கவர்னரின் கீழ் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. நாட்டின் பொதுப் பரிபாலனத்தை கவனிக்க வெவ்வேறு மந்திரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கல்வி இலாகா, யுத்த இலாகா, வியாபார இலாகா, நீதி பரிபாலன இலாகா, பாதுகாப்பு இலாகா, பொக்கிஷ இலாகா என ஒவ்வொரு இலாகாவும் தனித்தனி மந்திரி பின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றது. மந்திரிச்சபைக்குத் தலைவர் அமீர் அவர்களே தான். ஆப்கானிஸ்தானத்தில் இரண்டு சபைகளிருக்கின்றன. ஒன்று தஸ்தூரேஷாஹி அல்லது ராஜாங்க சபை; மற்றொன்று கவானீன முல்கீ அதாவது சட்டசபை.

## அரசர் குடிகளுக்கு பேட்டிகொடுக்கும் முறை.

ஆப்கானிஸ்தானம், ஷரீயத்தின் சட்டப்பிரகாரமும் குர்ஆனின் சட்டங்களைப் பிரகாரமும் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது. நீதிபரிபாலன விசாரணைக்கு கோர்ட்டுகளிருக்கின்றன. இக்கோர்ட்டுகளி

லிருந்து அப்பீல்கள் மேல் கோர்ட்டுகளுக்குச் செல்லும். எல்லாக் கோர்ட்டுகளுக்கும் தலைமையாக ஹைகோர்ட்டு ஒன்று இருக்கின்றது. ஆப்கானிஸ்தானத்தின் ஹைகோர்ட்டு காபூலில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. ஆதிகாலத்து மொகலாய சக்கரவர்த்திகளைப் போலவும் முஸ்லீம் அரசர்களைப் போலவும் குடி ஜனங்களுக்கு பேட்டிகொடுத்து அவர்களுடைய குறைகளைக் கேட்பதற்காக வென்று அமீர் அவர்கள் வாரத்தில் ஒரு நாளை ஒதுக்கி வைத்து குடிகளின்குறையை நேரில் விசாரித்துபரிகாரம் செய்துவருகிறார். ஆப்கானிஸ்தானத்தில் நீதிபரிபாலனம் துரிதமாகவும் ஜனங்களுக்குக் கஷ்டமின்றியும் நடைபெற்று வருகின்றது.

## நாட்டின் வருஷ வரவு செலவு.

ஆப்கானிஸ் தானத்திற்கு வருஷ மொத்த வருமானம் 50,000000 ரூபாயாகும். இவ்வருமானம் அரசாங்கத்திற்கு நிலவரியிலிருந்தும் ஏற்றுமதி இறக்குமதி வரிகளிலிருந்தும் கிடைக்கின்றது. நாட்டின் பரிபாலனச் செலவுகள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றமையால் நாட்டின் இவ் வரும்படி செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆப்கானிஸ்தானத்திற்கு செலுத்திவந்த ஸப்ஸிடியும் (கட்டணம்) நின்றுபோய் விட்டது. அன்னியநாடுகளிடமிருந்து கடன் வாங்குவதற்கு அமீர் அவர்களுக்குப் பிரியமில்லை. அன்னிய நாட்டினர்களிடம் கடன்வாங்கினால் அன்னிய நாட்டினர்கள் தாங்கள் கொடுக்கும் கடனுக்கு சாதகங்கள் செய்து கொடுக்கும்படியாக கேட்பார்களென்பதையும் அப்படிச்சாதகங்கள் செய்துகொடுக்க நேரின், ஆப்கானிஸ்தானம் தன்னுடைய சுதந்தரத்தைஇழக்க நேரும் என்பதையும் அமீரவர்கள் நன்குணர்ந் திருக்கின்றார்.

## நாட்டின் இராணுவம்.

ஆப்கானிஸ்தானத்தில் இராணுவம் மிகவும் திறமையாக அமைக்கப்பட்டுள்ளது. இருபது வயதடைந்த ஒவ்வொரு ஆடவனும் இரண்டு வருஷத்திற்கு இராணுவச்சேவை செய்யவேண்டுமென்பது கட்டாயம். அமீர் அமானுல்லாகான் அவர்கள் பட்டத்திற்கு வந்தவுடன் துருக்கியிலிருந்து இராணுவ உத்தியோகஸ்தர்களை வரவழைத்து இராணுவத்தை நல்லவிதமாகப் பயிற்சி செய்வித்தார். ஆனால் இப்பொழுது துருக்கி ஆபீர்களுக்குப் பதிலாக ஜர்மனியின் ஆபீஸர்கள் இராணுவத்தை நிர்வகித்து வருகிறார்கள். இராணுவப் பள்ளிக் கூடங்கள் பெரிய பட்டணங்கள் தோறும் ஸ்தாபிக்கப்பட்

டிருக்கின்றன. அமீர் அவர்களின் மூத்தகுமாரராகிய இளவரசரும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் முக்கியஸ்தர்களுடைய குமாரர்களும் இராணுவப் பயிற்சிக்காக பிரான்சு தேசத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆபகானிஸ்தானத்தில் இருக்கும் நிரந்தர இராணுடிவப்படைத்தவிர, ஆபத்துக்காலத்தில் குடிகள் எல்லோருடைய உதவியையுமே அமீரவர்கள் எதிர்பார்க்க முடியும்.

## ஆகாய விமானப்படை.

ஆப்கானிஸ்தானத்தில் ஆகாய விமானப்படையும் பலப்பட்டு வருகின்றது. தசற்மயம் ஆப்கானிஸ்தானத்தில் 12 ஆகாய விமானங்களிருக்கின்றன. இவ்விமானங்கள் 'ருஷீபசோவியட்' அரசாங்கத்தாரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டவை. ஆகாயவிமானங்களை நடத்திச் செல்லும் உத்தியோகஸ்தர்களும் முக்கியமாக ஜர்மனியர்களும் ருஷ்யர்களுமே இருக்கின்றனர். ஜர்மனியர் காபூலில் ஆகாய விமானப் பயிர்ச்சி பள்ளிக்கூடமொன்றை ஸ்தாபித்திருக்கின்றனர். ஆப்கானியர்கள் சிலர் ஆகாய விமானப் பயிற்சி பெறுவதற்கு மாஸ்கோவுக்கும் செல்லுகிறார்கள்.

## ஆப்கானிஸ்தானத்தின் வியாபார நிலமை.

ஆப்காளிஸ்தானத்தினுடைய வியாபாரம் முக்கியமாக இந்தியாவுடனும் ருஷியாவுடனுமே நடைபெறறு வருகின்றது. இங்கிலாந்துக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும்1922-ம்வரு ஓர்உடன்படிக்கைநடந்தது. ஆப்கானிஸ்தானம் இந்தியாவிலிருந்துபட்டு,பருத்தி,தேயிலை, பெட்ரோல், காகிதம், மெழுகுவத்தி, இரும்பு, செம்பு, தோல், தையலியந்திரங்கள், முதலியவைகளை இறக்குமதி செய்கின்றது. ஆப்கானிஸ்தானம் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சாமான்களாவன:— பெருங்காயம், உலர்ந்த பழங்கள், கம்பளங்கள், ஆட்டுத்தோல், ஆட்டு உரோமம், குதிரைகள், முதலியவையாகும். ஆப்கானிஸ்தானம் ருஷியாவுடனும் 1921-ம் வருஷத்தில் ஒரு வியாபார உடன்படிக்கை செய்துகொண்டது. ருஷியாவிலிருந்து ஷாமூவாய் தோல்கள், சர்க்கரை முதலியவைகளை இறக்குமதியாகின்றது. பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயங்கள் ஜலாலாபாதிலும் கந்தஹாரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஸோவியட் கவர்ன்மெண்டு ஸ்தானிகர் காரியாலயங்கள் ஹீரத்திலும் மிஸாரஷரீபிலும் இருக்கின்றன.

## சுதேச கைத்தொழில்களில் அமீரவர்களின் ஊக்கம்.

ஆப்கானிஸ்தானத்தில் பெரிய தொழில்களேனும் தொழிற்சாலைகளேனும் இதுவரை ஸ்தாபிக்கப்படவில்லை. நாடு முழுவதிலும்

யுத்தமருந்துச் சாலைகள் பல சிறு அளவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இச் சாலைகளில் கத்திகள், துப்பாக்கி ஈட்டிகள் முதலியவைகள் தயாராகின்றன. பெரும் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் ஜர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் முரட்டு மண்வெட்டிகள், சுத்தில்கள் முதலியவைதான் செய்யப்படுகின்றன. உயர்ந்த தினுசு ஆயுதங்கள் வேண்டுமாயின் ஜப்பானிலிருந்தும் ஜர்மனியிலிருந்தும் தான் இறக்குமதி செய்யவேண்டும். உள்நாட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்பதில் அமீர் அவர்களுக்கு அதிக ஆவலும் ஊக்கமும் உண்டு. அமீர் அவர்கள் ஆப்கானிஸ்தானத்தில் தயாராகும் துணிகளையும் பூட்ஸ்களையும் மட்டுமே அணிகிறார். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் இதே விதமாக அணிய வேண்டுமென்பதாக அமீர் அவர்கள் மிகவும் கண்டிப்பான உத்திரவு பிறப்பித்திருக்கிறார். மார்க்கப் புத்தகங்கள் யுத்த தளவாடங்கள் இவைகள் தவிர இதர சாமான்கள் மீது அமீர் அவர்கள் ஏற்றுமதி வரியை அதிகமாக விதித்திருக்கிறார். சில சாமான்கள் மீது சாமான்களின் விலைக்கு 100-க்கு 200, வீதமும் இறக்குமதி வரி விதிக்கப்படுகின்றது. ஆப்கானிஸ்தானத்தின் வியாபார ஸ்தலங்கள் பிஷாவர் பாரசீனர் கொபட்டா முதலிய விடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் இருக்கும் ஆப்கன் ஸ்தானிகர் கார்யாலயங்களிலெல்லாம் ஆப்கன் வியாபார இலாக்காக்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆப்கானிஸ்தானத்தில் பைங்ககள் கிடையா. ஏனெனில், பைங்குகள் ஸ்தாபித்தால் வட்டிவாங்கியாக வேண்டும். வட்டி வாங்குவது குர்ஆனின் சட்டப்படி தடுக்கப்பட்டதாகும். வியாபாரிக் கல்வியின் போதனைக்காக ஆப்கானிஸ்தானத்தில் பள்ளிக்கூடங்கள் கிடையா. ஆனால் கவர்ன்மெண்டு தொழிற்சாலைகளுக்குள் யார் வேண்டுமானாலுஞ் சென்று சாமான்கள் எப்படித் தயார் செய்யப்படுகின்றன வென்பதைக்கற்றுக்கொள்ளலாம்.

## நாட்டின் உலோகங்கள்.

ஆப்கானிஸ்தானம் இராஜ்ஜியத்தில் இருக்கும் உலோகங்களை வெட்டியெடுத்து அதை உபயோகிக்கும் விஷயம் இதுவரை கவனிக்கப்படவில்லை. ஈரானிலும் துருக்கிஸ்தானம் இராக் முதலியவிடங்களிலும் எண்ணெய்க் கிணறு ஊற்றுகள் இருத்தலால் ஆப்கானிஸ்தானத்திலும் எண்ணெய்க் கிணறு ஊற்றுகள் இருக்க வேண்டுமென ஊகிக்கப்படுகின்றது. ஆனால் எண்ணெய்க்கிணறு ஊற்றுகள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. ஆப்கானிஸ்தானத்தில் தங்கம், இரும்பு,

நிலக்கரி, காரீயம், கந்தகம் முதலியவைகள் இருக்கின்றன. ஜர்மனிக் கம்பெனி யொன்று ஆப்கானிஸ்தானத்திலுள்ள விலையுயர்ந்த உலோகச்சுரங்கங்களை யெல்லாம் வெட்டியெடுக்க அனுமதி கோரி மனு செய்திருப்பதாகவும், அம்மனு அமீரவர்களால் ஆலோசனையிலிருந்து வருவதாகவும், தெரிகின்றது.

## ஆப்கானிஸ்தானத்தில் ஜர்மனியின் பிரசாரம்.

அன்னிய நாட்டு ஸ்தானிகர் காரியாலயங்களுக்கு வெளியில் பிரிட்டிஷார் அதிகமாகக் காணப்படுவதில்லை. காபூலில் ஜர்மன் கம்பெனி யொன்று இருக்கின்றது. இக்கம்பெனி அடிக்கடி துண்டுப் பிரசுரங்களைப் பிரசுரித்து வருகின்றது. முஸ்லிம்கள்மீது ஆதிக்கம் கொண்டநாடு ஒன்றும் ஜர்மனிக்குக் கிடையதென்றும், ஜர்மனி முஸ்லிம்களுக்கு ஆப்த நண்பனாகுமென்றும், ஜர்மனி தயார் செய்யும் இயந்திரங்கள் தான் உலகத்தில் உயர்ந்தவை யென்றும் உறுதியானவை யென்றும் அக்கம்பனி தன்னுடைய துண்டுப் பிரசுரங்களில் கூறிவருகின்றது. இந்தத் துண்டுப் பிரசுரங்கள் பாரசிகப் பாஷையில் பிரசுரிக்கப்பட்டு ஆப்கானியர்களுக்கு இலவசமாக பட்டவாடா செய்யப்படுகின்றன. இக்கம்பெனியானது சிமென்டு, சுண்ணும்பு, இயந்திரங்கள் சாயச்சாமான்கள் முதலியவைகளை இறக்குமதி செய்து வியாபாரஞ் செய்கின்றது. தோல்களை வாங்கி ஜர்மனிக்கு ஏற்றுமதி செய்கின்றது. ஆப்கானிஸ்தானத்தில் ஜர்மனி நாட்டின் டாக்டர்கள் இன்ஜினீர்கள் பலர் இருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானத்திற்கும் ஜர்மனிக்குமிடையில் 1926-ம் வருஷம் மார்ச்சுமாதம் 3-ந்தேதியன்று நேச உடன்படிக்கையொன்று கையெழுத்து செய்யப் பட்டது. வியாபார சம்மந்தமான உடன்படிக்கை யொன்று சமீபத்தில் கையெழுத்தாகுமென்று சொல்லப்படுகின்றது.

## ஆப்கானிஸ்தானத்தில் ருஷ்யர்கள்.

ஆப்கானிஸ்தானத்தில் ருஷ்ய பத்திரிகாசிரியர்களும், மின்சார வேலைசெய்பவர்களும், ரோடு வேலைகளை மேற்பார்ப்பவர்களும் பலர் இருக்கின்றனர். இவர்கள் தங்கள் தங்களுடைய தொழில்களைச் செய்வதுடன், பிரிட்டனுக்கு விரோதமாக பிரசாரம் செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். ருஷ்ய துருக்கிஸ்தானத்தில் ருஷ்யர்கள் போட்டிருக்கும் இருப்புப்பாதையை ஆப்கானிஸ்தான எல்லை தர்மியஸ்வரை ஸ்தாபித்திருக்கிறார்கள். இவ்வேற்பாட்டிலிருந்து ருஷ்ய துருக்கிஸ்தான் வாசிகள் ஆப்கானிஸ்தானம் வருதலும் ஆப்கானிஸ்தான் வாசிகள், ருஷ்ய துருக்கிஸ்தான் செல்லுதலும் இலகுவாக இருக்கின்றது. 1921-

வருஷம் ருஷ்ய ஆப்கானிய உடன்படிக்கை யொன்று கையெழுத்து செய்யப்பட்டது. இதைத்தவிர மூன்று வருஷகாலத்திற் கென்று 1926-வருஷம் ஆகஸ்டுமாதம் 31-தேதி மற்ெறாரு உடன்படிக்கை பாக்ஷாமணில் கையெழுத்து செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கை 1921-வருஷ உடன்படிக்கையை எவ்விதத்திலும் பாதிக்காது.

காபூலில் இருக்கும் ருஷ்யா, ஜெர்மனி ஸ்தானிகர்கள் ஒருவருக்கொருவர் அதிக நட்பாகவும், நேசமாகவும் இருக்கிறார்கள்.

## இதாலியும் பிரான்சும்.

ஆப்கானிஸ்தானத்தில் கல்வி ஸ்தாபனங்களில் பிரஞ்சுக் காரர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானத்திற்கு பிரான்சு தேசம் மோட்டார் வண்டிகள், யுத்த சாமான்கள், மின்சார விசிரிகள் மின்சார விளக்குகள் முதலிய மின்சார சாமான்கள் கம்பியில்லா தத்தந்தி சம்பந்தமான சாமான்கள் முதலியவை ஏற்றுமதி செய்கின்றது. ஆப்கானிஸ்தானத்திலிருந்து பிரான்சு தோல், கம்பளம் முதலியவைகளை இறக்குமதி செய்கின்றது. ஆப்கானிஸ்தானம் இதாலியுடன் வியாபாரம் சொற்பமாக வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆப்கானிஸ்தானத்தில் பட்டுப் பூச்சிகளை வளர்க்கவும் பட்டு தயார் செய்யும் தொழிலை அபிவிருத்திச் செய்யவும் ஆப்கானிய கவர்ண்மெண்டு இதாலிய நிபுணர் ஒருவரை நியமித்துக்கொண்டிருக்கின்றது. ஆப்கானிஸ்தானத்தின் விவசாய இலாக்காவிலும், காட்டிலாக்காவிலும் துருக்கியர்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## நாட்டிலுள்ள போக்குவரத்து வசதிகள்

ஆப்கானிஸ்தானத்தில் ரெயில்வேக்கள் கிடையாது. ஆனால் இருப்புப்பாதைத் தொடர்கள் இரண்டிடங்களுக்குப் போட பிரேரணை யொன்று ஆலோசனையில் இருந்து வருகிறது. மெர்வா, ஹிரத், சாமன் இந்த இடங்களுக்கொன்று. பால்க், காபூல், பெஷாவார் இந்த இடங்களுக்கு மற்றொன்று. இந்த இருப்புப் பாதைத் தொடர்களைப் போடுவதற்கு ஒரு அமெரிக்கர் 1922-ம் வருஷத்திலேயே முயற்சி செய்தார். ஆனால் சில எதிர்பாராத சங்கடங்கள் ஏற்பட்டமையால் அவர் இப் பிரேரணையை கவனிக்க முடியாமற் போய் விட்டது. அமெரிக்கர் விட்டுவிட்ட ஏற்பாட்டை ஜர்மனியர்களும், ருஷ்யர்களும் சேர்ந்து செய்வதாக ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானத்தில் நல்ல ரஸ்தாக்கள் இருக்கின்றன. சாமான்கள் போக்குவரத்து ஒட்டகங்கள் மீது நடக்கின்றது. ரஸ்தாக்களை சீர்ப்படுத்திப் புதிய பாதைகள்

போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வட கோடியிலிருந்து தென் கோடிக்கு விசாலமான நல்ல பெரும் ரஸ்தா ஒன்று போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

### சுயேச்சையில் ஆப்கானியர்கள் கொள்ளும் பெருமை

தங்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்தரத்தைக் குறித்து ஆப்கானியர்கள் அதிக பெருமை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரதி வருஷமும் ஜூலை மாதக் கடைசியில் தங்களுக்குக் கிடைத்த (சுதந்தர) தினத்தை மிகவும் வைபவமாகவும் குதூகலமாகவும் கொண்டாடுகிறார்கள். இக்கொண்டாட்டம் பிரதி வருஷமும் ஒரு வாரம் வரை கொண்டாடப்படுகின்றது. கொண்டாட்டத்தின் முதல் தினத்தன்று அமீர் அவர்கள் சுதந்தர யுத்தத்தின் அனாதைக் குழந்தைகள் சூழ (1919-ம் வருஷத்தில் இங்கிலாந்துடன் செய்யப்பட்ட யுத்தம் சுதந்தர யுத்தம் என ஆப்கானியர்களால் அழைக்கப்படுகின்றது) தம் குடிகளின் வீரத்தையும் தைரியத்தையும் புகழ்ந்து ஒரு பிரசங்கம் செய்கிறார். தம் நாட்டுக் குடிகளுக்கு முன்னுள்ள எதிர் காலத்தின் பெருமையை வெகுவாகப் புகழ்ந்து கூறுகிறார். கொண்டாட்டத்தின் இதர நாட்களில் யானைப் பந்தயங்கள், குதிரைப் பந்தயங்கள், சிலம்பம், போட்டி, குஸ்தி, வாண வேடிக்கைகள் முதலிய தமாஷாக்கள் நடை பெறுகின்றன.

### அமீர் அவர்களும் கலீபா ஸ்தானமும்

அமீர் அவர்கள் முஸ்லிம் உலகின் கலீபாவாகி விடுவதற்கு முயற்சி செய்வதாக ஆப்கானியர்கள் அல்லாத இதர நாட்டினர்கள் சிலர் கருதுகின்றனர். ஆனால், இவ்வித எண்ணம் கொள்ளுவதற்குச் சிறிதும் ஆதாயம் கிடையாது. கலீபாவென்ற பதவியைதாம் ஏற்றுக் கொண்டால் தம் நாட்டில் ஷியாக்களுக்கும் ஸுன்னிகளுக்கும் இடைவிடாது சச்சரவுகளும் கலகங்களும் சதா இருந்துகொண்டிருக்குமென்பதாக அமீர்அவர்கள் கருதுகின்றார். கலீபா ஸ்தானம் வகிக்க வேண்டுமென்று அமீர் அவர்களுக்கு இஷ்டமே கிடையாது.

### அகில இஸ்லாமிய ஐக்கியம்

ஆனால் எல்லா இஸ்லாமிய நாடுகளுக்குள்ளும் ஒரு ஐக்கியம் ஸ்தாபித்து அகில உலக இஸ்லாமிய ஒற்றுமையை உண்டாக்கவேண்டுடுமென்ற கொள்கையைஅமீர் அவர்கள் பலமாக ஆதரிப்பவர். இஸ்லாமிய நாடுகளின் ஐக்கியம் மேல் நாடுகளால் முறிபடக்கூடாதென்று அமீர் ஆவல் கொண்டிருக்கிறார். 1921-ம் வருஷம் துருக்கிக்கும்

ஆப்கானிஸ்தானத்திற்கும் ஏற்பட்ட உடன்படிக்கையில், அமீர் அவர்கள் துருக்கியை "இஸ்லாத்திற்காகப் போராடும் நாடு", என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். 1922-வருஷம் துருக்கியர்கள் கிரீஸின் மீது வெற்றியடைந்தபோது அமீர் அவர்களும் இதர நாட்டு முஸ்லிம்களைப் போலவே ஆப்கானிஸ்தானத்திலும் வெற்றி கொண்டாட்ட தினத்தைக் கொண்டாடினார். சென்ற வருஷம் ஜூன்மாதம் மக்கமா நகரில் நடைபெற்ற அகில இஸ்லாமிய மகாநாட்டிற்கும் அமீர் அமானுல்லாகான் அவர்கள் தம்முடைய பிரதிநிதியை அனுப்பியிருந்தார். தவிர ஆசியாக்கண்டநாடுகள் இதர நாட்டினர்களிடமிருந்து விடுதலை அடைய வேண்டுமென்பதில்அமீர் அவர்கள் அதிக ஊக்கங்கொண்டிருக்கிறார். துருக்கிக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் சமீபத்தில் நடந்த உடன்படிக்கையில் ஆசியாவின் நாடுகள் இதர தேசத்தினர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையச் செய்யவேண்டியதற்கும் முயற்சி செய்வது ஒரு நிபந்தனையாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

## நாட்டின் கல்வி நிலைமை

தம் நாட்டுக் குடிகளுக்கு நவீன முறைக்கல்வி போதிப்பதில் அமீர் அவர்கள் அதிக ஊக்கங்கொண்டிருக்கிறார். நவீன முறைக்கல்வியை தம் நாட்டுக் குடிகளுக்குள் பரவ வைப்பதில் அமீரவர்கள் தம்மாலான முயற்சிகளையெல்லாம் செய்துவருகிறார். ஒவ்வொருவரும் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்குக் கட்டாயம் அனுப்பவேண்டுமென்று சுவர்கள் தோறும் பெரிய எழுத்துக்களில் விளம்பரங்கள் ஒட்டப் பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பத்தவறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அப்பொழுதும் அவர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பத்தவறினால் அவர்கள் வேலையிலிருந்து கூட நீக்கப்படுகிறார்கள். எலிமெண்டரி பாடசாலைகளும் சகெண்டரி பாடசாலைகளும் நாடெங்கும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. காபூலில் உயர்தரக் கலாசாலைகள் மூன்று இருக்கின்றன. அவைகளுள் புராதனமானது ஹபீபுல்லா என்னும் கலாசாலையே. அக்கலாசாலையானது காலஞ்சென்ற அமீர் ஹபீபுல்லா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். மற்ற இரு கலாசாலைகளும் அமீர் அமானுல்லாகான் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை. சிவில் உத்தியோகஸ்தர்களுக்கென்று தனிப் பள்ளிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஆட்சி முறையைப்பற்றியும் நிர்வாகத்தைப்பற்றியும் போதனை

கள் கொடுக்கப்படுகின்றன. காபூல் கவர்னரவர்கள் உட்பட இதரர்கள் வந்து நாட்டின் நிர்வாகத்தைப்பற்றி அக்கலாசாலையில் பிரசங்கம் செய்வார்கள். உயர்தரக்கல்வி கற்பதற்காகவென்று வருஷந்தோறும் அநேக மாணவர்கள் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் அனுப்பப்படுகிறார்கள். பெண்கல்வியில் அமீர் அவர்கள் அதிக ஊக்கமும் அக்கரையுங் கொண்டிருக்கிறார். அமீர் அமானுல்லாகான் அவர்களின் தாயாரால் ஸ்தாபித்துள்ள பெண் பாடசாலையில் தற்சமயம் இரண்டாயிரம் பெண்களுக்கதிகமாக படிக்கிறார்கள்.

## நாட்டின் இதர சீர்திருத்தங்கள்

நாட்டில் இன்னும் அநேக மாறுதல்களும் சீர்திருத்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆடவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தனித்தனி வைத்தியசாலைகளும் சிகிச்சை சாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்களுக்கு விவசாயத்தில் ஊக்க முண்டுபண்ணுவதற்காக மாதிரிப் பண்ணைகள் பல ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. பெரிய பட்டணங்களில் சித்திரங்களும் கலைகளும் போதிப்பதற்கு பல பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறன. காபூலில் மியூஸியம் (காட்சிசாலை) ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

## தந்திதபால் வசதிதள்.

காபூலுக்கும் பெஷாவருக்கும்இடையில் தந்திக்கம்பிகள் போடப்பட்டிருக்கின்றன. ஆப்கானிஸ்தானத்தின் பெரிய பட்டணங்களிலெல்லாம் டெலிபோன் வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. நிபலுஸ்ஸராஜில் மின்சாரவசதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அமீரவர்கள் மாளிக்கைக்கும் பிரபுக்களுடைய வீடுகளுக்கும் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

## புதிய பட்டண அமைப்பு

ஆப்கானிஸ்தானத்தில் அரசாங்கப்பத்திரிகையாகிய 'அமானே ஆப்கன்' தவிர 'இத்திஹாதே மஷ்ரகி' என்றபத்திரிகையும் ஒன்றிருக்கிறது. காபூலில் பிரதி வருஷமும் வெள்ளம் வருவது வழக்கமாயிருப்பதால் அமீரவர்கள் " தாருல் அமன் " என்ற புதியபட்டணமொன்றை அமைத்து வருகிறார். இப்பட்டணம் தான் இனி ஆப்கானிஸ்தானத்தில் தலைநகரமாக இருக்கும். இந்நகரத்தில் மேல்நாட்டு முறைப்படி விசாலமான ரஸ்தாக்கள் நந்தவனங்கள், தோட்டங்கள், அழகிய கட்டங்கள் முதலியவைகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

" இந்தியன் ரிவியூ "

# தர்மம்

மௌ. ஆ. அபுல் ஹூதா.

தர்மம் என்பது யாது? என்று நாம் கேட்போமாயின் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு வகையான விடைதான் கிடைக்கின்றது. ஆசிப்போர்கட்கு ஆசிப்பதைக் கொடுப்பதெனச் சிலரும், சன்மார்க்கமென்று வேறு சிலரும், நியாயபாதுகாப்பென்று மற்றும் சிலரும் கூறுகின்றனர். மதமெனக் கூறுபவரும் உளர். இவைகளில் எந்த ஒன்று தான் சரியானதென ஆராயுங்கால் தர்மம் என்னும் பதத்தின் கௌரவமற்ற கருத்துதான் நமக்கு அந்த ஒவ்வொரு பொருட்களினுல் புலனுகின்றது. ஆதலின் மேற்கூறப்பட்ட அப்பொருள்களனைத்தையும் ஒருங்கே சேர்த்துப் பார்த்தால் சற்றேறக்குறைய ஒருவாறு அப்பதத்தின் பொருள் காணப்படுகின்றது. ஆனுல் உயர்ந்ததான அவைகளின் பரவுதல் செல்லாத ஆழத்திலும், விரிவிலும், உயரத்திலும் இருந்து கொண்டு தன்னில் சிறந்த ஜோதியும், ஆனந்தமும், பிரபுத்துவமும் மிளிரும் வண்ணம் தர்மம் என்பது பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

பதத்தின் கருத்தைப் பார்ப்போமாயின், தர்மமென்னப் படுவது உலகத்தின் சாதாரண செயலேயாம். அதாவது, மனிதச் செயல்களின் திட்டமான கருத்து சுகம் கிடைப்பதென்பதாதலின், அச்சுகத்துக்கென்று உலகத்துடனும் இறைவனுடனும் கிஞ்சித்தும் வேற்றுமையில்லாமல் ஐக்கியப்பட்டு ஒழுகுவதற்கு மனிதனுக்குத் தேவையான முறை அல்லது நீதி என்பதுதான் தர்மமென்பது. எனவே ஒவ்வொருவனுடைய கடமைக்கும் அவனுடைய தர்மமென்றே கூறலாம். அப்படிப்பட்ட கடமையை நிறைவேற்றுவதற்கு அவனவனும் தன்தன் இயற்கைத் தன்மையாகிய ஸ்வபாவத்தை ஒரு மேலான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமேயாகும். ஒருவனை இத்தகைய உயரிய நிலைமைக்கு நடத்துவதற்கு ஏற்றதான அறிவுக்குச் சிறந்த பரிபக்குவம் இல்லாமற் போனுல் அவ்வறிவுக்கு நன்மை தீமைகளை ஒழுங்குபெறப் பாகுபாடு செய்யக்கூடிய சக்தி இராதென்பது திண்ணம். ஏனெனின், தெய்வத்தின் உண்மையையும், இயற்கைக்காரியங்களின் தத்துவங்களை

யும் அறிந்து, அவற்றை அனுபவம், யுக்தி என்கிற உரைகல்களில் தீட்டிப்பிரகாசிக்கச்செய்து, பிரகாசமற்ற பாகங்களை மறைத்தும், பிரகாசமான பாகங்களை வெளிப்படுத்தியும் ஒழுகுவதற்குரிய ஞான மயமான புத்தியின் செயலே தர்மமென்பது. தர்மத்தின் உட்கருத்தான சித்தாந்தம் யாதெனின், மனதுக்குப் பரிசுத்தமும், நம்பிக்கையுடன்கூடிய விசுவாசமும், ஆத்மகதிக்கான மோக்ஷத்தைப்பெற உற்சாகமும், பெற்று, சரீரத்துக்கு ஏற்படக்கூடிய எவ்விதத்தொல்லையும் அணுகாமல் காலத்தை நல்ல முறையிலேயே கழிக்கவேண்டுமென்று விரும்பும் அவாவேயாம். எனவே அறிவைப்பரிபக்குவமடையச் செய்யும் முறைகளைப்பற்றியும், முறைப்படி பக்குவப்படுத்தப்பட்ட புத்தியினின்றும் வெளியாகும் காரியங்களைப்பற்றியும் ஈண்டு சுருங்கக் கூறவிரும்புகின்றேன்.

புத்தியின் பரிபக்குவமென்பது, குணதோஷ பாகுபாட்டைச் செய்வதற்குரிய திறமையை அப்புத்திக்கு உண்டுபண்ணும் பழக்கமேயாம். இப்பழக்கத்துக்கு முக்கிய உபகாரணங்கள் உலக பழக்கமும், வேதசாஸ்திரங்களின் சத்துவசாரங்களைக் கற்பதுமேயாம். ஐம்புலன்களால் அறியக்கூடிய பொருள்களின் தத்துவங்களையும், ஒற்றுமை, வேற்றுமை, மாற்றம் முதலியவைகளின் முடிவுகளையும் பரிசோதித்தும் ஆலோசித்தும் கண்ட அறிஞர்கள், மக்களுடைய நன்மையை உத்தேசித்து, அவர்கள் கண்ட அந்த ஞானங்களை மக்களின் பாஷா சமூகத்தின்கண் சிலகுறிப்பிட்ட முறைகளுக்கிணங்க வெளியிட்டிருக்கின்ற பதத்தொகுப்புகளினது பிரகாச விசேஷங்களுக்குத்தான் சாஸ்திரமென்றும், காவியமென்றும் பெயர் கூறப்படுகின்றன. ஆனால் வேதமோ இதற்கு மேற்பட்ட பராசக்தியாகிய இறைவனி னின்றும் வெளியான திவ்விய வாக்கியத் தொகுப்பேயாம். காலா காலங்களில் அவசியமான மக்களுடைய முக்திக்கு அஸ்திபாரமான தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டுத் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் தோன்றுவது இறைவனுடைய கருணைச் செயலின் இயற்கையேயாம். அன்றியும், அவைகளின் தத்துவங்களை ஆராய்ந்தறிந்து உயர்தர நூல்களை இயற்றுவதற்கும், இடம் பொருள், ஏவலுக்கிசைந்தவாறு ஏனைய சீர்திருத்தங்கள் செய்வதற்கும் எல்லாவிதமான சக்திகளையுமுடைய மகான்கள் உலகத்தின்கண் அடிக்கடி தோன்றிப் பாமர மக்கள் ஞானபரிபக்குவ மடைவதற்குச் செய்யும் பரிசுத்தமான முயற்சியில் துணை நின்று உதவி புரிகின்றனர். புத்தியின்பரிசுத்தம் என்பது ஞானத்தைச் சம்பாதிக்கின்ற முறையும், தர்மம் என்பது பரிசுத்த புத்தியின் காரியமுமாகையால்

ஞானத்தைச் சம்பாதிப்பதற்குச் சாதனமாக வுள்ளது கல்வியேயாம். எனவே கல்வியைப்பற்றித்தான் நாம் ஆராய்ச்சி செய்யவேண்டியிருக்கிறது. இதற்காகத்தான் உலகமும், தர்மநிஷ்டையும் தர்ம ஞானமும் உடையவர்களையே கல்விமான்களெனக் கூறுகின்றது.

எனவே தர்மத்தை அறிந்து ஒழுகச்செய்பவல்லது கல்விதான். தர்ம அறிவும் தர்மநிஷ்டையும் உடையோன் ஐசுவரியவானேயன்றிச் செல்வ முடையோன் ஐசுவரியவானன்று. ஆனது பற்றியே ஆன்ளேர்கள், "வித்தியா தனம் சர்வ தனப் பிரதானம்" எனவும் பகர்ந்தார்கள். மனிதனுடைய ஆயுட்காலத்தில் பால்யம், கௌமாரம், யௌவனம், விருத்தாப்பியம் என நால்வகைப்பருவங்கள் இருக்கின்றன. வாலிபத்தில் சுபாவத்தை நிரூபணம் செய்யும் பழக்கமும், கௌமாரத்தில் கல்விப்பயிற்சியும், யௌவன காலத்தில் இல்வாழ்க்கையை நடத்துதல், பொருளீட்டல் முதலியனவும், விருத்தாப்பியத்தில் இளைப்பாறுதலுமாகிய இப்படிப்பட்ட வாழ்க்கையின் மாறுபட்ட நிலைமைகள் ஏற்படுவது உலகவாழ்வின் இயற்கையாயிருக்கிறதென்பதை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். ஆனால் மனிதர்களின் அபூர்ணத் தன்மையை உற்று நோக்குங்கால் இக்கற்பிதத்துக்கு ஒரு பழியும் ஏற்படாமலில்லை. ஏனெனின், மனிதர்கள் தம் ஆயுட்காலம் முழுதையும் கல்விகற்பதிலும், ஞானம் பெறுவதிலுமே கழிக்கின்றார்கள். மாணவர்கள் கலாசாலையை விட்டுவெளிவருங் காலத்தில் கல்வி கற்று ஆயிற்று என்று நினைப்பது தவறேயாகும். "கல்விச் சாலையை விட்டு வெளிவருங் காலமானது ஞானத்தைச் சம்பாதிக்கும் காலத்தின் துவக்கமேயாகும்" என்று ஆங்கிலத்தில் ஒரு மூதுரை உள்ளது.

"ஆச்சார்யத் பாத மாதத்தே பாதம் சிஷ்யஸ்வமேதயா,
பாதம் பிரம்மசாரிப்பியா பாதம் காலக் கிரமேத"

என்னும் ஆப்தவாக்கியமும் இக்கருத்தையே நன்கு விளக்குகின்றது. எனவே குழந்தைப் பருவத்தின் பிரசித்தமான சுபாவ நிரூப கிரியைக்குக்குருவாக விளங்குவது தாய்மார்களே என்பதை ஈண்டு மறக்கவும் மறுக்கவும் முடியாததொன்றேயாம். இப்படிப்பட்ட எண்ணமானது பெண்கல்வியின் மேன்மையையும் அவர்களுடைய ஒழுக்கவழக்கங்களின் சிறப்பையும் வெளிப்படுத்துகிறதென்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே பெண்கல்வியைப் பற்றி மட்டுமோ அல்லது ஆண்மக்களின் கல்வியைப் பற்றி மட்டுமோ பாகுபாடு செய்து கூறுமல் பொதுவாகக் கல்வியைப் பற்றி ஈண்டுவரைவோம். இறைவனுடைய

இணையிலா அருள் பெருகுமாயின் இல்லாள் கல்வி என்பதைப் பற்றிப் பின்னர் தனியே எழுதுவோம். தற்காலம் பொதுவான கல்வியைப் பற்றி எழுதுகின்றோம்.

---

# கல்வி

மௌ. ஆ. அபுல் ஹஸுதா.

கல்வி என்பது தானும் சந்தேகமறக் கற்று அதைப் பிறர்க்கும் பயன் படுத்துவதே யன்றிச் சிலர் நினைப்பதே போல் காளிதாஸருடைய சகுந்தலையையோ, ஹர்ஷனுடையன நைஷதத்தையோ வியாக்கியானம் செய்யக்கூடிய நிலைமையில் சமஸ்கிருத பாஷையில் பாண்டித்ய மடைவதோ, அல்லது சீத்தலைச் சாத்தனாருடைய சிலப்பதிகாரத்தையோ, வீரமாமுனிவருடைய தேம்பாவணியையோ பொருள் விரித்துக்கூறும் வண்ணம் தமிழில் தேர்ச்சி பெறுவதோ அன்றி மில்டனுடைய பரதீஸா நஷ்டம், ஷேக்ஸ்பியருடைய வெனிஸ் வர்த்தகன் என்னும் நாடகம்பொன்ற பல மேல் நாட்டு அறிஞர்களின் நூல்களை விவரித்துக் கூறுமளவு ஆங்கில பாஷையில் ஞானம் பெறுவதோ கல்வியைப் பெற்றதன் கருத்தாகாது. எனவே பாஷா ஞானம் பெறுவது மட்டும் கல்வியில் தேர்ச்சிபெறுவதாகாது. ஆனால் எப்பாஷையில் எழுதப்பட்ட எவ்வகை நூலாயினும் அந்நூலில் காணப்படும் ஆத்மீக லௌகிகத் தத்துவங்களை உய்த்துணர்ந்து, உணர்ந்த அவ்வாறே முறை பிறழா வண்ணம் தம் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்வதில் தான் கல்வியின் உண்மை பொதிந்து கிடக்கின்றது. மேல் நாட்டு அறிஞர்கள் பலர் கல்வியின்இலக்ஷணத்தை விவரித்திருக்கின்றனர். 'ஹர்பர்ட் ஸ்பென்ஸர்', என்னும் ஆங்கில விற்பன்னர், "சகல காரியங்களையும் ஆலோசித்துச் சரியான தீர்மானம் செய்வதற்குப்போதுமான ஞானம் நிரம்பிய உண்மைச்சக்தியை யுடையதிறமைதான் சரியான கல்வி என்பது" என்று கூறியுள்ளார். ஏறக்குறைய இதே அபிப்பிராயத்தைத் தரக்கூடிய வியாக்கியானத்தைத்தான் இன்னும் அதிகமான பதப்பிரயோகங்களால் 'ஸர்பிரான்ஸிஸ் பேக்கனு'ம், கல்வி என்னும் சொல்லுக்குப்பொருள் உரைத்திருக்கின்றார். மகா சரஸகவியாகிய அரபிப் பிரபு இன்னும் விளக்கமாகக்கூறியிருப்பதாவது: "எக்காரியத்திலும் குற்றமேது, சரியேது, சத்தியமேது,

பொய் எது, நல்லது எது, தீயது எது என்பன போன்ற இம் மூன்று வினாக்களுக்கும் ஏற்ற விடை அளிப்பதற்குப் போதுமான ஞானசம்பத்தே யதார்த்தக் கல்வியாம்.'' ''யுத்தகாலத்திலும் சமாதான காலத்திலும் இரகசியமோ இரகசிய மின்மையோ ஆகிய எந்த உத்தியோகத்தையும் நியாயத்துடனும் கௌரவமாகவும் திறமையுடனும் நிர்வகிப்பதற்குப் போதுமான ஆற்றலைப் பெறுவதுதான் உண்மைக் கல்வியின் பயன்'' என்று 'மில்டன்', என்னும் ஆங்கில பாஷாஞானி கூறுகின்றார். உண்மையை ஆராயுங்கால் மனித வாழ்க்கையில் இயற்கையாகவே நிகழும் எவ்வகையான நிலைமைகளிலும் முன்னேற்றத்தையும் சிரேஷ்டத்தையும் அடைவதற்கு அவசியமாகிய ஞானத்தொகுப்பையும் மனச் சமாதானத்தையும் பெற்று இயன்ற அளவு பரிபூர்ணத் தன்மையில் வாழ்வதற்கேற்ற பழக்கத்தையே யதார்த்தக் கல்வி என்று கூறலாம். அதாவது, பரிபூர்ணமற்றதாயுள்ள மனிதபுத்திக்கு அப்பாற் பட்டதாகிய இயற்கைப் பொருள்களின் சக்தியில் தப்பான நம்பிக்கையோ, விகாரமோ, தோல்வியோ ஏற்படாமலிப்பதற்கும், வெளிப்படாமல் மறைந்து கிடக்கும் பாகங்களிலும் பயன் பெறக்கூடிய அளவு புத்தியைச் செலுத்தி வாழ்க்கையை அனுஷ்டிப்பதற்குமுரிய உண்மையான அறிவுக் களஞ்சியமே கல்வி என்பதாகும். எனவே வாஸ்தவ ஞான சூக்ஷ்மசக்தி இல்லாதவர்களுக்கு மூடநம்பிக்கையினாலுண்டாகும் விகாராதி தோஷங்கள் சம்பவிப்பது சகஜமென்றும், அத்தகையினரால் ஆளப்படும் உலகபாகம் அஞ்ஞான அந்தகாரம் நிரம்பியதாகவே இருக்குமென்றும் நன்கு புலனாகின்றது. ஸெண்டிரல் ஜெயில், சப்ஜெயில் போன்ற இடங்களில் தகுந்த ஊதியத்துக்கு உத்தியோகம் பார்த்து வருகின்ற உலக தூஷணைக்கு இலக்கானவர்களும் இவ்வுலகத்திற்குட் பட்டவர்களேயாவர். பள்ளிக்கூடங்களுக்கு அதிகமான விசாலம் ஏற்படுங்காலை ஜெயிலுக்கு விசாலம் குறையுமென்று ஆங்கிலேயர்களிடையேயும் பிரஞ்சுக்காரரிடையேயும் ஒரு பழமொழிவழங்கி வருகின்றது. இதன் கருத்து மக்களிடையே கல்வியானது பெருகி யாவரும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படித்துப் பள்ளிகளின் விசாலத்தைப் பெருகச் செய்வார்களாயின் அப்போது ஜெயில்களில் அடைக்கப்படுவதற்கு ஆட்களில்லாமல் ஜெயிலின் விசாலமானது குறையும் என்பதாகும். இஃதே போல் கல்விப் பெருக்கால் பிச்சையெடுப்போர்களின் தொகையும் அந்நாடுகளில் குறைவு பட்டுவருகிறது. மிகக்கேவலமான யாசகத்தொழிலை குணதோஷ விவேகமுடையவர் எவரும் ஏற்றுக்கொள்ளமனந் துணியாதது

தான் இதற்குக் காரணமாகும். ஸ்தூலப் பொருள்களில் மிகக்கேவலமானது புல், அப்புல்லைக் காட்டினும் கேவலமானது யாசகத் தொழில் என்று பொருள் படக்கூடிய சுலோகத்தையே சுபாஷிதமும் வெளியிடுகின்றது. (சுலோகம், "த்ருணதபிலகுஸ்தூலா, ஸ்தூலாத பி ச யாசக)

ஆனால் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக இருந்தால் தான் அதில் படிப்போருக்கும் மேற்கூறின பயன்கள் வியாபிக்க முடியுமேயொழிய வேறுவிதமாக இருந்தால் யாதும் பயனில்லை. அதாவது மாணவர்கள் கற்கும் நூல்களுக்கும், அவர்களைக்கற்பிக்கும் குருமார்களுக்கும் உரிய யோக்கியதை இருந்தால்மட்டுமே பயனளிக்கக்கூடுமேயன்றி அவ்வகை யோக்கியதை ஒரு சிறிது குறையுங்காலத்து எதிர்பார்க்கும் நன்மையோ பயனோ விளையா தென்பது இதன் கருத்தாகும். அன்றியும்கல்விகற்கும் மாணவர்களுக்கு அக்கல்வி விஷயத்தில் உற்சாகம், பற்று முதலியவைகளை உண்டாக்கும் பொருட்டு அவர்களுடைய சுபாவத்தைத் திருத்திச் சரிபடுத்த வேண்டிய திறமை அம்மாணவர்களுடைய பெற்றோர்களுக்கும் அச்சமுதாயத்தின் பெரும்பான்மையோர்களுக்கும் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். ஆனால்நம்மிடையே இத்தகைய குறைகள் இல்லாமலில்லை என்பது திண்ணமே. இக்குறையும் மனோ பக்குவக் குறையினால் ஏற்பட்டதேயன்றி வேறன்று. அறிவைச் சம்பாதித்த போதிலும் விவேக பூர்வம் அதை அனுஷ்டித்துக் காண்பிக்காத பண்டிதர்களின் நிலைமை தான் மிகக்கேவலமானதாகும். அப்படிப்பட்டவர்கள் ஆத்மாவையோ அன்றி சமுதாயத்தையோ நேசிக்காதபேதைகளும் ஆத்மசக்தியும் மனோவலிமையும் குன்றியவர்களுமாவர். "வாழ்க்கையின் பரம நோக்கமானது அறிவன்று, அறிவிர்க்குத் தகுந்தபடி அனுஷ்டிப்பதேயாம்" என்று 'ஹக்ஸலி, (Huxley) என்றும் மகா பண்டிதரும், "ப்ருவதேஹி பலேனஸாதவோ நதுகண்டேன நிஜோபயோகிதாம்" என்று ஸ்ரீஹர்ஷனும், "எத்துனைமேலான புனிதநூற்களை வாசித்தபோதிலும் அவைகளில் கூறியுள்ளவற்றைச் சொந்த செய்கையில் காண்பிக்காத பண்டிதன் பண்டிதனல்லை; பாமரனேயாம்", என்று 'கிங்ஸ்லீ', (Kingsly) என்பாரும், "கற்கக் கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத்தக" என்று திருவள்ளுவனாயனாரும் கூறியிருப்பவை இச்சந்தர்ப்பத்தில் நமது ஞாபகத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

கற்பவர்களுக்கு மனோபக்குவம் அவசியமென முன்னரே கூறியுள்ளோம். மனோ பக்குவமென்பது தான் மனோபரிஷ்காரம் என்னப் படுவது. மனோ பரிஷ்காரம் (சீர்திருத்தம்) என்பதைப் பலரும் பல

விதமாகப் பொருள் படுத்தியிருக்கின்றனர். இன்னமும் பொருள் படுத்தியும் வருகின்றனர். இப்பொருளடக்கங்கள் யாவையும் ஒன்று சேர்த்துக் சுருக்கிப் பார்க்குங்காலை பூர்வ ஆசார அனுஷ்டானங்களை யும் மதக்கோட்பாடுகளையும் புறக்கணித்து மேல் நாட்டு நாகரிக மெனக்கருதப்படும் முறைகளைப் பின்பற்றி ஒழுகுவது தான் மனேபக்குவத்தின் இலக்ஷணமென்று சொல்லப்படுவதாகவே விளங்கலாம். ஆங்கிலம் கற்ற பல வாலிபர்களும் இன்னமும் பலரும்நீண்ட நாட்களாகவே மனேபக்குவம் அல்லது நாகரி கம் என்னும் பதத்திற்கு அர்த்தம் கொடுத்து அவ்வாறே பழகியும் வருகின்றன ரென்பதையும் நாம் அறியாமலில்லை. ஆனல் அப்பதத்தின் உண்மைப்பொருள் அஃதன்று. அதாவது புத்திஹீன மாகிய விசுவாசங்களிலும், விசாரங்களிலும், விகாரங்களிலும், செயல் களிலும் அகப்படாமல் சூக்ஷ்மஞான சக்தியுடன் ஒருவராலும் ஏற் படுத்தப்படாத—ஆனல் இறைவனல் ஏற்படுத்தப்பட்ட இப்பிரபஞ்ச வியவகாரத்தின் நிலையிலாத் தன்மையை நம்முன் நிறுத்திக்கொண்டு நித்திய, நிர்மல, நிர்விகார, நிராதார, நிராகார, நிஷ்களங்க, நிரந்தர மாகிய சத்தியப்பரம் பொருளாம் இறைவனை அறியக்கூடிய தத்துவ ஞானத்தைப் பெறுவதும், அப்படிப்பட்ட சுத்தசத்குண ஐச்வரியத் தைக்கொண்டு சகல விதமான வாழ்க்கையின் நிலைமையிலும் இறை வனை வழிபட்டுத் தம் வாழ்க்கையைத் தமக்காகவும் பிறர் நன்மைக் காகவும் நடத்தும் மனப்பரிசுத்தத்தைப் பெறுவதுமே உண்மை நாகரிகமென்பதாகும். அதாவது எக்காரியத்தையும் ஆரம்பத்தி லேயே சௌகரியமாகவும் பயனளிக்கக்கூடியமுறையிலும் தொடங்கிச் சமாதானத்துடன் அபிவிருத்தி செய்து இன்பத்தையே நிலை நிறுத் தும் பொருட்டு மனதை அறிவாலும் கடவுள் தியானத்தாலும் நிரம் பச்செய்து நமது வாழ்க்கையின் நிலைமையைச் சீர்திருத்திக்கொள் வதே நாகரிகமாகும். அதுதான் உயர்தரக் கல்வியின் பயனுமாகும். மனேபக்குவதேஜஸின் கிரணங்களுக்குத் தூண்டுதலாயிருக்கின்ற ஞானத்துக்குத்தான் விவேகம் அல்லது பகுத்தறிவு என்று சொல் லப்படுகின்றது. இப்படிப்பட்ட பகுத்தறிவாகிய கிரணங்களே ஒரு வரை உண்மை மனிதனுக ஆக்கி விடுகின்றமையால் ஒவ்வொருவரும் விவேகம் என்னும் ஞானக்கிரணங்களை எவ்வாற்ருனும் பெறுதல் வேண்டும். ஆன்ருேர் இக்கிரணங்களைப் பதின்மூன்ருகப் பிரி திருக்கின்றனர். அவைகளை சௌகரியத்தின் பொருட்டுக்கூறுவோமா யின் மனிதனிடம் காணப்படவேண்டிய அக்குணங்களாவன: இரக்கம், (மனேமார்தவம்) மிதமானபேச்சு, கிரமம், நிர்ணயம், முயற்சி, நியாய

முறையில் பொருளீட்டல், நியாயம், சிக்கனம், மிதபோகம், சுத்தம், சாந்தம், வினயம், மதம் என்பவைகளேயாம். சாதாரணமாக இதர பதங்களால் குறிப்பிடப்படும் பல குணங்கள் இருந்தபோதிலும் இலக்ஷணப் பாகுபாடு செய்து பார்க்கும்போது அவையாவும் இப்பதின் மூன்று தலையாய குணங்களுள் அடங்கிவிடுமென்றே கூறலாம். எனவே மேற்கூறப்பட்ட பதின்மூன்று குணங்களின் விவரத்தைப் பற்றியும் இனி தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் இச்சஞ்சிகையில் வியாக்யானம் செய்து வருவோம். நேயர்கள் ஊன்றி வாசித்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம். வல்ல இறைவன் அருள்புரிவானாக.

(தொடரும்)

# இந்தியாவில் முஸ்லிம்களின் நிலைமை

(ஸ்ரீ வைகுண்டம் ஜனப் வ. மி. ஷம்சுதீன் சாஹிப்.)

"நிச்சயமாக அல்லாஹுத் தாலாவினிடத்தில் உண்மையான மார்க்கமாக இருப்பது இஸ்லாம்தான் (குர்ஆன் 3-13)

ஆரியர்களும், ஆர்யஸமாஜ சிஷ்யகோடிகளும் மாளவியாக்களும், லாலாஜிக்களும், மூஞ்சேக்களும் இஸ்லாத்தை அழித்துவிட, அல்லும், பகலும், ஓய்வு ஒழிவின்றி பாடுபட்டபோதிலும், காளிசரண்களும் இராஜ்பால்களும், இஸ்லாத்தையும், அதன் ஸ்தாபகரையும், தூஷணைசெய்து பல நூல்களைவெளியிட்ட போதிலும், இஸ்லாத்துக்கு இன்றுவரை ஒரு குறையேனும் ஏற்பட்டுவிடவில்லை. அது, மேலும் மேலும் பிரகாசித்துக்கொண்டு கலங்கரை விளக்கமாய் எல்லாமதஸ்தருக்கும் வழிகாட்டியாகவே இருந்து வருகிறது. ஏனெனில் அப்பரம கருணாநிதியாகிய அல்லா (ஹ்) பாலைவனத்தாரை மாத்திரம் நேர் வழிபடுத்த அனுப்பாமல் உலகமுழுவதையும் நேர்வழி படுத்தவே எம்பெருமானார் நபியேகரீம் (ஸல்) அவர்களை அனுப்பினான். வைரத்துக்கும் ஸ்படிகத்துக்கும், உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ள முடியாத ஒருவனிடம் ஸ்படிகத்தையும், வைரத்தையும் கொடுத்தால், ஸ்படிகத்தையே தெரிந்துகொள்வான். அறிந்தவனே வைரத்தைதெரிந்தெடுத்துக் கொள்கிறான். அஃதேபோல் எந்த நியாய மதியுள்ள அன்னியமதஸ்தனும், இஸ்லாமார்க்கத்தை ஆழ்ந்த சிந்

தையுடன் படிப்பானுகில் இஸ்லாத்தின் சுவிசேஷ நற்போதனையானது அவனுடைய மனதைக்கவரச்செய்து விடுகின்றது. நபி (ஸல்)அவர்கள் அவதரித்தகாலத்தில் அந்த மக்கத்து குரைஷ் குப்பார்களின் மனதையும் குர்ஆன் போதனையானது கவர்ந்து விட்டதென சரித்திர வல்லவர்கள் கூறுகிருர்கள். மக்கத்து குரைஷ்பர்கள் தங்கள் மனதில் இஸ்லாமிய குர்ஆன் போதனையானது பதிந்துவிடுகிறதென அஞ்சி அவர்கள் தங்கள் காதுகளை பஞ்சுகளால் மூடிக்கொண்டார்கள் என்பதை நாம் படிக்கவில்லையா. இதுவே எனது அநுபவமாகும். டக்கா முஸ்லிம் சர்வகலாசாலை சரித்திர போதகாசிரியர் நவமுஸ்லிம் ஸிராஜால் இஸ்லாம் "நான் எதற்காக இஸ்லாத்தை தழுவினேன்?" என்று அவர் எழுதிய நூலை எனது பிராமண நண்பர் ஒருவரிடம் (அவர் பீ. ஏ. பட்டதாரி) கொடுத்தேன். அவர் அந்நூலைப் படித்தது முதல் அவருக்கு இஸ்லாத்தில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதாக என்னிடம் கூறினர். ஹிந்துமதத்தில் மிகவும் பக்தி வாய்ந்தவரும், ஆங்கில சர்வகலா சங்கத்தில் பட்டம் பெற்றவருமான அன்னுரின் மனமானது ஒரு நூலைப் படித்த மாத்திரத்தில் இஸ்லாத்தில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதென்ருல் இஸ்லாத்தின் உயர்ந்த தத்துவங்களையும் இதரவிஷயங்களையும் யான் இங்கு அதிகம் எழுதவும் வேண்டுமா.? இதை எனது ஹிந்து நண்பர்களும் அந்த ஆரியர்களும் ஆலோசனைசெய்து பார்க்கக்கடவர். அறிவில் முதிர்ந்த அப்பட்டதாரியின் மனதை மாத்திரம் எமது இஸ்லாம் மார்க்கமானது திருப்பிவிட்டதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? அல்ல—அனுசாரத்திலும் அந்தகாரத்திலும் மூழ்கிக்கிடந்த அந்த மௌட்டீயம் பொருந்திய அராபியாவின் நிர்மூட பாலைவன சஞ்சாரிகளையும், எமது மார்க்கமும் எமது குர்ஆனே கரீமின் திவ்வியவசனமும் அதிசீக்கிரத்தில் மாற்றிவிட்டன. கிறிஸ்தவர்களாலும் யூதர்களாலும் பல்லாண்டுகளாக சாதிக்க முடியாத சீர்திருத்தங்களை எல்லாம் எமது நபியேகரீம் (ஸல்) அவர்கள் அதி சீக்கிரத்தில் சாதித்து முடித்து விட்டார்கள். முன்னூற்றுக்கு அதிகமான விக்கிரஹங்களையும் கண்டவைகளையெல்லாம் கடவுள் எனமதித்து, அவைகளுக்கு கை கூப்பி அச்சிருஷ்டிப் பொருள்களுக்கு சிரவணக்கம் புரிந்த அவ்விக்ரஹத்தொழுபவர்கள் அதி சீக்கிரத்தில் ஏக தெய்வ வணக்கக்காரர்களாக மாறிவிட்டார்கள். 5 நேரக் குடியும் வியபிசாரமும் தொழுகையாகவும் நோன்பு நோற்றலாகவும் மாறிவிட்டன. பெண்மக்களை பெறுவதும் கேவலமென எண்ணிய அவர்கள் பெண்களை தங்களின் உறுப்பாகக் கருதினர்கள். இஸ்லாத்தில் காணப்படும் சமத்துவமானது

வேறு எந்த மார்க்கத்திலாவது காண்பதரிது. ஒருவன் பிரமாவின் முகத்தினின்றும், மற்றொருவன் பாதத்திலிருந்தும் அவதரித்தான் என்ற ஆபாச—அர்த்த மற்ற—யுக்திக்கும் புத்திக்கும் பொருத்தமற்ற புழுகு நிறைந்த பௌராணீகக் கதைகளை எல்லாம் எமது மார்கத்தில் எங்கேனும் காணப்படவில்லை. கத்தோலிக் கிறிஸ்தவனுக்கு ஒருகோவிலும், புராட்டஸ்டண்டனுக்கு மற்றொரு கோவிலும், கருப்பனுக்கு ஒரு கோவிலில் பிரத்தியேகமான இடமும் வெள்ளையனுக்கு மற்றொரு இடமும் கிடையாது. கர்ம சித்தாந்தம், ஜென்ம சித்தாந்தம் என்பதும் ஒருவன் தாயின் உற்பாதி பிண்டத்தினின்று பிறக்கும் போழ்தே பாப மூட்டையுடன் பிறக்கின்றான் என்ற குருட்டு நம்பிக்கையும் எமது மார்க்கத்தில் கிடையாது. அரிய உபர்ந்த தத்துவங்களை அடிப்படையாகக்கொண்ட போதனையானது அதி சீக்கிரத்தில் அவ்வராபியர்களை மாத்திரமல்லாமல் உலகத்தையே கவர்ந்து விட்டதெனலாம். முதல் கால் நூற்றாண்டுகளுக்குள் அராபியா, ரோம், பாரசீகம், ஆப்கானிஸ்தானம், அமெரிக்கா, ஆப்ரிக்கா, எகிப்பது, ஸ்பெயின் முதலிய இடங்களிலெல்லாம் பரவிவிட்டது.

அம்மார்க்க மானது இந்தியாவையும் விட்டுவிடவில்லை. இந்தியாவிலுள்ள ஆரிய வர்க்கத்தினரை சீர்திருத்துவான் வேண்டி இந்தியாவிலும் இஸ்லாம் பரவியது போலும். இந்தியாமீது முஸ்லிம்கள் மாத்திரம் கண்ணோட்டம் செலுத்தி இந்தியாவின் மீது படை எடுத்து வந்ததாகச் சொல்லமுடியாது. கிரேக் மன்னனாகிய, அலக்ஸாண்டிரும் இந்தியா மீது படை எடுத்து ஸிந்துநாட்டைக் கைப்பற்றினான் என்பது சரித்திரபூர்வமானது. அசோக இராஜ்யமும், ஹர்ஷ இராஜ்யமும் பிளவுபட்ட பின்னர் கி-பி. 711-ம் ஆண்டில் முஹம்மத்காஸீம் என்ற அராபித்தலைவர் இந்தியாமீது படைஎடுத்து வந்து பஞ்சாப் மாகாணத்தில் சிலபாகங்களைக் கைப்பற்றினார். அது முதல் இஸ்லாமியர்களின் கண்ணோட்டம் இந்தியா மீது ஏற்பட்டது. பின்னர், போர்த்துக்கசியர் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்களின் கண்ணோட்டம் இந்தியாவில் ஏற்பட்ட தெனலாம். கி. பி. 1001-வது ஆண்டுமுதல் இந்தியாவில் இஸ்லாமிய இராஜாங்கம் ஏற்பட்டது. 1570-ல் இந்தியா முஸ்லிம் இராஜ்யமாகவே விளங்கிற்று. பாளையக்காரர்கள் நாட்டைத்தவிர அநேகமாக மற்றபிரதேசங்களாகிய, காபூல், லாகூர், மூல்டான், ஆக்ரா, டில்லி, அலஹாபாத் ஆஜ்மீர், குஜராத், பீஹார், ஒரிஸ்ஸா, வங்காளம், யாவும் முஸ்லிம் இராஜ்யமாகவே இருந்தது. 1707-ம் ஆண்டுவரை ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஔரங்கஸீப், முராத்பக்ஷ், பகதூர்ஷா, முத

விய இஸ்லாமிய மன்னர்களால் இராஜாங்கம் நடைபெற்றது. அக்பர் மன்னரின் இராஜ்யபரிபாலனம் சகலமதஸ்தர்களாலும் புகழ்ந்துரைக்கப்பட்டிருக்கின்றது. எனினும், அவர் இஸ்லாமார்க்கத்தில் அத்துணைபற்றுடையவரில்லை என்பது சில முஸ்லிம் சரித்திராசிரியர்களின் அபிப்பிராயம். அக்பர் மன்னரின் செங்கோல் மிகவும் மெச்சத் தகுந்ததுதான். ஔரங்கஸீப் சக்கரவர்த்தி காலத்தின்தான் இஸ்லாம் மார்க் கம் விசேஷமாகப் பரவியது. அவர் இஸ்லாத்தின் முன்னேற்றத்தில் மிகவும் அக்கரைகொண்டவர். உண்ணுவது முதல் இராஜ்ய பரிபாலனம் வரை இஸ்லாமிய சட்டப்படியே நடத்தி வந்தார். பல அன்னியமத சரித்திராசிரியர்களால் அவர் மிகவும் கெட்டவரென்றும் இஸ்லாமதத்தைப் பரப்பவேண்டி, ஹிந்துக்களின் கோவில்களை இடித்து மதவரி ஏற்படுத்தினர் என்றும்கூறப்படுகிறது. அவ்வாறு கூறுவதில் பல ஆதாரமற்றவைகளாக விருக்கின்றனவென்று ரூபிக்கப்பட்டுள்ளது. "ஜஸயா" (மதவரி) ஏற்படுத்தினர் என்ற காரணத்துக்காக பெரிதும் குறை கூறமுடியாது. அம்மாதிரி செய்வது நியாயமற்றதாக விருக்கலாம். நாகரீகம் மிகுந்த இந்த 20-ம் நூற்றுண்டில் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் "கோவில் வரி" என்று முஸ்லிம்களிடம் வாங்கப் படுகிறது. இதற்காக எந்த ஹிந்துவும் இன்று அதைக் கண்டிக்கவில்லை. அம்மாதிரி ஒரு ஹிந்து சமஸ்தானத்தில் ஹிந்துக்களுக்கு சம்மதமாக இருப்பதுபோல் அவ் அரசருக்கு மதவரி வாங்குவதுநியாயமாக இருந்திருக்கலாம். கிறிஸ்தவ அரசாங்கத்தாரால் ஸ்பெயினில் செய்த கொடுமைகளைவிட மத வரி வாங்கியது கொடுமையானதா?

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின்னர், பல மாறுதல்களும், சீர்திருத்தங்களும் ஏற்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் பிராமணர்கள் தான் அதிகசம்பந்தம் வைத்திருந்தார்கள். வேதமோதும் தொழிலை விட்டுப் பலர் ஆங்கிலேய பாஷையைப் படித்து, உத்தியோகத்தி லமர்ந்துகொண்டார்கள் என்பது பல அறிஞர்களின் அபிப்பிராயம். இவர்களைப்போல் முன்னேற்றமடைய முஸ்லிம்களைத் தவிர, இதரர்களும் சிறிது, சிறிதாக தங்களுடைய நிலைமையை மாறுதலடையச் செய்து கொண்டனர். முஸ்லிம்கள் மாத்திரம் ஆண்டவனைத் தொழுதுகொண்டும், இஸ்லா மார்க்கத்தில் மிகவும் பற்றுக்கொண்டவர்களாக இருந்தார்கள். இராஜீய விஷயத்தில் அவர்கள் அதிக கவனம் செலுத்தாமல் விறகு, வெட்டிகளாயும், தண்ணீர் காவடி தூக்கிகளாயும் பெரும் பாலோர் இருந்தனர். ஒரு சிலரே வியாபாரிகளாகவும், விவசாயிகளாயும் இருந்ததாகத் தெரிய

வருகின்றது. ஹிந்துக்கள் ஆங்கிலபாஷையைப்படித்து இராஜீய விஷயத்தில் முன்னேற்றமடைந்த சமயம் முஸ்லிம்கள் ஆங்கிலம் படிப்பது ஹராமெனச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்:

காலஞ் சென்ற ஸர்சைய்யது அஹ்மத் அவர்கள் முஸ்லிம்களின் பிற்போக்கைக் கண்டு மிகவும் வருந்தினர். முஸ்லிம்களின் கல்விக்காக, உடல் பொருள் ஆவி, மூன்றையும் தத்தம் செய்தார். சொல்லொண்ணுக் கஷ்டப்பட்டு, உலமாக்களின், ஏச்சுக்கும், தூஷணைக்கும், உள்ளாகி, அலிகரில் முஸ்லிம் கலாசாலை ஒன்றை நிறுவினர். அவர் அம்மாதிரி குன்றா ஊக்கத்துடன் வேலை செய்யாவிட்டால், இன்று முஸ்லிம்களாகிய நாம் வாயில்லாப் பூச்சிகளாகவேயிருப்போம். இந்திய முஸ்லிம்களின் தற்கால நிலைமையிலுள்ள வெற்றிகள் யாவும் அவருக்கே உரியனவாகுக!

காங்கிரஸ் மஹாஜன சபை ஆரம்பித்தகாலத்தில் அத்துடன் ஸர் சையத் அஹமதும் ஒத்துழைத்தார் என்றாலும், ஹிந்துக்கள், தங்கள் இராஜீய நலங்களை செப்பனிடும்பொருட்டே காங்கிரஸ் மஹாஜன சபையை ஒரு கருவியாக உபயோகித்து வந்தது அவருக்குப் பிடித்தமில்லையாகையால் முஸ்லிம்களின் சமுதாய, நோக்கங்களை பரப்புவான் வேண்டி "முஸ்லிம் லீக்" மஹாசபையை ஏற்படுத்தப்பட்டது. வங்காளப்பிரிவினை முதல் இந்திய அரசாங்கத்தார் ஹிந்துக்களை மாற்றாந் தாயின் பிள்ளைகளாகக் கருதி நடத்தி வருவதாக ஹிந்துக்களால் குறை கூறப்பட்டுவருகிறது. அது முஸ்லிம்களின் கண்களை துடைக்கும்கூச்சல் என்றே யான் கருதுகிறேன். நன்றாக ஆராச்சி செய்தால் ஹிந்துக்களுக்கே இந்தியாவில் விசேஷ செல்வாக்கிருக்கிறது. கவர்மெண்டார் முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கிய காலத்தில் ஒருதலைப் பட்சமாக முடிவு செய்யும் வகுப்பு வாதிகளுக்கு அவை க்ரோதமாகத் தோற்றலாம். ஆனல், பிரிட்டிஷார், முஸ்லிம்களிடம் விசேஷச் சலுகை காட்டவில்லை.

1918-ம் வருடமுதல் இந்தியர்களுக்கு ஸ்வராஜ்ய உணர்ச்சியுண்டாயிற்று. கிலாபத் அநீதி முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. இவ்விரண்டும் பிரிட்டிஷாருக்கு விரோதமாக முஸ்லிம்களையும் ஹிந்துக்களையும் தூண்டிவிட்டது. ஒத்துழையா இயக்கம் ஏற்பட்ட காலத்தில் பிரிட்டிஷார் இந்தியா மீது கவலையுடையவர்களாக இருந்தனர். பின்னர், சுயநலங்கருதிய வகுப்பு வாதிகளால், ஒத்துழையாமைக்கும், காங்கிரஸ் மஹா ஜன சபைக்கும் ஆபத்து வந்து விட்டது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை போய் வேற்றுமை உண்டாகி இன்று மண்டைகள் உடைகின்றன. இதுதான் தக்க சமயமென்று ஆரிய ஸமாஜிகள்

முஸ்லிம்களுக்கு விரோதமாக வேலை செய்து கொண்டு போகிறார்கள். ஹிந்து முஸ்லிம் ஒன்றுமையில் நம்பிக்கை கொண்ட ஹிந்துத் தலைவர்கள் மௌனம் சாதிக்கின்றார்கள். என்னே! இந்தியாவின் துர்ரதிஷ்டம்! தலைவர்கள் மௌனம் சாதிப்பதைக்கண்டு ஆரியர்கள் கிப்லாவில் "ஓம்" கொடியை நாட்டிவிடக் கனவு கண்டு மனப்பால் குடிக்கின்றார்கள். இதைக்கண்டு, முஸ்லிம் சிறுமிகள்கூட நகைக்கின்றார்கள். ஒத்துழையாமை காலத்தில் முஸ்லிம்களுக்கு உத்தியோகங்களிலும் இதர விஷயங்களிலும் போதிய செல்வாக்கு ஏற்படுத்த எண்ணிய ஹிந்துத்தலைவர்களும் ஹிந்துப் பத்திரிகைகளும் இப்பொழுது விரோதமாகப் பிரசாரம் செய்தும், சிலர் மௌனம் சாதித்தும் வருகிறார்கள். காங்கிரஸ்வாதியாகிய எனக்குக்கூட தற்கால நிலைமையில் மனது தளர்ச்சியடைகின்றது. இவ்விபரீத நிலைமையில் எங்ஙனம் ஸ்வராஜியசித்தி? ஸ்வாரஜ்யக்கக்ஷியார்களும், இன்று தலைவரெனச் சொல்லிக்கொள்வோர் சிலரும், சர்க்கார் தாஸராக மாறப்போகிறதாக வதந்தி. அவ்வதந்திக்கு ஏற்றாப்போல் பெரிய இடத்துப்பேட்டிகள் அடிக்கடி ஏற்படுகின்றன. முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி ஏற்பட்ட பின்னர்தான் ஹிந்துக்களுடன் சமத்துவமாக நிற்கும் சக்தி முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுவிட்டதென ஹிந்துக்களில் பலருக்கும், ஹிந்துக்களால் நடத்தப்படும் பத்திரிகைகளுக்கும் நன்கு தெரிந்துவிட்டது. அதை எப்படியாவது தொலைத்து முஸ்லிம்களை பழைய வீழ்ச்சியான நிலைமைக்கு கொண்டுபோய் விடவேண்டுமென ஹிந்துப்பத்திரிகைகள் சில கூத்தாடிக் கொண்டு கண்ணீர்விட்டு வேலை செய்கின்றன. ராயல் கமிஷன் முன் சாட்சியம் விட்டு, கூட்டுத் தொகுதியை ஏற்படுத்திவிட வேண்டுமென்பது அவர்களின் நோக்கம். முஸ்லிம்கள் ஹிந்துக்கள் நினைக்கிறபடி அத்துணை முட்டாள் தனமுடையவர்களல்ல. ஹிந்துக்களின் காரியம் ஒருபோதும் ஜயமடையாது. ஹிந்துக்கள் சொல்வது முழுதும் வேதவாக்காகக் கருதும், முஸ்லிம்களில் சிலர் நமது சமூகத்திலும் தற்சமயம் இல்லாமலில்லை. அவர்களால் இஸ்லாமிய சமூகத்துக்கு என்னதீங்குகள் ஏற்படப்போகின்றனவோ கடவுளே அறிவர். என் போன்றவர்கள், முஸ்லிம்களின் முற்போக்கை நாடி தேசத்துக்கு துரோகம் செய்யாத நிலைமையில் வியாசங்கள் எழுதி அனுப்பினுல் அதைஹிந்து பத்திரிகைகள் பிரசுரிப்பதில்லை. எழுதியவர் சிறிது செல்வாக்குடையவராக இருந்தால் வேண்டாவெறுப்பாக, முக்கால் பாகத்தைத் தள்ளிவிட்டு கால்பாகத்தை மாத்திரம் பிரசுரிப்பது வழக்கம். வேலூரிலிருந்து எனது நண்பர் ஒருவர் கூட்டுத்தொகுதியின் தீமைகளை விளக்கியும், ஆங்கிலப் பத்திரிகை

ஒன்றின் அவசியத்தைப்பற்றியும் எழுதி அனுப்பினர். இஸ்லாமியப் பத்திரிகை மாத்திரம் அதைப் பிரசுரித்தது. இதர ஹிந்துப் பத்திரிகைகள் வேண்டாவெறுப்பாக சாரத்தை தள்ளிவிட்டு சக்கையை மாத்திரம்வெளியிட்டன.

இந்நிலைமையில் எனது முஸ்லிம் சகோதர சகோதரிகளாகிய நீங்கள் என் செய்யப் போகிறீர்கள்? இஸ்லாத்துக்கு ஆண்டவனே துணை என்று அவன்மீது பழி சுமத்தப் போகின்றீர்களா ? அல்லது பிரசாரம் செய்யப் போகின்றீர்களா ? செல்வந்தர்களாகிய நீங்கள் உங்கள் பணங்களை யெல்லாம் இஸ்லாமியப் பிரசாரத்திற்கு செலவு செய்யப் போகின்றீர்களா? அல்ல என்போன்ற பரம ஏழைகள் செய்யும் பிரசாரத்தைக்கண்டு நகைக்கப்போகின்றீர்களா? ஆலிம்களும் மௌல்விகளும், அறிஞர்களும், தாங்கள் கற்றுணர்ந்த கல்விகளை முஸ்லிம் பொது ஜனங்களுக்கு உபயோகப் படும்படி செய்யப் பிரியப் படுகிறார்களா ? அல்ல வயிற்றை மாத்திரம் வளர்க்கப் பிரயத்தனம் செய்யப் போகின்றார்களா? சட்டசபை மெம்பர்கள், தங்களுக்கு கிடைத்த பட்டங்களைக்கொண்டு முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பிரயத்தனம் செய்யப் போகிறார்களா ? அல்ல முஸ்லிம்களுக்கு உபயோகமாகப் இருக்கப் போகின்றார்களா ? இஸ்லாமிய உலகம் இதை அறிய ஆவலுடையதாக இருக்கிறது.

அன்பீர் ! நுங்கள் மதத்தின், மீதும், சமுதாயத்தின் மீதும், தேசத்தின் மீதும் பற்றுடையவர்களாக விருங்கள். சமுதாயத்தின் மீது பற்றுடையவர்களாக இருப்பின் இன்றே இஸ்லாமிய பிரசாரம் செய்ய முன்வாருங்கள். ஆங்காங்கு கூட்டங்களைக் கூட்டி இஸ்லாமிய தர்மத்துக்கு விரோதம் செய்யும், ஆரிய ஸமாஜிகளைக் கண்டியுங்கள். கூட்டுத் தொகுதியால் ஏற்படவிருக்கும் தீமைகளைப் பாமரர்களுக்கும், படித்தவர்களுக்கும் உணர்த்துங்கள்.

தனவந்தர்கள் சந்தனக்கூண்டும், பஞ்சாக்கூண்டும், விருத்தசேதனத்துக்கும், விவாஹங்களுக்கும், பல்லாயிரக்கணக்காக ஹராமான முறையில் செலவு செய்கிறதை நிறுத்திவிட்டு சென்னையில் ஒரு ஆங்கிலதினசரியையும், தமிழ்தினசரிப்பத்திரிகை ஒன்றையும் நிறுவுங்கள். பத்திராதிபர்கள் எல்லோரும் ஒன்று சேருங்கள். காதியானி, லாகூரி, ஷியா, ஸன்னி முதலிய பேதங்களுக்காக ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். ஒருவரை ஒருவர் காபிராக்கும் வேலையைவிட்டொழியுங்கள். இதுவே ஏழையும், இஸ்லாமிய ஊழியனுமாகிய எனது பணிவான வேண்டுகோளாகும்.

இறைவனே! எங்கள்மீதும், என்போன்ற பரம ஏழை நிலைமையி

துள்ள நவ்முஸ்லிம் ஒருவரால் நடத்தப்படும் "இஸ்லாம்" என்ற உனது ஜோதியின்மீதும் கிருபைசெய்வாயாக! ஆமீன்.

"வஸ்ஸலாம்"

---

# முஸ்லிம்கள் சிவாஜி மகா ராஜாவை பின்பற்றலாமா?

வேலூர் பாக்கியா துஸ்ஸா லிஹாத்தின் நாஜிராகிய ஜனாப்கான்பகதூர் அல்ஹாஜ் மௌலானா மௌலவி ஜியாவுத்தீன் முகம்மது சாஹிப்.

மத்திய கிலாபத்து கமிட்டியின் காரியதரிசியான ஜனாப் அல் ஹாஜ் மௌலானா ஷௌகத்தலி சாயபு அவர்கள் சில நாட்களுக்கு முன் பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் 'சிவாஜி மஹா ராஜ் மறுஜென்மம் எடுத்து உலகத்தில் பிறந்து வருவாராயின் அவரை நான் பின்பற்றி என் தேச விடுதலைக்குப்போர் புரியத்தயாராக இருக்கிறேன்' என்று கூறியதாக பத்திரிகைகளில் ஒரு செய்தி பிரசுரமாயிருந்தது. மேற்கண்ட வாக்கியத்தில் விபரம் தெரிய வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. (1) சிவாஜி மஹாராஜ் யாருடன் போர் புரிந்து கொண்டிருந்தார். (2) அவர் எதற்காக போர் செய்து கொண்டிருந்தார்: (3) மௌலானா ஹாஜி சாஹிப் யாருடன் யுத்தம் புரிவார் (4) எதற்காக யுத்தம் புரிவார். சிவாஜி மஹாராஜ் செய்துவந்த யுத்தம் அவருடைய மார்க்கப்படி கூடுமா, கூடாதா என்பதைப்பற்றி நாம் கேட்கவில்லை. அது எவ்வாறாயினும் சரி; இஸ்லாமார்க்க சட்டப்படி அவர் செய்துவந்த யுத்தத்திற்கு ஹுக்கும் என்ன?

முஸ்லிம் சக்ரவர்த்தியான காலஞ்சென்ற ஆலாஹஜரத் ஆலங்கீர் பாதுஷா அவர்களுடைய அரசாங்கத்திற்கு மாறாக சிவாஜி மஹாராஜ் கலகத்தை கிளப்பினார் என்றும் ஆலங்கீர் பாத்ஷா அவர்களுடைய அரசாட்சியை ஒழித்து விட்டு தாமே இந்திய சக்ரவர்த்தியாக ஆகிவிடவேண்டுமென்று சிவாஜி நோக்கம் கொண்டிருந்தார் என்றும் அதே நோக்கத்திற்காக முஸ்லிம் அரசர்களுடன் போர் புரிந்தார் என்றும் சரித்திர மூலமாக ஸ்திரப்படுகிறது. அவருடைய நோக்கத்தில் அவர் சிற்சில வெற்றிகள் பெற்றார் எனினும் அவரு

டைய முழு நோக்கமும் கைகூடவில்லை. உண்மையில் அவருடைய நோக்கமானது இந்தியாவில் இஸ்லாம் என்ற நாமமே இல்லாமல் ஒழித்துவிட வேண்டுமென்றே இருந்தது. 4-8-27ல் வெளியான லாஹூர் "பைஸா அக்பாரில்" மிஸ்டர் எ. கே. சூரியா பி. ஏ. பி. எல். வரைந்திருப்பதின் சாரம் கீழ்வருமாறு:—

"சிவாஜியை இந்துக்கள் இப்போது கண்ணியப் படுத்திக் கொண்டாடுவதற்கு அவர் இந்து மதப் பிடிவாதக்காரராகவும் இஸ்லாம் மதத்திற்குக் கடுமையான விரோதியாகவும் இருந்ததேகாரணமாகும். அவர் அரசியல் ஞானநிபுணர் என்று சொல்லிக் கொள்ளப்படினும் அவருக்கிருந்துவந்த மதப் பிடிவாதக் கொள்கையின் காரணமாக அவருடைய அரசியல்ஞானம் மதப்பிடிவாதத்திற்கு ஐக்கியப்பட்டிருந்தது."

மேலும் சிவாஜி மஹராஜ் ஜெயப்பூர் கவர்னராக இருந்த ராஜா ஜேய் சிங்குக்கு ஒரு சமயம் எழுதிய கடித வியாசத்தின் சுருக்கம் கீழ்வருமாறு:—

"என் வாளாயுதமானது, முஸ்லிம்களின் இரத்ததாகம் கொண்டிருக்கிறது. அவ்விதமான என்னுடைய வாளாயுதத்தை வேறு ஒரு முக்கிய காரணத்திற்காக உறையிலிருந்து வெளியில் எடுக்க நேர்ந்திருப்பதைப் பற்றி அனேக ஆயிரம் அப்ஸோஸ் (வருத்தம்) படவேண்டி யிருக்கிறது. எனது வாளாயுதமானது முஸ்லிம்களின் தலைகளின் இடியைப்போல் மேல்விழுந்து நாசமாக்கக்கூடியது. ஒரு கடைசியிலிருந்து மறு கடைசிவரை முஸ்லிம்கள்மீது இரத்த வெள்ளத்தை ஓட்டி அவ்வெள்ளம் முஸ்லிம்களை அடித்துக் கொண்டு போகும்படி செய்யக்கூடியது"

மௌலானா ஷௌகத்தலி அவர்கள் கூறியுள்ள கூற்றால் அவருடைய தலைவரான சிவாஜியைப் பின்பற்றி முஸ்லிம்களுடன் யுத்தம் செய்வார் என்றும் சிவாஜியின் வாளாயுதம் முஸ்லிம்களின்மீது இடியாக விழுந்து இரத்த வெள்ளத்தில் அவர்களை அடித்துக்கொண்டு போகும்படி செய்வார் என்றும் விளங்குகிறது.

சிவாஜியுடைய மதக்கொள்கையைப் பற்றி நமக்கு விவாதமில்லை என்பதை நான் மேலே கூறியுள்ளேன். அத்தன்மைப்போலவே ஜனாப் ஷௌகத்தலி சாஹிபுடைய மதக் கொள்கையைப்பற்றியும் எனக்கு விவாதம்இல்லை. ஆனால் ஜனாப் ஷௌகத்தலி சாயபு கூறியுள்ளபடி அவரை (சிவாஜியை) இந்திய முஸ்லிம்களும் பின்பற்ற இஸ்லா மார்க்கம் அனுமதிக்குமா? அவ்வாறு அவரை பின் தொடர்ந்தவர்கள் முஸ்லிமாயிருக்க முடியுமா என்று பிறக்கும் கேள்விக்கும் உலமாக்கள்

பதில் கூறுவார்கள். ''பழிப்பவர்களின் பழிப்பை பயப்படக்கூடாது'' என்று ஆண்டவன் சொல்லி இருக்கிறான். உள்ளொன்று வைத்துப் புரம் ஒன்று பேசுவது உலமாக்களில் கெட்டவர்களின் சுபாவமாகும்.

பஞ்சாபில் லாலாலஜபதிராய், மத்திய மாகாணத்தில் பண்டித மதன் மோஹன் மாளவியா, அலகபாத்தில் டாக்டர் மூஞ்சே, ஆகியவர்களின் ஸ்வரூபத்தில் சிவாஜி மஹராஜ்உலகத்தில் ஜனனம் எடுத்து விட்டதாக இந்துக்கள் முடிவுசெய்திருப்பதால் மௌலானா கூறிய முதல் நாட்டம் நிறைவேறிவிட்டது. இந்தியாவை விட்டும் முஸ்லிம்களை விரட்ட வேண்டும் என்றும் முடிவாகிவிட்டது.

இந்த நிலைமையில் முஸ்லிம்கள் ஆலோசிக்கவேண்டிய விஷயம் என்ன? நாம் செய்யவேண்டியதென்ன? ஸ்பெயினில் முஸ்லிம்கள் கொலையுண்டதுபோல் இந்தியாவில் நாமும் ஆகிவிடக் கருதுவதா? இப்போது சுகபோகமாக காலம் கழிகிறது. நாளையை சங்கதி நாயன் அறிவான். என்றும் ஏந்துவார் கைக்குழந்தையைப்போல் முஸ்லிம்கள் இந்துக்களுக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டியதுதானா?

தேசிய ராஜ்ய ஞானம்படைத்த மார்க்க சமுக அபிமானிகளான முஸ்லிம் கனவான்கள் இவ்விஷயத்தில் தங்கள் தங்களின் நேரான அபிப்பிராயங்களை வெளியிட்டு முஸ்லிம் பொது ஜனங்களுக்கு உபகாரம் செய்வார்கள் என்று நம்புகின்றேன்.

---

# ஜக்லுல்பாஷாவின் ஜீவிய சரித்திரம்.

ஜக்லுல் பாஷா கண்ணியம் வாய்ந்த பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர். கர்பியா மாகாணத்தில் இயான் என்னும் ஜில்லாவில் 1860-ம் வருஷம் பிறந்தவர். கிராமப் பள்ளிக்கூடத்தில் முதலில் சேர்ந்து கல்விபயின்றபின்னர் கெய்ரோவிலுள்ள அல் அஜர் சர்வகலாசாலையில் சேர்ந்து கல்விபயின்றார். சர்வகலாசாலையில் பட்டம் பெற்றபின் 1880-ம் வருஷத்தில் ''அபீஷியில் ஜர்னல்'' எனும் பத்திரிகையின் ஆசிரியராக நியமிக்கப் பட்டார். அப்பொழுது இவருக்கு வயது 20-தான், அதன்பிறகு இவர் உள்நாட்டு இலாகா மந்திரியிலாக்காவில் உதவி காரியதரிசியாக நியமிக்கப் பட்டார். அதன்பிறகு கைஜா என்னும் மாகாணத்திற்கு போலீஸ் தலைவராக நியமிக்கப் பட்டார்.

இச் சந்தர்ப்பத்தில் கெய்ரோவி லேற்பட்ட அரபிக் கலகத்தில் இவர் கலந்துக் கொண்டார். 1882-ம் வருஷம் பிரிட்டிஷ் துருப்புகள் எகிப்தைக் கைப்பற்றியபோது கலகத்தில் சம்பந்தப்பட்டிருந்த பிரபலஸ்தர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். அச்சமயம் ஜக்லுல் பாஷாவும் கைது செய்யப்பட்டார். சிலநாள் சிறையி லிருந்தபின் பிரிட்டிஷாரால் விடுதலை செய்யப்பட்ட பின் இவர் தாம் வகித்து வந்த கவர்ன்மெண்டு உத்தியோக பதவியை விட்டுவிட நேர்ந்தது. 1884-ம் வருஷம் எகிப்தில் சுதேச விசாரணைக் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்படவே ஜக்லுல் பாஷா வக்கீல் தொழிலை ஆரம்பித்து நடத்தினர். 1892-ம் வருஷத்தின் அப்பீல் கோர்ட்டில் வக்கீலாக கவர்ன்மெண்டாரால் இவர் நியமிக்கப் பட்டார். பிரஞ்சு பாஷையிலும் சட்டப் பரீக்ஷையிலும் தேறி உயர்தரக் கோர்ட்டுகளிலும் சென்றுவாதாடக் கூடுவதற்கான வக்கீல் சன்னதைப் பெற்றார்.

1906-ம் வருஷம் இவர் எகிப்து நாட்டின் கல்வியிலாக்கா மந்திரியாக நியமிக்கப்பட்டார். இவர் தம்முடைய காலத்தில் எகிப்தின் கல்வி முறையை சீர்திருத்தி பல முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்தார். இவருடைய கல்விச் சீர்திருத்தங்களையும் ஏற்பாடுகளையும் புகழாதவர் ஒருவரும் இல்லை. லார்ட் குரோமர் "மாடர்ன் ஈஜிப்ட்" என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அப்புத்தகத்தில் ஜக்லுல் பாஷா எகிப்தில் செய் கல்விச் சீர்திருத்தங்களை யெல்லாம் மிகவும் புகழ்ந்து எழுதி இவருடைய காலத்தில் எகிப்தில் கல்வியபிவிருத்தி அதிகமாக ஏற்பட்டதை குறிப்பிட்டிருக்கிறார்.

கெய்ரோவில் காலஞ்சென்ற கிச்னர் பிரபு இருந்த காலத்தில் மந்திரிச் சபையில் ஏற்பட்டமாறுதல் காரணத்தால் ஜக்லுல் பாஷா அவர்கள் தம்முடைய கல்வி மந்திரி ஸ்தானத்தை ராஜிநாமா செய்ய நேர்ந்தது. ஆனால், ஜக்லுல்பாஷா அவர்கள் எகிப்து சட்டசபையில் வைஸ் பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். எகிப்தின் முன்னேற்ற விஷயங்களிலும் சட்ட சபைகளின் நடவடிக்கைகளிலும் ஜக்லுல்பாஷா அவர்கள் அதிக ஊக்கமும் சிரத்தையும் எடுத்துக் கொண்டார். 1914-ம் வருஷம் ஐரோப்பா யுத்தம் ஆரம்பமாகும் வரையில் ஜக்லுல் பாஷா எகிப்து சட்டசபையின் நடவடிக்கைகளில் அதிக சிரத்தையும் அக்கரையும் காட்டிவந்தார். நாட்டின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான விஷயங்களே இவருடைய கவனத்தையும் கவலையையும் கவர்ந்துவந்தன. ஐரோப்பா யுத்தம் ஆரம்பமானவுடன் எகிப்து சட்டசபையில் நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்ட காரணத்தால் சட்டசபையின் மூலமாக நாட்டின்முன்

னேற்றத்திற்கான விஷயங்கள் ஒன்றையும் ஜக்லுல் பாஷா செய்யமுடியாமற் போய்விட்டது.

1919-ம் வருஷம் ஐரோப்பாயுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானவுடன் கெய்ரோவில் அச்சமயமிருந்த இங்கிலாந்து பிரதிநிதியிடம் சென்று எகிப்திற்கு சுதந்தரம் கொடுக்க வேண்டுமென்ற விஷயத்தைப் பற்றிப் பேசினர். ஜக்லுல் பாஷா எப்பொழுதுமே எகிப்து தேசிய கட்சியினரின் பிரதிநிதியாகவும் தலைவராகவும் இருந்து வந்திருக்கின்றார். இவ்வுரிமையின் காரணமாகத்தான் இவர் இங்கிலாந்து பிரதிநிதியிடம் கண்டு பேசியது. ஜக்லுல் பாஷா இங்கிலாந்து பிரதிநிதியிடம் சென்று எகிப்திற்கு சுதந்தரமும் சுயேச்சையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு தக்க ஆதாரமில்லாமற் போகவில்லை. பிரசிடெண்டுவில்சன் இச்சமயத்தில் "சுயநிர்ணயம்" என்ற கொள்கையை உலகெங்கும் பறைபடித்து வந்தார். துருக்கி ஆட்சியினின்று விடுதலை யடைந்த இதரநாடுகளெல்லாவற்றிற்கும் பிரிடிட்டிஷ் கவர்மெண்டார் பிரசிடெண்ட் வில்சனுடைய கொள்கையையே அடிப்படையாகக்கொண்டு சுதந்தரமும் சுயேச்சையும் கொடுப்பதாக ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டார்கள். இந்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டேதான் ஜக்லுல் பாஷாவும் எகிப்திற்கும் சுயேச்சை கொடுக்கும்படியாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டார்

எகிப்திற்கு சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்ற பிரச்சனையைப் பற்றி இங்கிலாந்திற்கு எகிப்தினுடைய நோக்கங்களையும் கோரிக்கைகளையும் எடுத்துச்சொல்லுவதற்காக தாமும் (ஜக்லுல் பாஷாவும்) தேசீயக்கட்சியைச்சேர்ந்த பிரதிநிதிகள் சிலரும் லண்டனுக்குச் செல்லவும் அங்கு எகிப்தின் கோரிக்கைகளை எடுத்துக்கூறவும் அனுமதி கேட்டார். இவ்வனுமதி மறுக்கப்படவே ஜக்லுல் பாஷாவிற்கு பிரிட்டிஷார் மீது ஆத்திரமும் அதிருப்தியும் அதிகமாகி விட்டது. ஜக்லுல் பாஷாவுடைய மனப்போக்கையும் மனப்பான்மையையும் அங்கீகரியாத பிரிட்டிஷார் இவரையும் இவரைச் சேர்ந்த இன்னும் மூவரையும் கைதுசெய்து மால்டாவிற்கு அனுப்பினர்கள். ஜக்லுல்பாஷா இப்படி மால்டாவிற்கு அனுப்பப்பட்டவுடன் எகிப்தில் ஒரு பெரும் கிளர்ச்சியும் கொதிப்பும் ஏற்பட்டது. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் இதரர்களும் பலர் கொல்லப்பட்டார்கள். நாட்டில் கலகமும், குழப்பமும், அதிகரித்தது. ஜக்லுல் பாஷாவும் அவருடைய சகாக்களும் சில நாட்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டு நாட்டிற்கு வர அனுமதிக்கப்பட்டார்கள்.

எகிப்தியர்களின் கோரிக்கைகளை தெரிந்து கொள்வதற்காக 1919-ம் வருஷம் நவம்பர் மாதம் மில்னர் பிரபுவின் தலைமையின் கீழ் ஒரு கமிஷன் எகிப்திற்கு அனுப்பப்பட்டது. சிலநாட்களுக்குப் பின் ஜக்லுல் பாஷாவும் லண்டனுக்குப் போய் மில்னர் பிரபுவிடம் விஷயங்களைக் கலந்து பேசினர்: மில்னர் பிரபுவுக்கும் ஜக்லுல் பாஷாவுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் சமயத்தில் அத்லிபாஷாவும் லண்டனில் அச்சமயம் இருந்தார். இவர்களுக்குள் நடந்த சம்பாஷணையின் முழுவிவரங்களும் மில்னர் ரிப்போர்ட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. 1921-ம் வருஷ ஆரம்பத்தில் ஜக்லுல் பாஷா லண்டனிலிருந்து எகிப்துக்குத் திரும்பிவந்தார். அத்லிபாஷாவின் தலைமையின் கீழ் இருந்த மந்திரிச் சபை மிகவும் சாந்தமான மிதவாதக் கொள்கையைக் கைபற்றி நடப்பதை ஜக்லுல் பாஷா எதிர்த்து நின்று. அமிதவாதக் கொள்கையை மிகவும் தைரியமாமவும் வீரமாகவும் எடுத்துக் கூறிவந்தார். அத்லி பாஷாவினுடைய மந்திரிச் சபையும் அவருக்குப் பின் வந்த மற்றொருவருடைய மந்திரிப் படையும் ஜக்லுல் பாஷாவின் கட்சியைச் 'சேர்ந்தவர்களால் தோற்கடிக்கப் பட்டுப்போயின. எகிப்து பார்லிமெண்ட் சபையில் பெரும்பான்மையினர் ஜக்லுல் பாஷாவின் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே யிருந்தனர். ஜக்லுல் பாஷாவிற்கு பெரும்பான்மையினர் கொடுத்துவரும் ஆதரவையும் உதவியையும் ஒழிப்பதற்கு பற்பல முயற்சிகளும் சூழ்ச்சிகளும் செய்யப்பட்டன. ஆனால், அவைகள் ஒன்றும் பிரயோஜனப்படாமையால் பார்லிமெண்டு சபையே கலைக்கப்பட வேண்டியதாயிற்று. மறுதேர்தலிலும் ஜக்லுல்பாஷாவின் கட்சியினரே பெரும்பான்மையினராக இருந்தனர். இப்பொழுதும் ஜக்லுல்பாஷாவின் கட்சிக்கு ஆதரவு அதிகமாக இருந்தமையால் ஓட்டுக்கொடுக்கும் வாக்காளர்கள் சம்பந்தப்பட்ட சட்டவிதிகள் மாற்றப்பட்டன. இம்மாறுதலினாலும் ஜக்லுல் பாஷாவின் கட்சி ஆதரவில் குறைவு ஏற்படவில்லை. ஜக்லுல் பாஷா அதிகாரத்திற்கு வந்தால் அவர் "எகிப்து, எகிப்தியர்களுக்கே" என்ற கொள்கையை பலமாக கைக்கொள்ளுவார் என்றும் சூடானின் நிர்வாகத்தை பிரிட்டிஷார் கையாள சிரமமேற்படுமென்றும் பிரிட்டிஷார் கருதினார்கள்.

நாட்டின் நிர்வாகத்திற்கு வேறு வழியில்லாமற்போகவே புவாத் அரசர் ஜக்லுல் பாஷாவை அழைத்து மந்திரிச் சபையை ஸ்தாபிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார். அதேவிதமாக இவர் தம்முடைய மந்திரிச் சபையை அமைத்து நாட்டின் நிர்வாகத்தை வெகு திறமையாக நடத்த ஆரம்பித்தார். ஜக்லுல் பாஷாவின் மந்திரிச்சபை ஸ்தாப

னமான சில நாட்களுக்குள் இம்மந்திரிச் சபைக்கும் பிரிட்டிஷ் அதிகாரத்திற்கும் ஓர் பலத்தபோராட்டம் ஏற்பட்டது.எகிப்திற்கு முழுச் சுதந்தரம் வேண்டுமென ஜக்லுல் பாஷா கோரினர். இது சம்பந்தமாக சில பேச்சு வார்த்தைகளுக்குப் பின் எகிப்திற்கு சுதந்தரம் கொடுப்பதென்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனல் எகிப்தில் பிரிட்டிஷாருடைய ஆதிக்கமும் செல்வாக்கும் நிடூழி நிலைத்திருப் பதற்காக சில நிபந்தனைகள் நியமிக்கப்பட்டன. இந்நிபந்தனைகள் சம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதான மந்திரியாக இருந்த மிஸ்டர் மாக்டொனுல்டைக் கலந்து பேசுவதற்காக ஜக்லுல் பாஷா லண்டன் போயிருந்தார். ஜக்லுல் பாஷாவிற்கு லண்டனில் கிடைத்த பதில் திருப்திகரமாக இருக்கவில்லை. அவர் எகிப்திற்குத் திரும்பி வந்து விட்டார். இங்கிலாந்தில் தொழிற்கட்சி மந்திரி சபையும் வீழ்ச்சி யடைந்தது. பால்டுவின் பிரபுவின் மந்திரிச் சபை அதிகாரத்திற்கு வந்தது. இச்சந்தர்ப்பத்தில் சூடானை நிர்வகித்துவந்த பிரிட்டிஷ் சர்தார் ஸர் லீ ஸ்டாக் கொலைசெய்யப்படவே ஜக்லுல் பாஷாவின் நிலைமை மிகவும் சிக்கலாயிற்று.

பிரிட்டிஷார் எகிப்திற்குக் கொடுத்திருந்த இறுதிக் கடித நிபந்தனைகளை (அல்டி மேடம்) ஜக்லுல் பாஷா ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டதால் ஜக்லுல் பாஷா தம்முடையமந்திரி பதவியை பலவந்தமாக இராஜிநாமா செய்ப நேர்ந்தது. ஜக்லுல் பாஷா மந்திரிப் பதவியை விட்டு விலகிவிட்டாலும் அவர் ராஜீய விஷயங்களை விட்டு சற்றும் விலகவில்லை. ஜக்லுல் பாஷாவுக்குப்பின் ஏற்பட்ட மந்திரிச் சபையும் ஜக்லுல் பாஷாவின் ஆதரவையும் உதவியையும் கொண்டே நடக்கவேண்டியிருந்தது. எகிப்து பார்லிமெண்டு சபைக்கு ஜக்லுல் பாஷா பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டார். எகிப்து சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் அதிக ஆதிக்கமும் செல்வாக்கும் அவருக்கு இருந்து வந்தது. எகிப்தில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருக்கும் ஸர். ஜார்ஜ்லாயிட் எகிப்து சம்பந்தமான முக்கிய பிரசினைகளெதையும் இவரைக் கலந்து பேசாமல் முடிவு செய்வது கிடையாது. எகிப்திற்கு தேசீய உணர்ச்சியும் சுதந்தரதாகத்தையும் உண்டாக்கி வைத்தவர் ஜக்லுல் பாஷாவே யாவர். எகிப்திற்கு சுதந்தரமும் முன்னேற்றமும் ஜக்லுல் பாஷாவால் கிடைத்ததே யொழிய வேறொருவராலுமல்ல வென்பது உண்மையை மிகைப்படுத்திக் கூறியதாகாது.

---

# விவசாயப் பகுதி

## கரும்பு சாகுபடியை அபிவிருத்தி செய்வதெப்படி?

மிஸ்டர். ஏ. பி. ஸி.

மனிதனுடைய வாழ்க்கைக்கு அவசியமாக இருக்கும் உணவுப் பொருள்களில் சர்க்கரை மிகவும் அத்தியாவசியமானதாகிவிட்டது. இதன் உண்மையை அறிய விரும்புவோர் சர்க்கரை உபயோகிப்பதை ஒரு வாரத்திற்கு ஒதுக்கி வைப்பார்களாயின் நாம் மேலே கூறிய தன் உண்மை நன்கு விளங்கும். மனிதனுக்கு அத்தியாவசியமாக இருந்து வரும் சக்கரையின் ஆதி உற்பத்தி ஸ்தானம் ஹிந்துஸ்தான மெனக் கூறின் அநேகருக்கு ஆச்சரியகரமாக இருக்கும். ஆனால் கரும்பின் ஆதி உற்பத்தி ஸ்தானம் இந்த நாடேயாகும். ஷக்கர் என்றும், ஷுகர் என்றும், ஸுகர் என்றும், ஜுகர் என்றும் சர்க்கரைக்கு பற்பல பாஷைகளில் பற்பல பெயர்கள் வழங்குகின்றன. இப்பெயர்களெல்லாம் ஸர்காரா என்ற சமஸ்கிருத பெயரினின்றும் உற்பத்தியானவையே யாகும். ஆதிகாலத்தில் கிரேக்கிய நாட்டில் சர்க்கரையை இந்தியாவின் 'தித்திப்பு உப்பு' என்று அழைத்து வந்தார்கள். இந்தியாவிலிருந்து கரும்பு ஈரான், (பர்ஷியா) அரேபியா, எகிப்து, ஸிஸிலி, ஸ்பெயின், முதலிய நாடுகளுக்கு முதல் முதலாகக் கொண்டு போகப்பட்டது. அதன் பிறகேதான் இதர ஐரோப்பிய நாடுகளாகிய போர்துகல், பிரான்ஸ், ஹாலண்டு முதலிய நாடுகளுக்குக் கரும்பு பரவிற்று. ஐரோப்பா கண்டத்திற்கு, இந்தியாவிலிருந்து கரும்பைக்கொண்டு போனவர்கள் அரபியர்களாவார்கள். ஐரோப்பியர்களுக்கு அரபியர்கள் அநேக பொருள்களைக் கொண்டுபோய்க் கொடுத்ததில் கரும்பும் ஒன்று என்பதாக சரித்திரக் காரர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. ஆசியாகண்டத்தின் இதர நாடுகளாகிய சைனு, ஜப்பான், ஸயாம் முதலிய விடங்களுக்கும் கரும்பு இந்தியாவி லிருந்தேதான் கொண்டு போகப்பட்டது. அமெரிக்காவுக்கு கரும்பு ஐரோப்பியர்களால் ஐரோப்பாவிலிருந்து கொண்டுபோகப்பட்டது.

கரும்பு உற்பத்திக்கு மட்டுமல்லாமல் சர்க்கரை வெல்லம் தயார் செய்யும் தொழிலுக்கும் இந்தியா தான்பெயர் போனது. சீனதேசத்து அரசர் டியேட்டுஸொங்கு என்பவர் (627—650 கி. பி.) சர்க்கரை

செய்யும் தொழிலைக் கற்றுவரும்படியாக தம்முடைய ஆட்களை பீஹாருக்கு அனுப்பி யிருந்ததாகவும், உயர்ந்தவிதமான சர்க்கரை செய்யும் தொழிலில் அரபியர்களும், எகிப்தியர்களும் பெரும் நிபுணர்களாக இருந்ததாகவும், உயர்ந்த தினுசு சர்க்கரைத் தொழில் செய்வதை சீனர்கள் எகிப்தியர்களிட மிருந்து கற்றுக் கொண்டதாகவும் அத்தாட்சிகள் காணப்படுகின்றன. இத்தகைய நாடாகிய இந்தியாவின் தற்கால நிலைமை யென்ன? இந்தியாவின் தேவைக்கான அளவு வெல்லமும் சர்க்கரையும் நம் நாட்டில் தற்சமயம் தயார் செய்யப்படுவது கிடையாது. நம் நாட்டிலிருந்து கரும்பைக் கொண்டுபோன இதர நாட்டினர்களிடமிருந்து நாம் தற்சமயம் சர்க்கரையை இறக்குமதி செய்யவேண்டிய கதி ஏற்பட்டிருக்கின்றது. நம் நாட்டில் சென்ற 1924-25வருஷத்தில் 67,398டன்கள் சர்க்கரையும்,1925-26வருஷத்தில்90,274 டன்கள் சர்க்கரையும் தயார்செய்யப்பட் டிருக்கின்றன. ஆனால் இதர நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவைக்கண்டு இந்தியாவின் முன்னேற்றத்தில் உண்மையான ஊக்கங்கொண்டவரும் கலங்காதிருக்கமாட்டாது. சென்ற வருஷத்தில் (1926-27) நம் நாட்டில் கரும்பு சர்க்கரை 648,000 டன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த கரும்பு சர்க்கரையைத்தவிர பீட்ரூட்கிழங்குச் சர்க்கரையும் ஏராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றது. 1925-26 ல் 43,000 டன்கள் பீட்ரூட் சர்க்கரையும், 1926-27 வருஷத்தில் 175,000 டன்கள் பீட்ரூட் சர்க்கரையும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதர நாடுகளுக்கு கரும்பைக் கொடுத்த நம்நாடு, சர்க்கரைத் தொழிலை இதரர்களுக்குபோதித்த நம்நாடு, தன்னுடைய குடிகள் பசியின் கொடுமையால் வாடிவதங்கி உயிரைவிடவும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து குடிகளுள் துக்கமும், கஷ்டமும் அளவிலாது வளரவும், நம்நாடு இதர நாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்கின்றது.

இந்தியா எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக இறக்குமதி செய்கின்றதோ அந்த அளவிற்கு இந்தியா தன்னுடைய செல்வத்தை ஏற்றுமதிசெய்ய நேருகின்றது. இப்படி ஏற்றுமதித்தொகை பிரதி வருஷமும் அதிகரித்து வருகையில் இந்தியாவின் கதி என்னவாகும் என்பதைப்பற்றி விவரிக்கவும் வேண்டுமோ? இவ்வளவு ஏராளமாக இறக்குமதி செய்வதைத் தடுக்கவேண்டுமானல் நம்நாட்டில் கரும்பு சாகுபடியாகும் நிலத்தின் விஸ்தீரணத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். உயர்ந்ததினுசானவும், திடமானவும் கரும்புகளைப் பயிர் செய்யவேண்டும். ஒரு கரும்பிலிருந்து இப்பொழுது கிடைக்கும்

சாற்றின் அளவைவிட அதிக சாறுகிடைக்கும்படிச் செய்யவேண்டும். சர்க்கரை உற்பத்தியிலும், கரும்பு சாகுபடியிலும் காரிய நிர்வாகம் குறைந்தசெலவி லாகும்படிச் செய்யவேண்டும். (தொடரும்)

## வருக, வருக, "இஸ்லாமே" வருக!

(ஒரு "முஸ்லிம் நேசன்" எழுதுகிறார்)

என் சிரிய செந்தமிழ் நாட்டுத் தமிழ் முஸ்லிம் சகோதரர்காள்! நமது தமிழ்நாட்டில் வெளியாகிப் பிரசாரம் செய்துவரும் எல்லா முஸ்லிம் பத்திரிகைகளையும் வாசித்துப் பார்க்கக்கூடிய சமயம் இவ்வடியேனுக்கு உண்டு. ஒவ்வொரு பத்திரிகையும் அதனதன் கொள்கைக்கேற்ப ஊழியத்தை ஆற்றி வருகின்றதே யன்றிப் பொதுவாக எல்லா மக்களுக்கும் உபயோகப்படும் வண்ணம் சமத்துவத்துடனும் தாராள நோக்கத்துடனும் அவைகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. "இஸ்லாம்" என்னும் உயரியமதத்தின் பரந்த ஞானத்தையும் அதன் தெய்வத்திருமறையாகிய குர்ஆன் ஷரீபின் அரியபோதனைகளையும், அதை இவ்வுலக மக்களுக்கு அறிவுறுத்த வேண்டியே தோன்றின மஹான் எம்பெருமானர் நபிகள் திலகம் முஹம்மதுநபி (ஸல்) அவர்களின் திருவாக்கியங்களையும், இஸ்லாத்தின் பண்டைச் சரிதைகளையும், அச்சிரிய மார்க்கத்தின் முற்கால தற்கால நிலைமைகளையும், தற்காலம் முஸ்லிம்களென்போர் அடைந்த நிலைமைக்கேற்ற காரணங்களையும், அவைகளை ஒழிக்கும்முறைகளையும், முஸ்லிம் மக்களுள் புகுந்து கிடக்கும் குறைகளையும், இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் இன்னோரன்ன பிறசிறந்த விஷயங்களையும் முஸ்லிம்களுக்கும் அஃதல்லா தார்க்கும் ஒழுங்கான முறையில் அபிமான மென்னும் பேயால் தீண்டப்படாமல் உண்மை ஆராய்ச்சி யென்னும் நேர்மையை துணைகொண்டு கருமங்களை ஆற்றிவரும் ஒரு சிறந்த சஞ்சிகை இத்தமிழ் நாட்டுக்கு அத்தியாவசியமாக இருந்து வந்தது. அக்குறையைத் தீர்க்கவேண்டியே "இஸ்லாம்" என்னும் பொதுப் பெயருடன் இச் சஞ்சிகை உதயமாயிற்றென்று நான் கொள்கிறேன். ஹிந்து மதம், கிறிஸ்து மார்க்கம், இஸ்லாம் ஆகிய மூன்று பெரிய மதங்களையும் நூற்களால் மட்டுமே யன்றி அனுபவத்தாலும் ஆராய்ந்து ஆராய்ந்து

இறுதியில் இஸ்லாமே சிறந்த, நேரிய, ஆண்டவனுக்குகந்த நெறி எனக்கருதி, அதையே மேற்கொண்டு, பின்னர் சமத்துவமான ஆராய்ச்சியால் பல திறப்பட்ட பன்மைகளில் ஒருமைபையே கண்டு எல்லா மதத்தாரும் பல பெயர்களால் வழிபட்டு வரும் இறைவன் ஏகதெய்வமாகிய உலகத்துக்கெல்லாம் ரக்ஷகனான அந்த ஒரே ஆண்டகை என்னும் மெய்யுணர்வு பெற்று அல்லாஹூத்த ஆலாவின் தொண்டராகச் சமூகசசவை செய்துவரும் நமது மௌலானா அபுல்ஹூதா சாஹிப் அவர்கள் இந்த "இஸ்லாம்" சஞ்சிகைக்கு ஆசிரியப்பதவியை ஏற்றுக்கொண்டதொன்றே நான் மேற்கூறிய கூற்றுக்குத்தக்க ஆதாரமாகும்.

இத்தகையஇறைவன் காரியத்தில் ஈடுபட்ட அந்த ஆசிரியருக்கும் அவரது கூட்டத்தாருக்கும் எனது பணிவான சில அபிப்பிராயங்களை அறிவிக்க விருப்பங்கொண்டு அடியிற்காணும் சில வரிகளை எழுதமுன் வந்தேன். முஸ்லிம் சமூகத்தாருள் ஸுன்னிகளென்றும், ஷியாக்களென்றும், வஹாபிகளென்றும், காதியானிகளென்றும் மற்றும் என்னென்னவோ பெயர்களாலும் பல கக்ஷிகளை உண்டாக்கிக் கொண்டு ஒருவரையொருவர் காபிர் என்றும் இன்னும் பலவாறாகவும் இகழ்ந்துகொண்டும் முஸ்லிம் சமூகத்தாருள்ளேயே ஒற்றுமை நிலைக்காத வண்ணம் அறிஞர்களென்போர் எழுதியும் பேசியும் வருகின்றனர். உலக சகோதரத்துவத்திற்கும் சமத்துவத்துக்கும் பிறப்பிடமாகவுள்ள இஸ்லாத்திலும் ஒற்றுமை குறையும்படி செய்கிறவர்கள் சமூகத் தலைவர்களென்பவரே யாவர். இறுதிவேதமென்று கூறப்படுகின்ற திருக்குர் ஆனையும், ஆண்டவனின் திருத்தூதரான முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் உண்மையாகவும் மெய்யன்புடனும் பின்பற்றி அனுஷ்டித்து வருகின்றவர்களனைவரும் அவரவரும் எந்த வகையான வேடந்தாங்கியிருந்த போதிலும் உண்மை முஸ்லிம்களே என்றும், ஒரே சகோதர கோஷ்டியைச் சேர்ந்தவர்களே என்றும் கருதப்படல் வேண்டும். அத்தகைய உணர்ச்சி முஸ்லிம்களுக்கு உண்டாகும் வண்ணம் "இஸ்லாம்" உழைக்குமென்றே நான் நம்புகிறேன்.

தற்சமயம் நம்தாய் நாட்டின் முன்னேற்றத்துக்கு ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை அத்தியாவசியமாதலின் அத்தகைய ஒற்றுமை நல்ல அஸ்திவாரத்துடன் நிலைப்பதற்கு நம் "இஸ்லாம்" பத்திரிகையேனும் அடிகோலுமென்றே நினைக்கிறேன். பிறமதத்தைப் பற்றிச் சமரஸ முறையில் ஆராய்ச்சி செய்வதே ஒற்றுமைக்கு ஹேதுவாகும். இஸ்லாத்தில் அல்லாஹ்வானவன் ரப்பில் ஆலமீன் எனஅழைக்கப்படுகிறான் ஆதலின் இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் அவனது அடியார்களே

யாவர். இதுதான் இஸ்லாத்தின் கொள்கையுமாகும். பிற்காலத்தில் இந்தியாவின் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு பாதகமேற்படாத வண்ணமேஇஸ்லாமும் முற்காலத்தில் இறைவனால் நிர்மாணிக்கப்பட்டதே யன்றி ஒரு மதத்தாருடன் மற்றொரு மதத்தினர் போரிட்டுக்கொண்டு மண்டையை உடைத்துக் கொள்வதற்கன்று. "எவன் ஒருவனுடைய நாவினாலும் கையினாலும் மானிட சமூகமே நன்மையை யடைகிறதோ அவனே இறைவன் முன் நல்லடியானவன்" என்று நபிகள் நாயகம வர்களே திருவாய் மொழிந்தருளியிருக்கிறார்கள். ஆதலின் நமது "இஸ்லாமும்" தன் பெயருக்கேற்ப மானிடகோடிகள் யாவர்க்குமே சாந்தியும் சமாதானமும் உண்டாகும் வண்ணம் உழைத்து உலகத்தில் உண்மையான சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் நிலைநிறுத்தப் பாடுபடுமென்று உறுதியாக நம்புகிறேன். சாதாரண பாமர ஜனங்களைத் தூண்டிவிட்டுத் தங்கள் நூல்களையோ சஞ்சிகைகளையோ விற்று செல்வந் திரட்டுவது உலகநன்மைக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் சமூகத் தலைவர்களுக்கு அழகாகாது. ஆதலின் யார் கோபித்தபோதிலும், யார் ஆதரியாத போதிலும், மலையே இடிந்து விழுந்தாலும், தாம் நேரிய நெறிநின்று தம் கொள்கைகளை மக்களிடையே புகுத்துவதே இறைவனது உண்மை அடியார்களின் இலக்ஷணமாகும். அந்தச் சீரிய நெறியை நமது "இஸ்லாமும்" பின்பற்றி யொழுகி உலகில் சமாதானத்தை நிலைநிற்கச் செய்யுமென்று எதிர்பார்க்கிறேன். முஸ்லிம் சமூகத்துக்கும் பாரத சமுதாயத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் என்னால் இயன்ற ஊழியத்தை இச்சஞ்சிகை வாயிலாகச் செய்து வருவேன். ஆசிரியரும் இவ்வெளியேனுடைய ஊழியத்தை அன்புடன் ஏற்றுக்கொள்வாரென்றே நம்புகிறேன்.

இப்போது நமது தாய்நாட்டில் ஹிந்து முஸ்லிம் சமூகம் சம்பந்தப்பட்டவரை பொதுத் தேர்தல், கலப்பு விவாகம், "சத்தியார்த்தப்பிரகாசம்" இவைகளால் ஏற்பட்ட கிளர்ச்சி முதலிய சில அவசியமான விஷயங்களைப்பற்றி இருந்து வரும் நிலைமையை என்சமரச நோக்கத்துக் கேற்றவாறு நடுநிலைமையான ஆராய்ச்சியின் மூலம் இனி வரும் சஞ்சிகைகளில் விவரமாக எழுதிவருவேன். ஆசிரியரவர்கள் பொதுவாக இந்திய சமூகத்துக்கும் சிறப்பாக முஸ்லிம் சமூகத்துக்கும் தாராள நோக்கத்துடன் உழைத்து வருவார்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது தோன்றியுள்ள இந்த "இஸ்லாம்" ஊழியத்தாலேனும் முஸ்லிம்களுக்குள் சகோதரத்துவமும் இந்தியர்களுள் ஒற்றுமையும் நிலவுமானால் அதுவே இறைவனுக்குகந்த சீரிய

பணியாகும். இத்தகைய விருப்பங்கள் ஈடேற வேண்டுமென்னும் ஆர்வமே லீட்டால்இன்று "இஸ்லாம்" சஞ்சிகையைப் பணிவுடன் வரவேற்கின்றேன்.

---

# கைத்தொழில் பகுதி

## முஸ்லிம்களும் நெசவுத்தொழிலும்

மிஸ்டர். ஏ. பி. ஸி.

இந்தியாவின் பெரும்பான்மை கைத்தொழில்களெல்லாம் நசித்துப் போனதன் காரணமாக முஸ்லிம்களிடம் பிரத்தியேகமாக இருந்த சில கைத்தொழில்களுங்கூட ஒழிய ஆரம்பித்தன. கட்டில்களுக்குப் போடும் நவார் (நாடா) பிரத்தியேகமாக முஸ்லிம் ஸ்திரீகள் தங்கள் வீடுகளுக்குள் பின்னி வந்தார்கள், ஸ்பிரிங்காட் (இரும்புக் கம்பிகளால் முடைந்த) என்ற இரும்புக் கட்டில்கள் வந்தவுடன் நாடா கட்டில்களைக் கவனிப்பாரெவரும் கிடையாது. நாடாபின்னி ஜீவனம் பண்ணிவந்த ஏழை முஸ்லிம் சகோதரிகள் முன்னிலும் அதிகமாக வறுமைக்குள்ளாயினர். பல ஊர்களிலும் முஸ்லிம்கள் தற்சமயம் கைத்தறிவுநெசவு நடத்தி வருகிறார்கள். காலை முதல் சாயந்திரம் வரை நெற்றிய வியர்வை நிலத்தில் விழ வேலை செய்கிறார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தும் என்ன பயன்? வறுமை நீங்கின பாடில்லை. கஷ்டம் குறைந்த தாகக்காணோம்.

ஆனால் இவர்களுடைய உழைப்பால் உண்டான கைலிகளையும் இதர ஜவுளிகளையும் வாங்கி வியாபாரஞ் செய்யும் ஏஜெண்டுகளும், கமிஷன் வியாபாரிகளும் எலெக்டிரிக் (மின்சார) விசிறியின்கீழ் சுகங்களை அனுபவிப்பதும் மோடார்வண்டிகளில் செல்லுவதுமாக இருக்கிறார்கள். இதன் ரகசியமென்ன? நெற்றி வியர்வை நிலத்தில் விழ கஷ்டப்பட்டுழைக்கும் சகோதரர்களே! உங்களுடைய நிலைமையை நீங்கள் எப்பொழுதேனும் யோசனை செய்து பார்த்ததுண்டா? உங்களுடைய பரிதாப நிலைமையிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கெப்பொழுதேனும் உதித்ததுண்டா? நீங்கள் இப்பொழுது கஷ்டப்பட்டுழைப்பது போலல்லாமல், உங்கள் குழந்தை

களும் சந்ததியார்களும் சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்தை நீங்கள் எப்பொழுதேனும் எண்ணியதுண்டா?

நீங்கள் உங்களுடைய நெசவுக்கு வேண்டிய நூல், சாயம் முதலியவைகளை வாங்கும்போது கடைக்காரன் உங்களிடமிருந்து எவ்வளவு இலாபம் சம்பாதித்து கொள்ளுகிருனென்பது உங்களுடைய கவனத்திற்கு எப்பொழுதேனும் வந்ததுண்டா? நீங்கள் தயாரான சரக்கு விற்கும்போது உங்களிடம் வாங்கும் வியாபாரியோ, அல்லது கமிஷன் ஏஜெண்டோ தான் விற்கும் விலைக்கு எவ்வளவு குறைவாக உங்களிடம் வாங்குகிருனென்பது உங்களுக்குத் தெரியுமா? இத்துர்ப்பாக்கியமான நிலைமையிலிருந்து நீங்கள் விடுவித்துக்கொள்ள விரும்பினுல் உண்மையாகவே கவலையும் அக்கரையும் கொண்டால் உங்களுக்கு நன்மையளிக்கக் கூடிய மார்க்கங்கள் பல இருக்கின்றன. அவைகளைத் தெரிந்துக்கொண்டு உங்கள் நிலைமையை நீங்கள் சீர்படுத்திக் கொள்ள கவலை கொள்ளவேண்டாமா? எத்தனை நாளைக்கு இப்படி கஷ்டப்படுவதாக உங்களுக்கு எண்ணம். சுகம்பெற விருப்பமில்லையா? சுகம் பெற்று சௌக்கியமாக வாழவிரும்புவது நியாயமான ஆசையாகும். இதற்கு வழிதேடி நன்மை பெற்றுவாழ விரும்பின் அடுத்த சஞ்சிகையைக் கவனியுங்கள்.

---

எறும்பு ஒன்று தன் கனத்தை விட மூவாயிரம் மடங்கு கனமுள்ள பொருளையும் வாயில் கவ்விக்கொண்டு போகக்கூடிய சக்தியுடையதாம்.

*        *        *        *

நடுத்தர வயதுள்ள மனிதனின் வயிற்றிலுள்ள காற்றுப்பைகள் அனைத்தையும் விரித்தால் அவை நூறு சதுர கெஜங்களிருக்குமாம்.

*        *        *        *

அயோவா என்ற இடத்திலுள்ள ஆலையொன்றில் தானியத் தட்டைகளைக் கொண்டு காகிதம் செய்யப்படுகின்றதாம். இனி உலகத்திலுள்ள பத்திரிகாலயங்களில் தானியத் தட்டைகளைக் கொண்டு செய்யப்பட்ட காகிதங்களை உபயோகிக்கப் படலாமாம்.

*        *        *        *

சிறுமிகளைவிட சிறுவர்கள் வெகு சீக்கிரத்திலும் வெகு நேர்த்தியாயும் சமையல் வேலை கற்றுக் கொள்வதாக லண்டன் கவுண்டி சபையில் ஒரு பெண் பாடசாலையின் ஆசிரியர் தமது அனுபவத்தை விளக்கினர்.

# "இஸ்லாம்"

## வருஷ சந்தா விவரம்

**இந்தியா, பர்மா, இலங்கை முதலிய உள்நாடுகளுக்கு**

முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் சங்கங்களுக்கும் ரூ. 5—0—0

முஸ்லிம்களல்லாத நண்பர்களுக்கும் முஸ்லிம்களல்லாதார் சங்கங்களுக்கும் .... .... 4—0—0

மாணவர்களுக்கு (முஸ்லிம்களானுலுஞ் சரி, முஸ்லிம்களல்லாதாரானுலுஞ் சரி) .... 3—8—0

**பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு**

முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்கள் சங்கங்களுக்கும் 6—0—0

முஸ்லிம்கள்ல்லாத நண்பர்களுக்கும் ,, 5—0—0

மாணவர்களுக்கு (முஸ்லிம்களானுலுஞ் சரி, முஸ்லிம்களல்லாதா ராளுலுஞ் சரி) ... 4—8—0

குறிப்பு—ஒரு வருடத்திற்குக் குறைந்து சந்தா பதிவுசெய்து கொள்ளப்படமாட்டாது. மாணவர்கள் தங்கள் தங்கள் உபாத்தியார்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் வாங்கி யனுப்பவேண்டும். தனிப்பிரதி ஒன்றுக்கு தபால் சார்ஜ் உள்பட விலை ரூ. 0—9—0.

### நிருப நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்

விஷயதானம் செய்ய விரும்பும் சகோதரர்கள் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மைபால் எழுதியனுப்பவேண்டும். எந்த மாதத்தில் பிரசுரிக்கப் படவேண்டுமோ அதற்கு முந்தின மாதம் 25-ந் தேதிக்குள் வியாசங்கள் கிடைக்கும்படியாக அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | | ரூ. | 12—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 7—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 4—0—0 |

நீண்டகாலம் விளம்பரம் செய்ய விரும்புவோர்களுக்கு கட்டணத்தில் சகாயஞ்செய்து கொடுக்கப்படும். அவர்கள் தயவு செய்து மானேஜருக்கு எழுதி விவரங்கள் அறியலாம்.

மானேஜர் "இஸ்லாம்" ஆபீஸ்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு,
ஜார்ஜ் டவுன் - சென்னை.

SCANNED

நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் தேச விடு தலைக்காகவும் உழைக்கும்

# "தமிழ் நாடு"

பத்திரிகையை ஒவ்வொரு தமிழரும் ஆதரித்தல் கடமையாகும்.

மானேஜிங் டைரக்டர்: டாக்டர் பி. வரதராஜுலு.

**தினப்பதிப்பு சந்தா.**

உள்நாடு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1 வருஷம் | 20 | 0 |
| 6 மாதம் | 10 | 0 |
| 3 மாதம் | 5 | 0 |
| 1 மாதம் ... | 1 | 12 |
| சென்னைக்கு 1-மாதம் | 1 | 8 |

தனிப்பிரதி 1 அணா.

வெளிநாடு.

| | | |
|---|---|---|
| 1 வருஷம் | 28 | 0 |
| 6 மாதம் | 14 | 0 |
| 3 மாதம் | 7 | 0 |
| 1 மாதம் | 2 | 8 |

தனிப்பிரதி $1\frac{1}{2}$ அணா.

**வாரப்பதிப்பு சந்தா.**

உள்நாடு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1 வருஷம் | 5 | 0 |
| 6 மாதம் | 3 | 0 |
| 3 மாதம் | 1 | 10 |

தனிப்பிரதி $1\frac{1}{2}$ அணா.

வெளிநாடு.

| | | |
|---|---|---|
| 1 வருஷம் | 6 | 0 |
| 6 மாதம் | 3 | 8 |
| 3 மாதம் | 2 | 0 |

தனிப்பிரதி $2\frac{1}{2}$ அணா.

# தேவை

"தமிழ் நாடு" பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஏஜெண்டு நியமிக்காத இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை. உடனே முழு விபரங்களுக்கும் எழுதவும்.

மானேஜர்:—

"தமிழ் நாடு" ஆபீஸ்,

31, பிராட்வே, மதராஸ்.

Printed by the Kesari Printing Works, and Published by M. A. Abul-Hudha at 225, Angappa Naick Street, Madras.